# பட்டப் படிப்புகளும் பட்டயப் படிப்புகளும்
# Degree & Diploma Courses

ஆசிரியர்: பேராசிரியர் ஆபிதீன்,
டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரி,
இளையாங்குடி.



**Nellai Eruvadi Educational Association (NEEA)**

# பட்டப் படிப்புகளும் பட்டயப் படிப்புகளும்

# Degree & Diploma Courses

ஆசிரியர்: பேராசிரியர் ஆபிதீன்,
டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரி,
இளையாங்குடி.

வெளியீடு:

**Nellai Ervuadi Educational Association (NEEA)**

- ஆசிரியர் உரை ..... 6
- கடலும் கப்பலும், கப்பல்துறை பயிற்சி ..... 7
- கடல் சார்ந்த படிப்புகள் ..... 8
- மகத்தான மரைன் இன்ஜினியரிங் ..... 10
- மீன்வள அறிவியல் படிப்பு ..... 11
- கால்நடை மருத்துவப்படிப்பு ..... 11
- டெய்ரி டெக்னாலஜி - பால்பண்ணை படிப்பு ..... 13
- நீங்களும் விமானியாகலாம் ..... 14
- ஏர்ஹோஸ்டஸ் ஆவது எப்படி? ..... 15
- ஏரொநாடிக்கல் இன்ஜினியரிங் படிக்கலாம் ..... 16
- விஷுவல் கம்யூனிகேஷன் ..... 16
- இன்டீரியர் டெக்கரேஷன் படியுங்கள் ..... 17
- தீயணைப்புத் துறை ..... 18
- நீங்களும் சிற்பியாகலாம் ..... 19
- ஜம்மென்றிருக்க ஜெம்மாலஜி படியுங்கள் ..... 19
- கற்போம் கண்ணாடித் தொழில் ..... 20
- அச்சுத்துறையில் அழகான வேலைவாய்ப்பு ..... 21
- படிக்கலாம் டிடர்ஜென்ட்ஸ் டெக்னாலஜி ..... 22
- இனிதாக வாழ... இன்சூரன்ஸ் துறை ..... 23
- இதழியல் காட்டும் இனிய வேலை வாய்ப்பு ..... 23
- ஆடிட்டர் ஆவது எப்படி? ..... 24
- புள்ளியியல் படியுங்கள்.. பெரும்புள்ளி ஆகுங்கள் ..... 25
- தொழிலாளர் நிர்வாகப் படிப்புகள் ..... 26
- கூட்டுறவு பயிற்சி பெறலாம் ..... 26
- வெளிநாட்டு வணிகம் படிக்கலாம் ..... 27
- பொறுப்பான பதவி பெற பொருளாதாரம் படிக்கலாம் ..... 28
- சமூக சேவகர்களாக வேண்டுமா? ..... 29

- வேளாண் மற்றும் வேளாண் தொழில் துறைகள் ........ 30
- நீங்கள் கிராம மேம்பாட்டு ஆர்வலரா இதோ நவீன படிப்பு ........ 30
- படிப்போம் பயோகெமிஸ்ட்ரி ........ 32
- பயோபிஸிக்ஸ் மற்றும் கிரிஸ்டலோகிரா..பி ........ 32
- விரைவான வேலை வாய்ப்புக்கு வெற்றிடக் கல்வி ........ 33
- ஆட்டோ மெட்ரியில் அரிய வாய்ப்பு ........ 35
- சூரியனை சுற்றி சிறப்பான வாய்ப்புகள் ........ 36
- சணல் தொழில் நுட்பம் ........ 37
- லேப் டெக்னாலஜி படிக்கலாம் ........ 38
- கேட்டரிங் டெக்னாலஜி ........ 39
- அதிக பயனுள்ள பயோடெக்னாலஜி ........ 40
- அர்மேனியாவில் டாக்டர் படிப்பு ........ 41
- அஞ்சல் வழியில் ரயில்வே இன்ஜினியரிங் ........ 44
- அதிகம் அறியாத பொறியியல் படிப்புகள் ........ 45
- துல்லியமான வேலை வாய்ப்புக்கு தொல்லியல் படியுங்கள் ........ 48
- மானுடவியல் (Anthropology) ........ 49
- கிரிமினாலஜி ........ 50
- நுட்பமான ..நுண்கலைப் படிப்புகள் ........ 50
- காசு கொட்டும் காலணி படிப்பு ........ 51
- உயர்வு தரும் உளவியல் படிப்பு ........ 52
- பயணம் மற்றும் சுற்றுலா ........ 53
- படிக்கலாம் நிதி நிர்வாகம் ........ 54
- பன்மொழி புலவராகலாமே ........ 55
- ஆசிரியர் ஆகலாமே ........ 56
- காது கேளாதவர்களுக்கு கற்பிப்பதற்கான ஆசிரியர் பயிற்சி ........ 57
- மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான ஆசிரியர் பயிற்சி ........ 58
- அற்புதமான அழகியல் படிப்பு ........ 59

- மின் வேதியியல் படிக்கலாம் ........ 60
- சட்டம் உன் கையில் ........ 61
- தீயணைப்பில் பொறியியல் கல்வி ........ 61
- ஐஐடி யில் சேர வேண்டுமா? ........ 62
- விளையாடி படியுங்கள் ........ 62
- வனவியல் கல்லூரி ........ 63
- விளையாட்டுப் பள்ளிகள் விடுதிகளில் சேர்ந்தும் படிக்கலாம் ........ 63
- சுற்று வட்டார மாவட்ட விளையாட்டு அலுவலகங்களின் முகவரி ........ 64
- மிலிட்டரி சயின்ஸ் பாதுகாப்புத் துறை படிப்புகள் ........ 65
- படிக்கலாம் நூலக அறிவியல் ........ 66
- ஆளை அசத்தும் ஆடை வடிவமைப்புக் கல்வி ........ 66
- தோள் கொடுக்கும் தோள் துறை ........ 68
- அழைக்கிறது கைத்தறி தொழில் நுட்பம் ........ 69
- வரைமுறையற்ற எதிர்காலத்திற்கு வடிவமைப்பாளர் ஆகலாமே ........ 70
- எளிதில் வேலை வாய்ப்பு இணைய காவலர்கள் ........ 71
- அற்புதமான வாய்ப்புக்கு அனிமேஷன் படிக்கலாம் ........ 72
- காட்டிலாக்கா அதிகாரியாகுங்கள் ........ 73
- மண்ணிலிருந்தே விண்ணைப் படிக்கலாம் ........ 73
- ரயில் போக்குவரத்துக் கல்வி நிறுவனம் ........ 75
- கம்பெனி செகரெட்டரி ஆக வேண்டுமா? ........ 75
- தொலைத் தொடர்பு மேலாண்மை படிப்பு ........ 76
- பேக்கிங் டெக்னாலஜி ........ 77
- தமிழ் படித்தாலும் தலை நிமிரலாம் ........ 78
- செவிலியர் படிப்பு செழுமையான வாய்ப்பு ........ 78
- அருமையான வாய்ப்பு தரும் பிளாஸ்டிக் தொழில் நுட்பம் படிக்கலாம் ........ 79
- விமான துறையில் டிராஃபிக் அசிஸ்டென்ட்ஸ் ........ 80
- பாலிடெக்னிக்குகளும் பயிற்றுவிக்கும் முக்கிய பாடங்களும் ........ 81

- கல்லூரி பேராசிரியர் ஆக வேண்டுமா? ........ 82
- ஃபார்மஸி கல்வி பயின்று மருந்தாளுநர்கள் ஆகுங்கள் ........ 84
- நூலகம் தகவல் அறிவியல் ........ 85
- நீங்களும் ஐ.ஏ.எஸ் ஆகலாம் ........ 87

## ஆசிரியர் உரை

S. ஆபிதீன் M.A., M.Sc., M.Phill., B.Ed.,
விரிவுரையாளர் விலங்கியல் துறை
செயலர், முன்னாள் மாணவர் கழகம்
Dr.சாகிர் உசேன் கல்லூரி
இளையான்குடி.
e-mail: abideen245400@yahoo.com
Ph: 14564-245400/265252 Ilayangudi, Sivaganga District

அன்புடையீர் வணக்கம்

இது நவீன விஞ்ஞான உலகம். போட்டி போடும் போட்டிகள் நிறைந்த உலகம் சரியான வழிகாட்டுதல் இல்லாவிட்டால் வாழ வாழவிடாத உலகம். நமது சுற்று வட்டாரத்தில் அசாதாரண திறமைபடைத்த எத்தனையோ மாணவர்கள் சரியான வழிகாட்டுதல் இல்லாமல் மிகச் சாதாரண வட்டத்திற்குள் தன்னை சுருட்டிக் கொள்ளும் துர்பாக்ய நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

எதையோ படித்துவிட்டு எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதில்லை. சிந்தித்து விட்டு எதிர்காலமுள்ள படிப்புகளை படிக்க வைக்க வேண்டும். வளமான வாழ்விற்கு வழிகாட்ட வேண்டும் என்ற ஆவல்களுக்குப் பிறந்த குழந்தை தான் இந்த மலர்.

இந்த மலரிலே 10ம் வகுப்பு 12 மற்றும் பட்டப்படிப்பு படித்துவிட்டு அடுத்து என்ன படிக்கலாம்? என்று திணறிக் கொண்டிருக்கும் மாணவர்களின் திறமைக்கேற்ப விருப்பத்திற்கேற்ப குடும்பச் சூழ்நிலை மற்றும் பொருளாதாரத்திற்கேற்ப அதிகம் அறிமுகம் இல்லாத படிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் மலரில் குறிப்பிட்டுள்ள எந்தக் கல்வியும் கல்வி நிறுவனமும் சிபாரிசு செய்யப்படவில்லை என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இந்த மலரை கொடுக்க எல்லா வகையில் ஊக்கமும் உற்சாகமும் தந்த கல்லூரியின் தாளாளர் ஹாஜி. கே.ஈ. அப்துல் கரீம் அவர்களுக்கும் கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ.ஃ. லியாகத் அலிகான் அவர்களுக்கும் அனைத்துப் பேராசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மலர் முன்னாள் மாணவர் கழகத்தின் நிதி ஆதாரம் கருதி தயாரிக்கப்பட்டிருப்பதால் இதற்கான அனைத்து செலவுகளையும் விளம்பரங்கள் மற்றும் வாழ்த்துக்கள் மூலம் தந்து உதவிய அனைத்து நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியை முன்னாள் மாணவர் கழகத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

சிநேகமுடன்

எஸ். ஆபிதீன்

25-02-2004

## கடலும் கப்பலும் - கடல் (கப்பல்) துறை பயிற்சி

### கப்பல் துறை பிரிவுகள்

கப்பலைப் பொறுத்தவரை மூன்று பிரிவுகள் உள்ளன. ஒன்று டெக், இரண்டாவது எஞ்சின், மூன்றாவதாக சலூன் (சமையல் பிரிவு) டெக் பிரிவில் போக்குவரத்து, சரக்கு கையாளுதல், பராமரிப்பு போன்றவைகள் அடங்கும். இன்ஜின் பிரிவு இஞ்சினின் இயக்கத்தையும் கேட்டரிங் பிரிவு சமையலையும் கவனித்துக் கொள்ளும் பிரிவாகும். இம்மூன்று பிரிவும் சிறப்பாக செயல்படும் கப்பல்கள் மிகச் சிறந்தவையாக இருக்கும்.

கப்பல் மாலுமியாக சேர விரும்புபவர்களுக்கு டைரக்டரேட் ஆப் ஷிப்பிங், இந்திய கப்பல் அமைச்சகத் துறையின் ஒப்புதலோடு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் நான்கு மாத பயிற்சி கொண்ட பொதுப்படையான புதுமுக வகுப்பிற்கும், சமையல் பிரிவிற்கும் (Saloon) குறைந்தது 10ம் வகுப்பு முடித்தவராக இருத்தல் வேண்டும். வயது 17.5 முதல் 21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். இப்பயிற்சி முடிந்தவுடன் இந்திய CDC வுடன் இந்திய கப்பல் அமைச்சகம் சான்றிதழை வழங்கும். இதன் மூலம் எந்த கப்பல் கம்பெனியிலும் பணியாற்றலாம். மேலும் இதில் அதிகாரியாகவோ, இன்ஜினியராகவோ ஆக விரும்புபவர்கள் இந்திய அரசாங்கத்தின் மெர்க்கன்டைல் டிபார்ட்மென்ட் நடத்தும் தேர்வினை எழுதுவதன் மூலமாக அந்த இலட்சியத்தை சுலபமாக அடைய முடியும். டெக்கேட் மற்றும் மரைன் இன்ஜினியரிங் பயிற்சி பெறுபவர்கள் நிச்சயமாக அதிகாரியாகவோ இன்ஜினியராகவோ உருவாகலாம்.

### கல்வித்தகுதி

இப்பயிற்சியில் சேர 12ம் வகுப்பு படித்திருக்க வேண்டும். 60 சதவீத மதிப்பெண்களுக்கு மேல் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 20 இருக்க வேண்டும். பி.எஸ்.சி (B.Sc.,)படித்திருந்தால் 55 சதவீத மதிப்பெண்களும் வயது 22க்குள்ளாக இருக்க வேண்டும். அல்லது B.E., / B.Tech முடித்திருப்பவர்கள் 24 வயது கொண்டவர்களாக இருக்க வேண்டும். இதன் முதன்மை பயிற்சி காலம் 3.5 மாதங்களாகும். இப்பயிற்சிகள் மூலம் கப்பல் அதிகாரி ஆகவும் அதன் பிறகு தேர்வு எழுதுவதன் மூலம் படிப்படியான பதவி உயர்வைப் பெறலாம். கப்பல் இன்ஜினியரிங் துறையில் பயில்பவர்கள் கப்பலில் இன்ஜினியராக பணியாற்ற முடியும். இப்பயிற்சியில் சேர விரும்புபவர்கள் மெக்கானிகல், மரைன் எலக்டிரிக்கல், ஷிப் பில்டிங் டிப்ளமோ படிப்பில் குறைந்தது இறுதி ஆண்டில் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றவராக இருத்தல் வேண்டும். வயது 22க்கு குறைவாக இருக்க வேண்டும்.

மேற்கண்ட டெக்கேட் பயிற்சியில் சேர விரும்புபவர்கள் 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு பட்டம் டிப்ளமோ ஏதாவது ஒன்றில் ஆங்கிலத்தில் 50 சதவீதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். மாணவர்கள் உடல் தகுதி குறைபாடு இல்லாதவர்களாகவும் கண் பார்வை 6:6 என்ற அளவில் கண்ணாடி அணியாதவர்களாகவும் வண்ணங்களை துல்லியமாக அறிந்து கொள்ளும் திறம்படைத்தவர்களாகவும் இருக்க வேண்டும். இன்ஜினியரிங் துறையில் சேர விரும்புபவர்கள் உடல்நலத் தகுதியோடு கூட 10, 12, டிப்ளமா ஏதாவது ஒன்றில் ஆங்கிலத்தில் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். கண் கண்ணாடி அணிபவராக இருந்தால் கண்ணாடி ப்ளஸ் பை மைனஸ் 2.5க்கு உள்பட்ட சக்தியாக இருத்தல் அவசியம்.

### எங்கே சேரலாம்

இப்பயிற்சியில் சேர சிறந்த பயிற்சியினை யார் அளிப்பார் என்று நீங்கள் சிந்திப்பது புரிகிறது. உங்களது கேள்விக்கான பதிலை சென்னை SAMS நிறுவனம் தருகிறது. Southern Academy of Maritime Studies Pvt. Ltd. (SAMS) என்பது D.G.ஷிப்பிங் அப்ரூவ்டு நிறுவனம், தற்பொழுது கப்பல் கல்வியில் முதன்மையாக விளங்குகிறது மற்றும் ISO 9002-2 சான்றிதழ் பெற்றுள்ளது. Det Norske Veritas Norway வுடன் கூட்டாக இணைந்து செயல்படுகிறது.

விபரங்களுக்கு :

சதர்ன் அகாடமி அஃப் மெரிடிம் ஸ்டடீஸ்
பி.லிட். எண் 110, கிழக்கு மாதா சர்ச் தெரு
ராயபுரம் சென்னை - 600 013
தொலைபேசி 25900558, 25900563, 25902674
தொலைநகல் 2590
மொபைல் 0-98410-37738, 31042100, 31037933
e-mail:samstudy@vsnl.com
Website:www.samsindia.com

## கடல் சார்ந்த படிப்புகள்

கடலின் முக்கியத்துவம் உணர்ந்த நம் நாடு இதற்கென்றே ஒரு தனித்துறையை கடல் வளர்ச்சி துறை என்ற பெயரில் 1981 ஆம் ஆண்டு ஆரம்பித்து விட்டது. கடல்களைப் பற்றியும் அதில் மறைந்து கிடக்கும் வளங்கள் பற்றியும் ஆராய்வது தான் இத்துறையின் நோக்கம். பூமிப்பந்தில் நான்கில் மூன்று பாகம் கடலாகத்தான் இருக்கிறது. இத்துறை தொடர்ந்து வளரக்கூடிய துறை. பெரும்பாலும் போட்டிகள் அதிகம் இருக்காது. இத்துறையில் அதிகம் காலூன்ற வேண்டுமெனில் ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்த கல்வி மட்டும் போதுமானதாக இருக்காது. அதாவது கணிதம், இயற்பியல், வேதியியல், புள்ளியியல், உயிரியல் போன்ற பலதுறை படிப்புகளில் ஆர்வம் இருக்க வேண்டும்.

### எங்கெல்லாம் வேலை கிடைக்கும்

நம்நாடு ஏற்றுமதியில் கவனம் செலுத்தி வருவதால் பல ஏற்றுமதி நிறுவனங்களுக்கு கடலியல் வல்லுநர்கள் தேவைப்படுகிறார்கள். பல பொது பணித்துறை நிறுவணங்களில் இத்துறை சார்ந்தவர்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள். கல்வித் துறையில் இறங்கலாம். கடல் ஆராய்ச்சியில் ஈடுபடலாம். கடல் தொடர்புடைய பொறியியல் துறையில் இணைந்து கொள்ளலாம். பன்னாட்டு நிறுவணங்களிலும் பணியாற்ற பல வாய்ப்புகள் உள்ளன.

### என்ன படிக்கலாம்?

கடலியலில் பல துறைகள் உள்ளன. உங்களுக்கு ஆர்வம் அதிகம் உள்ள துறையை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இதோ கடலியலில் உள்ள பல்வேறு துறைகள்.

### Physical Oceanography

இது கடலின் புற இயலைப் பற்றிப்படிக்கும் படிப்பு கடல்களின் தன்மை இப்படிப்பில் ஆராயப்படுகிறது.

### Chemical Oceanography

கடலின் வேதிப்பண்புகள் பற்றிய படிப்பு. கடல் தண்ணீரில் என்னென்ன பொருள்கள் கலந்திருக்கின்றன. எந்த பொருளை பிரித்தெடுப்பது லாபகரமாக இருக்கும் போன்றவற்றை படிப்பது இத்துறை.

### Bio-Oceanography

கடலில் என்னென்ன உயிரிகள் தோன்றி வளர்கின்றன என்பதை ஆராயும் படிப்பு. கடல் உயிரியின் பொருளாதாரத்தை எப்படி பயன்படுத்தலாம் என்று அறிவதே இத்துறையின் நோக்கம்.

### Geological Oceanography

கடலின் மேல்மட்டம் மற்றும் மேல்மட்டத்திற்கு சற்று கீழ் உள்ளவைகளைப் பற்றி ஆராயும் படிப்பு இது. கடல்களின் தரைமட்டத்தில் உள்ள பலவகையான உலோகங்கள், தாதுக்களை பற்றியும் இப்படிப்பில் ஆய்வு செய்யப்படுகின்றது.

### எங்கே படிக்கலாம்?

கடல் தொடர்புடைய படிப்புகள் கீழ்க்கண்ட கல்வி நிறுவணங்களில் படிக்கலாம்.

இந்திய தொழில் நுட்பக்கழகம் சென்னை

அண்ணாமலை பல்கலைக்கழகம் சிதம்பரம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் இராஜாக்க மங்களம்

அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி (தொண்டி)

கொச்சி பல்கலைக்கழகம் கொச்சி

கோவா பல்கலைக்கழகம் கோவா

இத்துறையில் மேலும் விபரங்களை பெற கீழ்க்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்.

பெருங்கடல் வளர்ச்சி துறை<br>
சி ஐ ஓ வளாகம், போதி சாலை<br>
புதுடெல்லி - 110003.

தேசிய ஆழியியல் கழகம்<br>
சுதனா பவ்லா<br>
கோவை – 403004

மத்திய மாநில அரசானை தேர்வுக் குழுக்கள் நடத்தும் தேர்வுகள் மற்றும் பல போட்டி தேர்வுகளுக்கு தேவையான குறிப்பேடுகளை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுபவர்கள்

Sakthi Publishing House<br>
1-C Jeer Street (Near Cholaiappan Street)<br>
Washermenpet – Chennai, Phone : 5967807

## மகத்தான மரைன் இன்ஜினியரிங்

மகாராஷ்டிரம் புனெயில் உள்ள இந்தியக் கடற்படை பொறியியல் கல்லூரி கடற்படை பொறியியல் கல்லூரியில் (The Naval College of Engineering) நான்கு ஆண்டு பி.டெக்., படிப்பு இலவசமாக அளிக்கப்படுகின்றது.

### கல்வித்தகுதி

12ஆம் வகுப்பு தேர்ச்சி அத்துடன் இயற்பியல், வேதியியல், கணிதம் ஆகிய பாடங்களில் குறைந்த பட்சம் 75 சதவிகித மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

### வயது வரம்பு

வயது வரம்பை பொறுத்தவரை மாணவர்கள் 16 வயதிலிருந்து 19 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். அட்டவணை இனைத்தவர்களுக்கு குறிப்பிட்ட வயது சலுகை அளிக்கப்படுகிறது. இது பற்றிய விபரம் அந்தந்த விளம்பரங்களில் தெரிவிக்கப்படும்.

### உடல் தகுதி

உயரம் 157 செ.மீ மார்பளவு 5 செ.மீ விரிவடைய வேண்டும். நல்ல கண்பார்வை அவசியம்.

### தேர்வு முறை விண்ணப்பதாரர்

புணியாளர் தேர்வாணையம் (SSB) நடத்தும் உளவியல் தேர்வு, தனி குழுத்தேர்வு, குழு விவாதம், நேர்முகத் தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு கோவாவில் உள்ள நேவி அகாடமியில் 6 மாதங்கள் கடற்படை அடிப்படைப்பயிற்சி அளிக்கப்படும். அதன்பின் புனெயில் உள்ள கடற்படை பொறியியல் கல்லூரிக்கு அனுப்பப்படுவர். படிப்புக்கான அனைத்து செலவுகளையும் கடற்படை ஏற்றுக்கொள்ளும், 4 ஆண்டுகளின் படிப்புக்கு பின்னர் பி.டெக் (B.Tech) பட்டம் அளிக்கப்படும். புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் இதை வழங்கும். இப்பட்டம் பெற்றோர் கடற்படையில் அதிகாரியாக அமர்த்தப்படுவர். வைஸ் அட்மிரல் பதவிவரை அவர்கள் பணி உயர்வு பெற வாய்ப்பு உள்ளது.

### விண்ணப்பிக்கும் முறை

பெயர், முகவரி, தந்தை பெயர், திருமண நிலை, மாநிலம், நாடு, பிறந்த தினம், படித்த பள்ளியின் பெயர், 12ம் வகுப்பில் இயற்பியல் வேதியியல், கணிதம் ஆகியவற்றில் பெற்ற மதிப்பெண்கள், ஆங்கிலத்தில் பெற்ற மதிப்பெண், விளையாட்டு (அல்லது) N.C.C. ல் இருந்தால் அதன் விவரம் இதற்கு முன்பு எஸ். எஸ். பி. (S.S.B) தேர்வில் கலந்து கொண்டிருந்தால் அது குறித்த விவரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பம் தயார் செய்ய வேண்டும். பாஸ்போர்ட் அளவுள்ள புகைப்படத்தை விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். பெற்றோர் (அல்லது) பாதுகாவலரின் உறுதி மொழிக் கடிதத்தையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்புச் சான்றிதழ்களின் நகல்களில் GAZETTED அதிகாரியிடம் சான்று பெற்று இணைக்க வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் மேல் என்று குறிப்பிட வேண்டும். கீழக்கரையில் உள்ள முஹம்மது சதக் கல்லூரியிலும் இப்படிப்பு உள்ளதால் முஸ்லிம் சமுதாய மாணவர்கள் இங்கு படிப்பதற்கு இடங்கள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது.

## மீன்வள அறிவியல் படிப்பு

மத்திய அரசின் நிதியுடன் நடைபெறும் கிரிஷி விக்யான் கேந்திரா அமைப்புகள் கால்நடை மருத்துவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது. அதுமட்டுமின்றி புளகிராஸ், அனிமல் பெல்ஃபேர் போர்டு ஆஃப் இந்தியா போன்ற அமைப்புகளும் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு பெருமளவில் வேலை வாய்ப்பை வழங்குகின்றன. மீன்வள அறிவியல் பட்டப்படிப்பை தூத்துக்குடியிலுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நடத்துகிறது. தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இக்கல்லூரி, மீனவள அறிவியலில் இளநிலைப் பட்டம் (பி.எஃப்.எஸ்.சி.) மற்றும் பி.எச்.டி., படிப்புகளை நடத்துகிறது. மீன்வள அறிவியலில் பட்டப்படிப்பில் சேர விரும்புவோரும், அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் தொழில் நுட்ப நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்று, உரிய கட் ஆஃப் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

### உயர்கல்வி வாய்ப்புகள்

மீன்வள அறிவியலில் பட்டப்படிப்பு படித்தோர், எம் எஃப் எஸ் சி எனப்படும் முதநிலைப் பட்டப்படிப்பை படிக்க வாய்ப்புகள் உள்ளன. இதே கல்லூரியில் முதநிலைப் பட்டப்படிப்பு நடத்தப்படுகிறது. அதன் பிறகு பி.எச்.டி ஆராய்ச்சி படிப்பு படிக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

### வேலைவாய்ப்புகள்

மீன்வள அறிவியல் பட்டதாரிகளுக்கு, மீன் பதப்படுத்தும் நிறுவனங்கள், மீன் உணவு தயாரிக்கும் நிறுவனங்கள் போன்றவற்றில் வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. எம்.எஃப்எஸ்சி படித்தோர் ஏ.ஆர்.எஸ் தேர்வில் வெற்றி பெற்றால் இந்திய வேளாண்கழகத்தின் ஆராய்ச்சி நிலையங்களில் விஞ்ஞானியாகப் பணியாற்ற வாய்ப்புகள் உண்டு. நெட் தேர்வில் தேர்ச்சி பெற்றால், நாட்டின் பல பகுதிகளிலுள்ள மீன்வளக் கல்லூரிகளில் விரிவுரையாளராக வேலை பெறவும் வாய்ப்புகள் உண்டு.

அரசின் மீன்வளத்துறையில் இப்படிப்பு படித்தோருக்கு வேலை வாய்ப்புகள் உண்டு. ஆயினும் இப்படிப்பு படித்தோர், தனியார் வேலைவாயப்புகளையே விரும்புகிறார்கள். காரணம் உழைப்புக்கேற்ற ஊதியம் தனியார் துறையில் கிடைப்பதே. மீன்வள அறிவியல் படித்தோருக்கு ஆந்திரப் பிரதேசத்தில் ஏராளமான வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. காரணம் அங்கு மீன் பண்ணைகள் அதிக அளவில் இருப்பதே.

## கால்நடை மருத்துவ படிப்புகள்

கால்நடை மருத்துவர்கள் என்றதுமே ஏதோ கால்நடைகளுக்கு நோய் வந்தால் அதற்கு சிகிச்சை தருவது மட்டுமே அவர்களுடைய வேலை என்று பலரும் நினைக்கிறார்கள். அது ஒரு தவறான கருத்து. ஒரு தேசத்தின் முன்னேற்றத்துக்கு எப்படி மருத்துவர்கள் பொறியாளர்கள் போன்றோரின் பங்களிப்பு இன்றியமையாததோ, அதே போல கால்நடை மருத்துவர்களின் பங்களிப்பும் இன்றியமையாததாகும்.

நம் நாடு பால் உற்பத்தியில் உலகிலேயே முதல் இடத்தைப் பெறவும், முட்டை உற்பத்தியில் உலக நாடுகளுள் ஐந்தாம் இடத்தில் இருப்பதற்கும், கால்நடை மருத்துவர்கள் நேரிடையாகவும் மறைமுகமாகவும் காரணமாயிருக்கிறார்கள். சரி. ஒருவர் கால்நடை மருத்துவராக வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும். எங்கு படிக்க வேண்டும்? ஒருவர் கால்நடை மருத்துவராக வேண்டுமென்றால் அதற்கு அவர் கால்நடை மருத்துவப்ப பட்டப்படிப்பை படிக்க வேண்டும்.

தமிழகத்தின் இளநிலை கால்நடை மருத்துவப் பட்டப்படிப்பை (பி. வி. எஸ். சி) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் நடத்துகிறது. கால்நடை மருத்துவப்படிப்பும் எம. பி. பி. எஜ் போன்ற ஒரு தொழிற்படிப்பேயாகும். எம. பி. பி. எஸ் மனிதர்களுக்கான மருத்துவம் இது மனிதர்கள் தவிர்த்த விலங்கினங்களுக்கான மருத்துவப்படிப்பு. இப்படிப்பில் சேர விரும்புபவர்கள் அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் தொழில் நுட்பக் கல்விக்கான நுழைவுத் தேர்வை எழுதித் தேர்ச்சி பெற வேண்டும்.

### கல்வித்தகுதிகள்

12ல் அறிவியல் பாடங்களில் உயிரியலை ஒரு பாடமாக படித்திருக்க வேண்டும். 12 தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் ஆகியவற்றைக் கொண்டு கணக்கிடப்படும் கட் ஆ..ப் மார்க் அடிப்படையில் கால்நடை மருத்துவப் படிப்புக்கு இடம் கிடைக்கும்..

### எங்கு படிக்கலாம்?

கால்நடைப் பல்கலைக்கழகத்துக்கு இரண்டு கால்நடை மருத்துவக்கல்லூரிகள் உள்ளன. ஒன்று சென்னையிலும், மற்றொன்று நாமக்கல்லிலும் உள்ளது. இக்கல்லூரிகளின் முகவரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி
110 வேப்பேரி நெடுஞ்சாலை
வேப்பேரி - சென்னை 600007.

கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம் நாமக்கல் 637001
நாமக்கல் மாவட்டம்.

இதே போல இந்தியா முழுவதும் 34 கால்நடை மருத்துவக் கல்லூரிகள் உண்டு. இந்தக் கல்லூரிகள் அனைத்திலுமுள்ள இடங்களில் 10 விழுக்காடு இடங்கள் இந்தியக் கால்நடை மருத்துவக் கவுன்சில் மூலம் நிரப்பப்படும். அதற்காக தேசிய அளவில் ஒரு நுழைவுத் தேர்வு நடத்தப்படும். அதில் 12 படிப்போர் கலந்து கொண்டு எழுதலாம். தேர்ச்சி பெற்றால், நாட்டின் பிற மாநிலங்களிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

### வேலைவாய்ப்புகள்

பி. வி. எஸ். சி. படித்து முடித்தோர், தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை உதவி மருத்துவராகப் பணியாற்ற வாய்ப்புகள் உண்டு. சமீபகாலமாக தமிழக அரசு இப்பணியிடங்களை நிரப்பவில்லை. இதன் காரணமாக அரசு வேலை கிடைப்பதில் சற்று கனக்கமான சூழ்நிலை காணப்படுகிறது. ஆயினும் கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் சுயமாக சிகிச்சை செய்வதன் மூலம் பொருளீட்டலாம். சென்னை போன்ற பெரு நகரங்களில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணிகளுக்கு சிகிச்சை செய்யும் கிளினிக்குகளை நடத்தி வருகிறார்கள். கிராமப்புறங்களில் மாடு, ஆடு போன்ற கால்நடைகளுக்க சிகிச்சை செய்கிறார்கள். ஆந்திரா, கேரளா, போன்ற மாநிலங்களில் கூட்டுறவு பால் உற்பத்தி சங்கங்களில் பணிபுரிய கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கிறார்கள்.

## டெய்ரி டெக்னாலஜி - பால் பண்ணை படிப்பு

பால் உற்பத்தி என்பது கிராமத்தை அடிப்படையாக கொண்டது என்ற நிலை தற்பொழுது மாறிவிட்டது. பால் மற்றும் பால் பொருள்களின் தேவை உலக அளவில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. படித்து பட்டம் பெற்று தொழில் செய்ய விரும்புபவராக இருந்தால் இந்த படிப்பு மிகவும் உபயோகமாக இருக்கும். இந்த படிப்பில் பட்டம பெற நான்கு ஆண்டுகள் படிக்க வேண்டும். இந்த படிப்பிற்கு பி.டெக் (டெய்ரி டெக்னாலஜி) என்று பெயர். 12ம் வகுப்பு முடிந்த பின் இந்த படிப்பில் சேரலாம். 12இல் இயற்பியல், வேதியியல், கணிதம் ஆகிய பாடங்களையும் படிக்க வேண்டும். இந்த பாடத்திற்கு நுழைவுத் தேர்வும் எழுத வேண்டியுள்ளது. ஒவ்வொரு மாதமும் ஜனவரி பிப்ரவரி மாதங்களில் தேர்வு பற்றிய அறிவிப்பு வெளியாகும். தேர்வுகள் மே மாதத்தில் நடைபெறலாம். இந்த படிப்பிற்கான தேர்வினை வேளாண் ஆராய்ச்சிக் குழுவின் கல்வி பிரிவு அகில இந்தியஅளவில் நடத்துகிறது.

### தேர்வு முறை

தேர்வு ஒரே நாள் எழுத வேண்டும். இதில் இயற்பியல், வேதியியல், மற்றும் உயிரியல், கணிதம், வேளான் ஆகிய பாடங்களிலிருந்து கேள்விகள் கேட்கப்படும். கேள்விகள் 12வது தரத்திலேயே இருக்கும்.

### வயது வரம்பு

வயது 17க்கு குறையாமல் இருக்க வேண்டும். அதிகபட்சம் 21 ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 21ம் நாள் விளிம்பு நாளாக கணக்கிடப்படும்.

### தகுதிகள்

12வது வகுப்பு தேர்வில் ஆங்கிலம் தவிர மற்ற பாடங்களில் 60 சதவீதத்திற்கு குறையாத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். அட்டவணை இனத்தவர்களுக்கு 55 சதவீதம் போதுமானது. 12வது தேர்வு எழுதப் போவதாக இருந்தாலும் அந்த ஆண்டின் விண்ணப்ப தேதிக்குள் விண்ணப்பித்து விட வேண்டும்.

### விண்ணப்ப படிவம்

விண்ணப்பபடிவம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி முதல் வாரம் முதல் மார்ச் இரண்டாம் வாரம் வரை வழங்குகின்றனர். விண்ணப்பத்தின் விலை ரூ. 150 வங்கி வைரவோலையாக செலுத்த வேண்டும். அட்டவணை இனத்தவர்களுக்கு ரூ 75 போதுமானது. சின்டிகேட் வங்கியின் சில குறிப்பிட்ட வங்கிகளில் மட்டுமே விண்ணப்பங்கள் கிடைக்கும்.

இந்த பாடப்பிரிவு பற்றிய மேலும் விபரங்கள் அறிய :-

Indian Council of Agriculture Research (KAR) Education Division.
Krishi Anusandhan Bhavan
Pusa Gate – New Delhi – 110012

Director
National Academy of Agricultural Research and Management
Rajendra Nagar
Hyderabad – 500030

Campus Dean
Central Agrucultural University (CAU)
Imphal, Manipur 0 795 001.

தமிழ்நாடு அரசு தேர்வாணைய நுழைவு தேர்வுகளுக்கும் 50 மேற்பட்ட பயிற்சி தேர்வுகளுக்கும் இங்கே பயிற்சி நடத்துகிறார்கள். இலவச ஆலொசனையும் பெறலாம்.

Engrance Guru
1/203-52nd Street. Ashok Nagar
7th Avenue- Chennai – 83
Phone 3713299 / 3715376

## பைலட் உயர பறக்கலாம் - நீங்களும் விமானியாகலாம்

இது பறந்து கொண்டே பணம் சம்பாதிக்கும் தொழில். தேவையான உடல் தகுதி மிகுந்த தன்னம்பிக்கை. ஆதிக நம்பகத் தன்மை. அமைதியான மனநிலை. எந்த சூழ்நிலையிலும் பதட்டம் அடையாத மன உறுதி இது போன்ற குணாதிசயங்களை பெற்றிருந்தால் நீங்கள் இந்த வேலைக்கு தகுதியானவர். நீங்கள் வணிகமுறை விமானி ஆவதற்கு மாணவ விமானி அனுமதி. துனியார் விமான அனுமதி, வணிகமுறை விமானி அனுமதி என்ற மூன்ற நிலைகளை கடக்க வேண்டும். முதலில் மாணவ விமானி அனுமதியை ஒவ்வொரு மாநிலத்திலும் இயங்கிவரும் பிளையிங் கிளப்புகள் தேர்வு நடத்தி தருகின்றன. இந்த தேர்வில் வெறறி பெறுவதற்கு விமான பயண விதிமுறைகள் பறப்பதற்கு தேவையான காலநிலை அறிவியல், வானத்தில் வழிகண்டு விமானத்தை செலுத்தும் விதம், விமான தொழில் நுட்பம் ஆகியவற்றை படித்திருக்க வேண்டும்.

### தகுதி

10ம் வகுப்பு படித்திருக்க வேண்டும், 16 வயது நிரம்பியிருக்க வேண்டும். உடல்நல மருத்துவ சான்று அவசியம். வங்கி ஒன்று ரூ. 10ஆயரத்திற்கான உத்திரவாதம் தரவேண்டும்.

### தனியார் விமான அனுமதி

இதில் செய்முறை பயிற்சி அவசியம் ஒரு குறிப்பிட்ட மணி நேரத்திற்கு பயிற்றுனருடன் சேர்ந்து பயிற்சி எடுத்து கொள்ள வேண்டும் 15 மணி நேரம் பறந்த பிறகு உங்களை தனியாக பறக்க அனுமதிப்பார். இதிலும் எழுத்துத் தேர்வு உண்டு. இந்த பயிற்சிக்கு 17 வயது முடிந்து இருக்க வேண்டும். மருத்துவ சோதனையும் அவசியம்.

### வணிக முறை விமான அனுமதி

குறைந்தது 250 மணிநேரம் பறந்து பயிற்சி பெற்றிருக்க வேண்டும். 12ம் வகுப்பு தேர்வில் கணிதம் மற்றும் இயற்பியலில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். 18 வயதிற்கு மேல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும். மருத்துவ பரிசோதனையும் வென்றாக வேண்டும்.

### எங்கே பயிற்சி பெறலாம்?

உள்நாடு அல்லது வெளிநாடுகளில் பொருளாதார வசதிக்கேற்ப பயிற்சி பெறலாம். உங்களுக்கு அருகாமையில் உள்ள ஃபிளையிங் கிளப்புகள் மூலமோ அல்லது ரேபரேலியில் உள்ள இந்திரா

காந்தி தேசிய வான் பயிற்சி மையத்திலும் சென்னையிலும் பயிற்சி பெறலாம்.

### எவ்வளவு செலவு ஆகும்

இது செலவு அதிகம் வரும் படிப்பு. ஆனால் வருமானம் அதிகம் என்பதனால் செய்யும் செலவு வீணாகாது. ஒற்றை இஞ்சின் விமானத்தில் பயிற்சி பெறுவதற்கு 12 மாத பயிற்சிக்கு ரூ. 4.5 லடசம் செலவு ஆகும். பல இஞ்சினக்ள் பொருத்திய விமானப்பயிற்சிக்கு (18 மாதப் பயிற்சிக்குº ரூ. 5 லட்சம் செலவு ஆகும். ஆனால் இந்த கட்டணம் விகிதம் மாறுபடலாம்.

### பயிற்சியளிக்கும் இடங்கள்

Madras Flying Club Ltd, Civil Airport, Chennai Airport, Chennai – 27.

Coimbatore Flying Club Ltd, Civil Aerodrome Post, Coimbatore – 641014

### மருத்துவ சான்று அளிக்கும் அமைப்பு

Airforce Central Medical Establishment

Subroto Park – New Delhi.

இந்திய கடலோர காவல் படைக்கு நாவிக்ஸ் பணிக்கு 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் சேரலாம். இதற்கான அறிவிப்பு ஏப்ரல் மே அல்லது நவம்பர் டிசம்பர் மாதங்களில் வெளியிடப்படும். இதுபற்றி மேலும் விபரம் அறிய

கமாண்டர்

கடலோர காவல்படை கிழக்கு பிராந்தியம்

செயிண்ட் ஜார்ஜ் கோட்டை

சென்னை - 600 009

## ஏர் ஹோஸ்டஸ் ஆவது எப்படி?

ஏர்ஹோஸ்டஸ் என்றாலே தட்டில் சாக்லெட்டுகளையும் உணவுப் பதார்த்தங்களையும் தான் ஏந்தி வர வேண்டும் என்பதில்லை. அதற்கு மேலும் பல்வேறு பொறுப்புக்கள் உள்ளன. விமானத்தில் பயணம் செய்வோருக்கு ஏற்படும் தலைவலியிலிருந்து பிரசவம் வரை முதலுதவி செய்ய ஏர்ஹோஸ்டஸ்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

### தகுதிகள்

இப்பணியில் சேர ஏதேனும் ஒரு டிகிரி முடித்திருக்க வேண்டும். பெண்களாக இருக்கும் பட்சத்தில் பணியில் சேரும் போது திருமணமாகாதவர்களாக இருக்க வேண்டும். பணியில் சேர்ந்த பின் திருமணம் செய்து கொள்ளலாம்.

வயது, உயரம், எடை ஆகிய மூன்றும் தேவையான விகிதத்தில் இருக்க வேண்டும். இந்தி சரளமாகப் பேச தெரிய வேண்டும். ஆங்கிலமும் தெரிய வேண்டும். கண் பார்வை 6 ன் கீழ் 6 என்ற விகிதத்தில் இருத்தல் அவசியம். நிறக்குருடு (Colour Blindness) இருக்கக்கூடாது. இனிமையான தோற்றம் தேவை. விமானத்தின் அளவைப் பொருத்து ஏர்ஹோஸ்டஸ், பிளைட்

பர்சரின் எண்ணிக்கை அமையும்.

### பயிற்சி

தேர்வானவர்களுக்கு 6 வாரப் பயிற்சி அளிக்கப்படும். இதில் பயணிகளின் சைக்காலஜி, உணவு, தோற்றத்தை மேம்படுத்திக் கொள்ளுதல் உள்ளிட்ட அனைத்து விஷயங்களும் கற்றுக் கொடுக்கப்படும்.

ஊதாரணமாக விமானத்தில் விஜபிக்கள், முதியோர்கள், நோயாளிகள், குழந்தைகள் ஆகியோரிடத்தில் விமானப் பணிப்பெண்கள் சிறப்புக் கவனம் செலுத்துவது எப்படி என்பது போன்ற விஷயங்கள் பயிற்சியின் போதே கற்றுக் கொடுக்கப்பட்டுவிடும். பயணிகள் பாதுகாப்பாகப் பயணம் செய்வதை உறுதி செய்வதுதான் விமானப்பணிப்பெண்களின் முக்கிய கடமை. மேலும் அவசர காலங்களில் நிலைமையைச் சமாளிப்பதும் அவர்களின் பொறுப்பு. சம்பளம் அனைத்துப்படிகளையும் சேர்த்து ஆரம்பக் கட்டத்திலேயே ஒரு விமானப் பணிப்பெண் மற்றும் பிளைட் பர்சருக்கு மாதம் குறைந்த பட்சம் ரூ. 12 ஆயிரம் சம்பளம் கிடைக்கும். ஊதியத்தைப் பொருத்தவரை நிறுவனத்துக்கு நிறுவனம் மாறுபடும். இதர படிகள், பயணம் செய்வதில் சலுகை போன்ற வசதிகளும் உண்டு. குண்டாகக் கூடாது இந்த வேலையில் மிக முக்கியமானது உடல்நலத்தைப் பேணிக்காப்பது தான். எடை அதிகமாகிவிட்டால் முதலில் எச்சரிக்கை தரப்படும். எடையைக் குறைப்பதற்கு போதிய கால அவகாசமும் தரப்படும். அதையும் மீறி உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ள முடியவில்லையென்றால் தொடர்நது வேலையில் இருக்க முடியாது.

## ஏரோநாடிக்கல் (இன்ஜினியரிங்) தரும் பிரகாசமான எதிர்காலம்

விமான இயக்கம், விமான தயாரிப்பு, விமானக் கருவிகள் தயாரிப்பு, பரிசோதனை முறைகள், ஏவுகணைகள் தயாரிப்பு, வான் விசையியல் பற்றிய பாடங்கள் ஏரோநாட்டிகல் பொறியியல் படிப்பில் கற்றுத் தரப்படுகின்றன. சமீபகாலமாக முஸ்லிம் சமுதாய மாணவர்கள் இப்படிப்பில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

### கல்வித்தகுதி

12ம் வகுப்பு படிப்பு முடித்தவர்கள், பொறியியல் டிப்ளமோ முடித்தவர்கள் இப்படிப்பில் சேர தகுதி உடையவர்கள் ஆவர். 12ல் வேதியியல், இயற்பியல் மற்றும் கணிதம் படித்தவர்களாக இருக்க வேண்டும். மதிப்பெண்கள் 60 விழுக்காடுக்கு அதிகமாக பெற்றிருப்பது அவசியம். ஆங்கில அறிவு அவசியமான ஒன்று என்றாலும் படிப்பில் சேர்ந்த பிறகு வளர்த்துக் கொள்ளலாம்.

### எங்கே படிக்கலாம்?

சென்னையில் படிக்க விரும்புபவர்களுக்கு ஹிந்துஸ்தான் கல்லூரியில் இப்படிப்பு உள்ளது. கோவையில் பூங்கா பொறியியல் கல்லூரியில் இப்படிப்பு உள்ளது. மேலும் சில சுயநிதி பொறியியல் கல்லூரிகளிலும் இப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது.

## விஷூ வல் கம்யூனிகேஷன்

இதைச் சுருக்கமாக விஸ்காம் என்பார்கள். இந்த துறையில் படிப்பு முடித்தவர்கள் நெட் வானொலி

சின்னத்திரை என்று பிடித்தமான மீடியாவில் அல்லது விளம்பரத் துறையில் வேலை பார்க்கலாம். இத்துறையில் உங்களுக்குத் தேவையானது. புடிப்பு ப்ளஸ் நல்ல அனுபவ அறிவு. படிக்கும் போதே எந்த மீடியாவுக்குப் போகலாம் என்று நினைக்கிறீர்களோ, அதில் பார்ட் டைமாக வேலை பார்க்கத் தொடங்கி விடுங்கள். அவ்வப்போது பிரபல நிறுவனங்களுடன் இணைந்து ப்ராஜக்ட்டுகள் பண்ணலாம்.

மக்களின் மனவியல், என்ன மாதிரியான வார்த்தைகளை எப்படி உச்சரிப்பது கண்ணுக்கு இனிமையாக மக்கள் மனதில் பொருள்களை எப்படி பதிய வைப்பது ஆகியவை பற்றி இப்பயிற்சியில் கற்றுத் தருகிறார்கள்.

### கல்வித் தகுதி

12ம் வகுப்பு முடித்தவர்கள் இந்த துறையில் சேரலாம். இருப்பினும் பட்டப்படிப்பு முடித்த பிறகு இத்துறையில் பயிற்சி பெற்றால் எளிதாக முன்னேற அதிக வாய்ப்பு உள்ளது.

### வயது வரம்பு

17 வயது முடிந்தவர்களாக இருக்க வேண்டும். சான்றிதழ் மற்றும பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு வயது வரம்பு தளர்த்திக் கொள்கிறார்கள்.

### எங்கே படிக்கலாம்

தற்பொழுது அதிகமான சுயநிதிக் கல்லூரிகளில் இப்படிப்பு கற்றுத் தருகிறார்கள். இருந்தாலும் இந்த துறைக்கு தொடர்புடைய செய்முறை தேர்வுகளில் பயிற்சி தருகின்ற வசதி பெற்ற கல்லூரியை தேர்வு செய்து இப்பாடம் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதா என்று தெரிந்து சேர்வது நலம்.

## இனிமையான வாய்ப்பிற்கு இன்டீரியர் டெக்கரேஷன் படியுங்கள்

கட்டிடம் கட்ட 10 லட்சம் ரூபாய் செலவழித்தால், உள் அலங்காரம் செய்ய குறைந்த பட்சம் இரண்டு லட்ச ரூபாய் செலவு செய்யத் தயங்காத காலம் இது. கட்டிடங்களுக்கு உள் அலங்காரம் செய்வதும் ஏறக்குறைய கவிதை எழுதுவது மாதிரி அனுபவித்துச் செய்ய வேண்டிய விஷயம்.

### கல்வித்தகுதி

குறைந்த பட்ச தகுதி 12ம் வகுப்பு ஆகும். ஆனால் பட்டப்படிப்பு முடித்த பிறகு சேருபவர்கள் அதிகமான தொழில் வாய்ப்புக்களை எளிதாக பெற்றுக் கொள்ளலாம்.

### வாய்ப்புக்கள்

இந்தியாவில் உள்ள வாய்ப்புகளை காட்டிலும் வெளிநாடுகளில் இப்படிப்பிற்கு அதிகமான வரவேற்புகள் உள்ளன. காரணம் வெளிநாட்டவர் சுற்றுச் சூழலை அலங்காரம் செய்வதில் அதிக விருப்பம் உடையவர்களாக இருக்கிறார்கள். இந்தியாவிலும் இதற்கான வாய்ப்புக்கள் குறைவில்லை. பல பொறியாளர்களிடம் ஆலொசகராக சேரலாம். கட்டிட உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கலாம். தனியாக இது சார்ந்த தொழில் தொடங்கவும் அதிக வாய்ப்பு உள்ளது.

### கற்றுத்தரும் குறிப்பிடத்தக்க இடங்கள்

இப்படிப்பு உள்ளது கீழ்க்கண்ட நிறுவனங்களில் இப்படிப்பிற்கான மற்ற விபரங்களை அறிந்து கொள்ளலாம்

மகாராஜா மகளிர் கல்லூரி, ஈரோடு

ஜஸ்டிஸ் பஷீர் அகமது மகளிர் கல்லூரி

காலேஜ் ஆர்ட்ஸ் கிரா..ப்ட்ஸ்இ பெரியமேடு சென்னை

அவினாஸிலிங்கம் இன்ஸ்டிடியூட் ஆ..ப் ஹோம் சயின்ஸ் பெருந்துறை

## தீயணைப்புத் துறை

தீயணைப்புத் துறையில் சேர விருப்பம் உள்ளவர்கள் முயற்சிக்கலாம். இதில் வெவ்வேறு பிரிவுகள் உள்ளது. சேவை, நிர்வாகம், பராமரிப்பு இப்படி பல பிரிவுகள் இருக்கும். பல வீரதீர சாகசங்களுக்கும் வாய்ப்பு உள்ள தொழில் இது. தீயணைப்பு படைவீரர்கள் நிர்வாகம் செய்தல், சட்டதிட்டங்கள் பொது சொத்துக்களை பாதுகாப்பது போன்றவற்றையும் தெரிந்து கொள்ளலாம்.

### உடல் தகுதிகள்

165 செ.மீக்கு அதிகமாக இருக்க வேண்டும். 50 கிலோவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். மார்பு அளவு சாதாரண நிலையில் 81 செ.மீ இருக்க வேண்டும். விரிவடைந்து 5செ.மீக்கு குறைவில்லாமல் இருக்க வேண்டும்.

### கல்வித் தகுதிகள்

குறைந்த பட்சம் 12 அல்லது அதற்கு சமமான படிப்பு அறிவியலை ஒரு பாடமாக எடுத்து படித்திருக்க வேண்டும். வயது வரம்பு 18 முதல் 23க்குள் இருக்க வேண்டும். இதில் அட்டவணை இனத்தவருக்கு 28வயது வரை அனுமதிக்கப்படுகிறது. ஏற்கனவே பணியாளராக இருந்தால் 27 வயது வரை விண்ணப்பிக்கலாம்.

### நுழைவுத்தேர்வு

அகில இந்திய அளவில் நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது. டெல்லி, மும்பை, ஹைதராபாத், புவனேஸ்வர் போன்ற இடங்களில் ஒவ்வொரு வருடத்தின் அக்டோபர் மாதத்தில் நடைபெறும். இந்த நுழைவுத்தேர்வு இரண்டு பகுதிகளாக நடைபெறும். முதல் பகுதி ஆங்கிலம், பொதுஅறிவு கேள்விகளைக் கொண்டு இருக்கும். இரண்டாவது பிரிவில் பொது அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களில் கேள்விகள் இருக்கும். கேள்விகள் 12ம் வகுப்பு தரத்திலேயே கேட்கப்படும்.

### விண்ணப்பம் செய்வது

ஒவ்வொரு வருடமும் **Employment News** பத்திரிகையிலோ அல்லது முக்கிய செய்தித்தாள்களிலேயோ அறிவிப்பு வெளிவரும். எத்தகைய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிப்பு இருக்கும். அதே படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

### மொத்த இடங்கள்

இங்கு பயிற்சிக்கு 12 இடங்கள் வீதம் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் 2 பயிற்சிகள் 33 வாரங்களில் நடைபெறும். இதில் 21 வாரங்கள் கல்லூரியிலேயே நடைபெறும். 12 கால வாரம் செய்முறைப் பயிற்சியாகும். பயிற்சிக்கு பிறகு ஏதாவது ஒரு முக்கிய தீயணைப்பு நிலையத்தில் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வார்கள். இந்த துறை பற்றிய மேலும் விபரங்கள் அறிய :

National Fire Service College
Ministry of Home Affairs
Nagpur - Maharastra.

## நீங்களும் சிற்பி ஆகலாம்

போட்டி குறைந்த படிப்புகளில் இதுவும் ஒன்று. இதில் திறமைக்கு ஏற்ப வாய்ப்பும் வருமானமும் கிடைக்கும். இந்த துறையில் படித்த மாணவர்களுக்கு வெளிநாடுகளில் நல்ல மரியாதையும் மதிப்பும் கிடைத்து வருகிறது. கலை படைப்புகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு தற்சமயம் அதிகரித்துள்ளது. இந்த துறையில் உங்கள் திறமையும், ஆர்வமும் மட்டுமே மூலதனம். இந்த தொழிலில் ஒன்றுமே தெரியாதவர்கள் கூட இந்த தொழிலின் அடிப்படையிலிருந்தே கற்றுக் கொள்ளும் வகையில் ஆரம்பத்திலிருந்தே கற்றுக் கொள்ளலாம். இதில் பட்டைய படிப்பு (**Diploma Course**) பட்டப்படிப்பு (**Degree Course**) போன்ற படிப்புகள் உள்ளன.

### கல்வித்தகுதி

12வது வகுப்பில் தேறியிருக்க வேண்டும். குறைந்த பட்சம் 50 விழுக்காடு பெற்றிருக்க வேண்டும். நீங்கள் ஓவியம் சிற்பம் பயின்று கலை போன்றவற்றில் படித்தவர்களாக இருந்தால் 45 விழுக்காடு மதிப்பெண்கள் போதுமானது.

### வயது வரம்பு

17 வயது இந்த படிப்பிற்கான வயது வரம்பாகும். அந்தந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் உங்கள் வயதை கணக்கில் எடுத்துக் கொள்வார்கள். இந்தத் துறையில் சிறந்த திறமை இருக்குமெயானால் 6 மாத காலம் வயது விதிமுறைகளை தளர்த்திக் கொள்ளலாம். இது தவிர பகுதி நேர படிப்பிலும் சேர்ந்து பட்டம் பெறலாம். நுண்கலை படிப்பு பற்றிய அதிகமாக விபரங்களை பெற:

சென்னை பல்கலைக்கழகம்

நுண்கலைத்துறை

நூற்றாண்டு விழா மண்டபம்

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி

சென்னை - 600005

## ஜம்மென்றிருக்க ஜெம்மாலஜி படியுங்கள்

ஜெம்மாலஜி என்பது நவரத்தினங்களை பற்றிய படிப்பாகும். விலை மதிப்பு உள்ள ஆபரணங்களை சோதித்து சொல்லும் இந்த தொழிலுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. இந்த துறையில் பயிற்சிறை முடித்தால் வேலை வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது. இந்த பயிற்சியை நடத்தும் ஜெம்மாலஜிக்கள் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா என்ற நிறுவனம் இந்தியாவின் பொருளாதார தலைநகரம் என்றழைக்கப்படும் மும்பையின் ஜாவேரி பஜாரின் பரபரப்பான முன்பாதேவி பகுதியில் அமைந்துள்ளது. இந்த பயிற்சி நிலையம் 1971ல் ஆரமபிக்கப்பட்டது. இந்த மையத்தில் படித்தால் வெளிநாட்டில் நடத்தபெறும் FGA (London) தேர்வில் கலந்து கொள்ளலாம். தேர்வும் நீங்கள் எழுதலாம். கிரேட் பிரிட்டனின் ஜெம்மாலஜிக்கல் சோசியேசன் நடத்தும் இந்த தேர்வுகளிலும் கலந்து கொள்ளும் தகுதி இங்கு படிப்பவர்களுக்கு கிடைக்கிறது. இந்தியாவிலேயே ஆபரண கற்களை முறைப்படி சோதிக்கும் ஆய்வுக் கூடம் இங்கு தான் இருக்கிறது. அதற்கான அதிநவீன சாதனங்களும் கருவிகளும் இங்கு உள்ளது. உலக அளவில் கல் மற்றும் நகை தொழிலுக்கான

பன்னாட்டு அமைப்பு இந்த சோதனைசாலைக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இந்தியாவிலேயே இத்தகைய சிறப்பை பெற்ற பயிற்சி நிறுவனம் இது மட்டும் தான்.

### ஜெம்மாலஜியில் பட்டைய படிப்பு

இதற்கு மூன்றரை மாதங்கள் பயிற்சி பெற வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி ஏப்ரல் ஆகஸ்ட் மாதங்களில் நடத்துகிறார்கள். இது தவிர ஒரு வருடப்படிப்பும் உண்டு. இந்தியாவில் ஒரு வருடம் படிக்க ரூபாய் 6000 செலவாகும். செய்முறை பயிற்சி கட்டணம் ரூபாய் 8000 தனி. ஓவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் சேர்க்கை நடைபெறுகிறது. இதுபோன்ற போட்டி குறைந்த தொழிலில் குறிப்பிட்ட பிரிவினர் மட்டுமே ஈர்க்கப்பட்டு வருகின்றனர். தொழில் ரகசியம் வெளியில் போய்விடாமல் பார்த்துக்கொள்கிறார்கள். ஆனால் ஆர்வம் உள்ள எவரும் இந்த பயிற்சி மற்றும் படிப்பை முடித்து பொருள் ஈட்டலாம் என்பது தான் உண்மை. இது பற்றிய அதிக தகவல்களை பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

The Secretary
Gemology Institute of India
Gurukul chamber
187-189, Mumba Devi Road
Mumbai 400002

## கற்போம் கண்ணாடித் தொழில்

கண்ணாடி என்பது பற்றாக்குறை உள்ள பொருள். இதனை மறுசுழற்சி செய்வது எளிது. எத்தனையோ பேக்கிங் சாதனங்கள் வந்துவிட்டபோதும் கண்ணாடிக்கு உள்ள மதிப்பும் தேவையும் வளர்ந்து கொண்டேதான் போகிறது. கண்ணாடி பயன்படுததி செய்யப்படும் பொருள்களில் மருத்துவம் வேதிப்பொருள் போன்ற துறைகளில் தேவை அதிகம். காரணம் கண்ணாடி பெட்டிகளில் அனுப்பப்படும் எதுவும் கெட்டுப்போவதில்லை. இந்த துறையில் பல வெளிநாடுகள் சிறந்து விளங்குகின்றன. இந்த துறையில் நாமும் பயிற்சியுடன் கூடிய முயற்சி செய்து படித்து பயிற்சி பெற்றால், அதிக பொருள் ஈட்டுவதோடு நமது நாட்டையும் கண்ணாடித் துறையில் முன்னேற்றலாம்.

### கல்வித்தகுதி

10ஆம் வகுப்பு பாஸ் செய்திருக்க வேண்டும். ஆங்கிலத்தை எழுதி படிக்கும் அளவு அறிவு போதுமானது. ஹிந்தி தெரிந்திருந்தால் நல்லது.

### பயிற்சி காலம்

ஒவ்வொரு பயிற்சியும் ஆறுமாத காலம் நடத்தப்படுகிறது. இரண்டு குழுக்களாக தேர்வு செய்து நடத்துகிறார்கள். மார்ச் மாதம் முதல் வாரத்தில் தொடங்கி ஆகஸ்ட் மாதம் இறுதி வாரம் ஒரு குழுவாகவும் செப்டம்பர் முதல் வாரம் தொடங்கி பிப்ரவரி இறுதி வரை ஒரு குழுவாகவும் இரண்டு குழுக்களாக பயிற்சி அளிக்கிறார்கள். கண்ணாடி குழம்பை ஊதும் பயிற்சியும் இதே காலப்படி நடத்துகிறார்கள். ஒவ்வொரு பயிற்சிக்கும் கட்டணம் ரூபாய் 1500.

### விண்ணப்பிக்கும் முறை

மார்ச் மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிக்கு விண்ணப்பித்தால் பிப்ரவரி இரண்டாவது வாரத்திற்குள் விண்ணப்பம் அனுப்பி விட வேண்டும். செப்டம்பர் மாத பயிற்சிக்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே விண்ணப்பம் அனுப்பி விட வேண்டும். பயிற்சி கட்டணததை வங்கி வரையோலையாக செலுத்த வேண்டும். வரையோலையை முதன்மை இயக்குநர் கண்ணாடி தொழில் வளர்ச்சி மையம் என்ற பெயருக்கு பெறப்பட வேண்டும்.

### படித்து முடித்தபின் உள்ள வாய்ப்பு

காத்திருக்க பொறுமை உண்டென்றால் தாமதமானாலும் திறமையை வைத்து முன்னுக்கு வர ஏற்ற தொழில் நிரந்தர வேலையும் கிடைக்கும். அறிவியல் உதவியாளர் என்ற வகையில் நல்ல சம்பளத்துடன் கூடிய வேலைக்கும் போகலாம். அறிவியல் சாதனங்களை தயாரிக்கும் தொழிலையும் செய்யலாம். இது பற்றிய அதிக தகவல்களைப் பெற

Centre of the Development of Glass Industry
A-1/1 Industrial Area
Jalesar Road
Firozabad 283203
Uttarpradesh

## அச்சுத்துறையில் அழகான வேலைவாய்ப்பு

இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் மாற்றங்களுடன் வளர்ந்து வரும் துறையில் அச்சுப் பொறியியல் துறையும் ஒன்று. பொறியியல் கல்லூரிகளில் இடம் கிடைக்கவில்லையே எ்னறு சோர்ந்து நிற்கும் மாணவர்களுக்கான சிறந்த மாற்று படிப்பு. இதில் சேர்ந்து பயிற்சி பெற்று அச்சுத்துறையில் பட்டம் பெறலாம். அச்சுத் தொழில் நாளுக்கு நாள் முன்னேறி கொண்டே வருகிறது. புதமைகளை புகுத்தும் ஆர்வம் இத்தொழிலில் அதிகமாகி வருகின்றது. இந்த தொழிலில் இன்னும் பல புதமைகளை கொண்டுவர முடியும். இதுவும் வேலைவாய்ப்பு அதிகம் உள்ள துறைகளில் ஒன்று. பல வெளிநாட்டு தொழில் நுட்பங்களை சிறந்த முறையில் உடனுக்குடன் அறிமுகப்படுத்தி இத்துறை சிறந்த தரத்துடன் வேகமாக முன்னேறி வருவதுடன் வேலைவாய்ப்பையும் அதிகரிக்கச் செய்கிறது.

### பயிற்சியும் இடமும்

இது மற்ற பொறியியல் தொழில் நுட்ப கல்லூரிகளில் படித்து வாங்கும் இளநிலை பட்டத்திற்கு சமமானது. இந்த பயிற்சி நான்கு ஆண்டு காலத்திற்கானது. ஓவ்வொரு ஆண்டும் செம்ப்படம்பர் மாதம் முதல் வாரத்தில் பயிற்சி ஆரம்பமாகிறது.

### கல்வித்தகுதி

இந்த படிப்பில் சேர்வதற்கு 12 அல்லது இன்டர்மீடியேட் முடித்து இருக்க வேண்டும். வேதியியல் இயற்பியல் கணிதம் ஆங்கிலம் ஆகிய பாடங்களை படித்திருக்க வேண்டும். மதிப்பெண் விகிதம் 55 விழுக்காட்டிற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

### வயது வரம்பு

வயது 18 முதல் 35 வயது வரை இருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு 35 என்பது இப்படிப்பிற்கான சாதகமான செய்தி. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் முதல் தேதி கணக்கின்படி விண்ணப்பதாரரின் வயதை கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள்.

### இடங்களின் எண்ணிக்கை

இந்த பயிற்சியில் ஆண்டு தோறும் 15 மாணவர்களை மட்டுமே சேர்த்துக் கொள்கிறார்கள்.

### விண்ணப்பிக்கும் முறை

தேவையான சான்றிதழ்களின் நகல்கள் உள்ளடக்கிய உங்கள் விபரங்களுடன் கூடிய விண்ணப்பத்தை இரண்டு பாஸ்போர்ட் அளவு புடைப்படங்களுடன் இணைத்து நீங்களே விண்ணப்பிக்கலாம். உங்களின் விண்ணப்பம் ஜூ ன் மாதம் 4 வது வாரத்திற்குள் கிடைக்கும்படி அனுப்பிவிட வேண்டும். இது பற்றிய மேலும் விபரங்களுக்கு :-

Thomson Training Centre In Printing Technology
Thomson Press (India) Limited
Mathura Road, Faridabad 121007, Hariyana.

## டிடெர்ஜென்ட்ஸ் டெக்னாலஜி

சோப்பு தயாரிக்கும் முறையையே பாடமுறையாக வைத்துள்ளதை அறியும் போதே ஆச்சரியமாக இருக்கலாம். பெரிய சோப்பு தயாரிக்கும் நிறுவனங்களில் வேலைக்கு சேர்வதற்கும் அல்லது சொந்தமாக சோப்பு தயாரித்து தொழில் செய்வதாக இருந்தாலும் இந்தப் படிப்பை படிக்கலாம். இந்த படிப்பை முடித்தால் B.Sc., (ஆயில் சோப்ஸ் அல்லது டிடர்ஜென்ட்ஸ்) என்று பட்டம் கொடுக்கிறார்கள். இநதப் படிப்பில் எண்ணெய் சோப்பு டிடர்ஜென்ட் பன்மம் பரப்புப் பூச்சுகள் போன்ற பல பிரிவுகள் இருக்கின்றன.

### கல்வித்தகுதி

இப்படிப்பிற்கு 12 மற்றும் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தான் இடம் கிடைக்கும். எழுத்து தேர்வுகளோ அல்லது நேர்முக தேர்வுகளோ கிடையாது. பட்டப்படிப்பில் வேதியியலை முக்கிய பாடமாகவும் கணிதம் மற்றும் இயற்பியலை துணைப்பாடமாகவும் கற்றிருக்க வேண்டும். பட்டப்படிப்பில் குறைந்த பட்சம் 50 பர்ஸன்ட் விழுக்காடு பெற்றிருக்க வேண்டும். பட்டப்படிப்பான பி.எஸ்.சி. ஆயில் சோப்பு அன்ட் டிடர்ஜென்ட்ஸ் என்ற படிப்பை முடிக்க மூன்று ஆண்டு காலம் ஆகும். இருந்தாலும் ஒரு வருட பட்டயப்படிப்புகளும் ஆறுமாத மற்றும் மூன்று மாத காலத்திற்கான சான்றிதழ் படிப்பகளு் பல்வேறு சிறு சிறு கல்வி நிறுவனங்களில் சிறு தொழில் கல்வியாக கற்றுத்தருகிறார்கள்.

### விண்ணப்பிக்கும் முறை

கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தின் விலை சுமார் ரூபாய் 175 விண்ணப்பம் பெற கல்லூரி முதல்வருக்கு தக்க வங்கி வரைவோலை இணைக்க வேண்டும். விடுதி கட்டணம் மற்றும் கல்விக் கட்டணம் போன்ற பிற விபரங்கள் பெற கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

URS and YRN College of Technology
Chirda – 523157, Prakasm District, Andrapradesh.

## இனிதாக வாழ இன்சூரன்ஸ் துறை அழைக்கிறது

நம் நாட்டில் இந்த தொழிலுக்கான வாய்ப்புகள் எதிர்காலத்தில் அதிக அளவு இருக்கும் என்று நம்பப்படுகின்றது. பல நிறுவனங்கள் இத்துறைக்கு புதிதாக வருவதால் அவர்களுக்கு அதிக அளவு மனித வள தேவைகள் இருக்கும். எனவே இது வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ள துறை. காப்பீட்டு துறைகளில் இரண்டு விதமாக எடுத்துக் கொள்ளலாம். ஒன்று சுயவேலை வாய்ப்பு முறை மற்றொன்று தேவையான தகுதியை வளர்த்துக் கொண்டு வேலையில் சேர்வது.

### வேறுபட்ட காப்பீட்டு படிப்புகள்

இத்துறை தொடர்பாக பல வேறுபட்ட படிப்புகள் உள்ளன. 10 அல்லது 12 படிப்பு முடிந்தவுடன் படிக்கக்கூடிய படிப்புகள் உள்ளன. பட்டப்படிப்பிலேயே பல வகைகளை தேர்ந்தெடுத்து படிக்கலாம். பி.ஏ. பி.எஸ்.சி என்றும் படிக்கலாம். பட்ட மேற்படிப்பாகவும் படிக்கலாம்.

### சான்றிதழ் படிப்பு

10, 12 முடித்தவர்கள் குறுகிய கால சான்றிதழ் படிப்பு படிக்கலாம். இதற்கு சமமான கல்வித் தகுதி உள்ளவர்களும் சேரலாம். இந்த பயிற்சியை நடத்தும் நிறுவனம்

மராத் வாடா பல்கலைக்கழகம்

அவ்ரங்காபாத் - 431002

### பட்டப்படிப்பு

காப்பீட்டு துறையில் பி.ஏ. பி.எஸ்.சி பட்டங்களை பெற படிக்கலாம். வங்கியியல் என்ற பாடத்துடன் சேர்த்தும் படிக்கலாம். இதற்கு 10 12 அல்லது அதற்கு சமமான படிப்பு படித்திருக்க வேண்டும். இதற்கான முகவரி

சென்னை பல்கலைக்கழகம் - சென்னை

Utkal University
Povani Vihar, Bhubaneshwar – 75100, Orissa.

## இதழியல் காட்டும் இனிய வேலை வாய்ப்பு

பத்திரிக்கையியல் துறையில் புகழ்பெற்றது ஜாமியா மிலியா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் மாஸ் கம்யூனிகேஷன் ரிஸர்ச் சென்டர் நடத்தும் படிப்புகள் பெருமை மிக இப்படிப்புகளில் சேருவதற்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் போட்டியிடுகின்றனர். இதற்கு காரணம் தொலைக்காட்சி நிறுவனங்களில் வேலை பெறுவதை இலக்காகக் கொண்டு இங்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டும் பயிற்சிகளை அளிக்காமல் தகவல் தொடர்பு சாதனங்களின் அனைத்துப் பிரிவுகளிலும் பணியாற்றும் வகையில் இங்கு பயிற்சி தரப்படுகின்றது. மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனம் புது தில்லியில் உள்ள Indian Institute of Mass Communication. துகவல் தொடர்புத் துறையில் அதிநவீனப் பயிற்சிகள் மற்றும் ஆய்வுப் பணிகளுக்கான களமாக இக்கழகம் திகழ்கிறது. இங்கு நடத்தப்படும் பட்டயப்படிப்புகள் :-

PG Diploma in Journalism, (English) New Delhi and Dhenkanal (Orissa) Medium – English
PG Diploma in Advertising and Public Relations, New Delhi Medium – English and Hindi
PG Diploma in Radio and Television Journalism , New Delhi Medium – English and Hindi
மேற்கூறப்பட்ட அனைத்துப் படிப்புகளிலும் சேருவதற்கு ஏதேனும் ஒரு பிரிவில் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இளநிலைப் பட்ட வகுப்புகளில் இறுதியாண்டு படிக்கும் மாணவர்களும் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். நுழைவு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர். இப்பயிற்சிகள் குறித்து மேலும் விபரம் அறிய விரும்புவோர் பின்வரும் முகவரியைத் தொடர்பு கொள்ளலாம்.

The Registrar
Indian Institute of Mass Communication
Aruna Asaf Ali Marg, JNU New Campus
New Delhi – 110067

## ஆடிட்டர் ஆவது எப்படி?

சமுதாயத்தில் டாக்டர்கள் இன்ஜினியர்கள் பேராசிரியர்கள் போன்றவர்களைப் போல அதிக அந்தஸ்து உள்ளவர்களில் ஆடிட்டரும் ஒருவர். இதற்கான படிப்பை சி.ஏ என்று அழைக்கின்றோம்.

### கல்வித்தகுதி

சி.ஏ படிக்க குறைந்த பட்சம் 12ம் வகுப்பு படித்திருந்தாலே போதுமானது. மேலும் இந்த படிப்பிற்கு குறைந்த மதிப்பெண் எதுவும் வரையறுக்கப்படவில்லை. வயது உச்சவரம்பும கிடையாது.

### எப்படி படிக்கலாம்

இந்திய சார்ட்டாட் அக்கவுண்டண்ட் நிலையம் நடத்தும் 10 மாத அடிப்படைப் பயிற்சி (ஃபவுண்டேஷன் கோர்ஸ்) வகுப்பில் சேர்ந்து தேர்ச்சி பெற வேண்டும். இந்நிலையம் நடத்தும் அஞ்சல் வழிப்பயிற்சியோ அல்லது இந்நிலையம் அங்கீகரித்துள்ள கல்வி நிறுவனங்களில் நேரடிப் பயிற்சியோ பெற்றால்தான் அடிப்படைத் தேர்வை எழுத முடியும். பட்டதாரி மாணவர்கள் சி.ஏ படிப்பில் சேர்ந்தால் அவர்கள் அடிப்படை பயிற்சித் தேர்வை எழுதத் தேவையில்லை. அடிப்படைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றதும், சார்ட்டர்ட் அக்கவுண்டண்டிடம் பயிற்சி பெற (Articled Clerk) மாணவர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும். அத்துடன் மூன்று ஆண்டு காலம் பாடப்பயிற்சியும் உதவித் தொகையும் கிடைக்கும். முதல் 12 மாத காலத்திற்குப் பிறகு இன்டர்மீடியட் தேர்வுகளையும் இரண்டரை ஆண்டுப் பயிற்சிக்குப் பிறகு இறுதித்தேர்வுகளையும் எழுதலாம். இறுதித்தேர்வு எழுதி பாஸ் செய்து விட்டால் சார்ட்டர்ட் அக்கவுண்டண்டாகப் பணியாற்றலாம். இப்படிப்பில் சேர்வது எளிது. ஆனால் திறமையும் இடைவிடாத முயற்சியும் கடும் உழைப்பும் இருந்தால் மட்டுமே சி.ஏ படிப்பில் தேர்ச்சி பெற முடியும். விபரங்களுக்கு அனுக வேண்டிய முகவரி

இந்திய சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் நிலையம்
22 உத்தமர் காந்தி சிலை
நுங்கம்பாக்கம்
சென்னை - 600 034

## புள்ளியியல் (Statistics) படியுங்கள் பெரும் புள்ளி ஆகுங்கள்

ஐஐடி இந்திய அறிவியல் கழகம் இந்திய நிர்வாகக் கழகத்தைப் போன்று இந்தியாவில் பெருமை மிகு கல்வி நிறுவனங்களில் ஒன்று கல்கத்தாவில் உள்ள இந்திய புள்ளியியல் கழகம் Indian Statistical Institute – ISI இங்கு படித்து முடிக்கும் மாணவர்களுக்கு மிகச் சிறப்பான வேலைவாய்ப்புகள் எளிதாக கிடைக்கின்றன. இக்கழகத்தில் இளநிலை முதநிலை மற்றும் ஆய்வுப் படிப்புகளில் மாணவர்கள் சேரலாம். இங்கே படிக்கும் மாணவர்களுக்கு அரசின் உதவித் தொகையும் கிடைக்கிறது.

### 3 Year B. Statistics (Hons)

ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்களைப் படித்து 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். உதவித் தொகை மாதம் ரூ. 500

### 2 Year M. Statistics (Hons)

கணிதம் அல்லது புள்ளியியலில் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். உதவித் தொகை மாதம் ரூ. 800

### 2 Year Master of Science (M.S) in Quantitative Economics :

பொருளாதாரம் கணிதம் புள்ளியியல் அல்லது இயற்பியலில் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். இருப்பினும் கணிதம் மற்றும் பொருளாதாரத்தில் நல்ல தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். உதவித் தொகை மாதம் ரூ 800

### 2 Year M.Tech in Computer Science :

கணிதம் புள்ளியியல் இயற்பியல் எலெக்ட்ரானிக் சயின்ஸ் கம்ப்யூட்டர் சயின்ஸ் எம்.பி.ஏ எம்.சி.ஏ பி.இ. பி.டெக் இவற்றில் ஏதாவது ஒன்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இப்பிரிவில் சேரவிரும்புவோர் பட்ட வகுப்பில் கணிதத்தை முதன்மைப் பாடமாகவோ அல்லது துணைப் பாடமாகவோ படித்திருக்க வேண்டும். உதவித் தொகை மாதம் ரூ. 1800. கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள வகுப்புகளின் இறுதியாண்டில் படிக்கும் மாணவர்களும் மேற்கூறப்பட்ட பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கலாம். 12 மற்றும் பட்ட வகுப்புகளில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும் எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகளில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையிலும் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர். இப்படிப்புகள் குறித்து மேலும் விபரம் அறிய விரும்புவோர் பின்வரும் முகவரியை தொடர்பு கொள்ளலாம்

Head SQC Unit
Indian Statistical Institute Chateau
D’Ampa (I Floor)
110 Nelson Manickam Road
Aminjikarai – Chennai 600029

## தொழிலாளர் நிர்வாகப் படியுங்கள்

தொழிலாளர் நிர்வாகப் படிப்பு என்பது நம் நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் அதிக வரவேற்பை பெற்ற படிப்புகளில் ஒன்றாகும். வெளிநாடுகளில் உள்ள பெரிய கம்பெனிகளில் அனுபவத்துடன் கூடிய இப்பட்டதாரிகளுக்கு உடனடி வேலையும் உரிய ஊதியமும் எளிதில் கிடைக்கிறது. தொழிலாளர் நிர்வாகம் குறித்த பட்டய பட்ட மற்றும் பட்ட மேற்படிப்புகளை சென்னையில் உள்ள தமிழ்நாடு இன்ஸ்டிடியூட் ஆஃப் லேபர் ஸ்டடிஸ் வழங்குகிறது. இப்பிரிவு மூன்றிலும் ஆங்கில வழிக் கல்வி மட்டுமே பின்பற்றப்படுகின்றது.

Bachelor of Labour Management – BLM – 3 ஆண்டுப் படிப்பு . 50 சதவீத மதிப்பெண்ணுடன் 12 அல்லது அதற் குஇணையான கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும்.

Master of Labour Management – MLM – 3 ஆண்டுப் படிப்பு. ஏதேனும் ஒரு பிரிவில் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

PG Diploma in Labour Administration – ஏதேனும் ஒரு பிரிவில் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்

மேற்கூறப்பட்ட கல்வித் தகுதிக்கான இறுதித் தேர்வை எழுதியிருக்கும் மாணவர்களும் இப்படிப்புகளில் சேர விண்ணப்பிக்கலாம். இப்படிப்புகள் குறித்து மேலும் விபரம் அறிய விரும்புவோர் பின்வரும் முகவரியை தொடர்பு கொள்ளலாம்:

The Director

Tamilnadu Institute of Labour Studies

Chennai – 5

## கூட்டுறவு பயிற்சி (Co-Operative Training)

கூட்டுறவு பயிற்சிக்கான டிப்ளமோ படிப்பபை 2 ஆண்டுகள் படிக்க வேண்டும். இப்பயிற்சி முடித்தவர்களுக்கு அரசின் கூட்டுறவு வங்கிகளிலும் கூட்டுறவு விநியோக சங்கங்களிலும் வேலை வாய்ப்பிற்கு சாத்தியம் உள்ளது. அதிகமான கல்வி நிறுவனங்கள் இத்துறைக்கான பயிற்சி அளித்து ஒவ்வொரு ஆண்டும் மிக அதிக மாணவர்களை வெளியில் அனுப்பினாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக தொடர்ந்து வேலையில் அமர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

### கல்வித்தகுதி

12 அல்லது சமமான படிப்பு 12ல் வணிகம் மற்றும் பொருளாதார பாடங்களை படித்தவர்கள் இத்துறையில் எளிதாக நுழையலாம்.

### கற்றுத்தரும் குறிப்பிடத் தகுந்த இடங்கள்

நடேசன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மானேஜ்மென்ட் அண்ட் கோ

ஆபரேடிவ் ட்ரெய்னிங்

அண்ணா நகர் - சென்னை - 40

அறிஞர் அண்ணா மானேஜ்மென்ட் அண்ட் கோ ஆபரேட்டிவ் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்

காஞ்சிபுரம்

வேலூார் மானேஜ்மென்ட் அண்ட் கோ ஆபரேட்டிவ் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்

வேலூா்

நாச்சியப்பா மானேஜ்மென்ட் அண்ட் கோ ஆபரேட்டிவ் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்

சேலம்

இராமலிங்கம் மானேஜ்மென்ட் அண்ட் கோ ஆபரேட்டிவ் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்

கோயம்புத்தூா்

எம். குமாரசாமி மானேஜ்மென்ட் அண்ட் கோ ஆபரேட்டிவ் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்

திருநெல்வேலி

சங்கரலிங்கனாா் மானேஜ்மென்ட் அண்ட் கோ ஆபரேட்டிவ் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்

சாத்தூா்

பாண்டிய நாடு மானேஜ்மென்ட் அண்ட் கோ ஆபரேட்டிவ் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்

மதுரை

## வெளிநாட்டு வணிகம் (Foreign Trade and Export Management)

தாராளமயமாக்கல் தனியாா்மயமாக்கல் காரணமாக இந்திய ஏற்றுமதித் துறை புதிய திசையை நோக்கிச் செல்கிறது. இந்திய ஏற்றுமதியாளா்கள் உலக மாா்க்கெட்டில் தடம் பதிக்கிறாா்கள். இதனால் இந்தத்துறை வல்லுநா்கள் ஏற்றுமதி நிா்வாகம், கஸ்டம்ஸ், அந்நியச் செலாவணி, பேக்கேஜிங் போன்ற பணிகளுக்குத் தேவைப்படுகிறாா்கள்.

### கல்வித்தகுதி

இந்த படிப்பிற்கான குறைந்த பட்ச தகுதி 12 தேறியிருக்க வேண்டுமென்றாலும் பட்டப்படிப்பு முடித்த பிறகு இத்துறையில் பயிற்சி பெற்று சான்றிதழ் படிப்போ அல்லது பட்டய படிப்போ முடிப்பது எதிா்காலத்தில் மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கும்.

### எவ்வளவு காலம் படிப்பது

இப்படிப்பில் குறுகிய கால சான்றிதழ் படிப்பு. பட்டயப்படிப்பு மற்றும் பட்டப்படிப்பு என்று பல நிலைகள் இருப்பதால் படிப்பிற்கு ஏற்றவாறு படிக்கும் காலம் வேறுபடும்.

### என்ன படிப்பது?

Certificate Courses in Export Management

Certificate Course in Cargo Management

Certificate Course in Shipping and Documentation

### கற்றுத்தரும் குறிப்பிடத்தக்க இடங்கள்

Indian Institute of Foreign Trade, New Delhi

Delhi School of Economics, New Delhi

Indian Institute of Packaging Mumbai

University of Delhi, New Delhi

Indian International Trade Centre, Mumbai

## பொறுப்பான பதவி பெற பொருளாதாரம் படிக்கலாம்

பொருளாதாரம்

இந்த வார்த்தைதான் வாழ்க்கையை திரும்பிப் பார்க்க வைக்கிறது. சோம்பலை முறிக்கிறது. தனி மனிதன் குடும்பம், அமைப்பு, சமூகம் தேசம் என எல்லாம் சார்ந்து நிற்கும் அத்தியாவசியமான துறை இது. காலங்கள் மாறினாலும் மாறாத செல்வாக்கு பெற்றிருக்கும் பொருளாதாரம் பற்றிப் படிப்பதற்காக அயல்நாடுகளுக்குச் செல்வது இந்தியாவில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பொருளாதாரம் சம்பந்தப்பட்ட படிப்புகள் ஆறு மாத சான்றிதழ் படிப்பு ஓராண்டு டிப்ளமோ படிப்பு என பலவகை இருந்தாலும் தமிழக கல்லூரிகளில் பி.ஏ எக்னாமிக்ஸ் என்ற பட்டப்படிப்பு தான் மிகச் சிறப்பானதாக இருக்கிறது. இந்தத்துறையில் வங்கியியல் உலகப் பொருளாதாரம், தொழில் பொருளாதாரம் தொழிலாளர் பொருளாதாரம், விவசாய பொருளாதாரம் பொது நலப் பொருளாதாரம் பொதுநிதி எக்னோமெட்ரிக்ஸ் காந்திய பொருளாதாரம் பொருளாதார மானுடவியல் பொருளாதார புவியியல் என்று பல கிளைத் துறையில் உள்ளன. இதில் பி.ஏ பி.எஸ்.சி போன்ற பட்டப்படிப்புகளும் முதுநிலை பட்டயப்படிப்புகளும் உள்ளன. பல கல்லூரிகளில் எக்னாமிக்ஸ் படிப்புக்கு பெரிய போட்டா போட்டியே நடக்கிறது. பி.ஏ பொருளாதாரம் படித்துவிட்டு பிறகு எம்.ஏ எக்னாமிக்ஸ் முடித்து அதில் டாக்டர் பட்டம் பெறுபவர்கள் நாட்டின் தலைசிறந்த பொருளாதார நிபுணர்களாகத் தலைநிமிரும் வாய்ப்புகள் உள்ளது. முன்னாள் மத்திய நிதியமைச்சர்கள் மன்மோகன் சிங்கும் சிதம்பரமும் இத்துறையிலிருந்து தான் பொது வாழ்வுக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் மட்டுமா உலகின் பெரும்பாலான நிதியமைச்சர்கள் பொருளாதாரத் துறையில் ஆய்வுகளை முடித்துதான் இன்று உலகின் பொருளாதாரத்தை இயக்கி கொண்டிருக்கிறார்கள். சரி இனி கூடுதல் விவரங்களுக்குச் செல்வோம். இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை ஈர்ப்பதற்காகவே மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ் காத்துக் கொண்டிருக்கிறது. பொருளாதாரப் படிப்பகளுக்குச் சிறந்த மாணவர்களை ஈர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சென்னை கோட்டூர்புரத்தில் மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எக்னாமிக்ஸ் கல்வி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. கணிதம், புள்ளியியல், கம்ப்யூட்டர் சயின்ஸ், இயற்பியல் போன்ற அறிவியல் பாட மாணவர்களும் பி.ஏ பொருளாதாரம் பி.காம். பி.பி.ஏ போன்ற பட்டம் படித்த மாணவர்களும் இதில் சேரலாம். பிளஸ் டூ நிலையில் கணிதத்தை ஒரு பாடமாக எடுத்திருக்க வேண்டும். இதற்குத் தனியே நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. மாணவர் சேர்க்கைப்பட்டியலில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு தலா ரூ 1500 வீதம் உதவித் தொகை வழங்கப்படும். பி.எச்.டி பட்ட ஆய்வை மேற்கொள்வதற்கான மையமாக இக்கல்வி நிலையத்தை அண்ணா பல்கலைக்கழகமும் சென்னை பல்கலைக்கழகமும் அங்கீகரித்துள்ளன. பொறியியல் துறையினருக்காக எம்.டெக் இன்டஸ்ட்ரியல் எக்னாமிக்ஸ் (3 செமஸ்டர் படிப்பு) கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. அகில இந்தியத் தொழில நுட்பக் கல்வி கவுன்சிலின் அனுமதி கிடைத்ததும் இப்படிப்பு தொடங்கப்படும். மேக்ரோ பைனான்ஸ், பைனான்சியல் அனாலிஸிஸ், ரிஸ்க் மேனேஜ்மென்ட் போன்ற துறைகளில் முதநிலை டிப்ளமோ படிப்புகளைத் தொடங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்துறை குறித்து அதிக விபரம் பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

The Director

The Madras School of Economics

Kotturpuram

Madras.

எந்தப்படிப்பும் முறைப்படி படிக்காதவர்கள் கல்வியறிவு இல்லாத அதே நேரத்தில் அனுபவ அடிப்படையில் சமையல், சலவை போன்ற தொழிலாளர்கள், தெரிந்தவர்கள் வேலைக்கு இங்கு முயற்சிக்கலாம்.

Head Quarters
Artillery Centre
Hyderabad – 500 031

## சமூக சேவகர்களாக வேண்டுமா.. சமூக சேவை (Social Service) படியுங்கள்

சமூக சேவையில் நாட்டம் உள்ளவர்களுக்கு அதிக திருப்தியும் அபரிமிதமாக அமைதியும் எளிதில் கிடைக்கிறது. சமூக சேவையை சரியான விதத்தில் செய்து முடிப்பவர்களின் புகழ் உள்நாடுகளில் மட்டுமல்லாது உலக அளவிலும் சென்றடைவது ஆச்சரியம் இல்லாத ஒன்று. இக்கல்வி பற்றிய சில விவரங்களை இங்கே காணலாம். பண்ணாட்டு சேவை நிறுவணங்களான (WHO, UNICEF) போன்றவை மட்டுமல்லாது நம் நாட்டு கல்வி நிறுவணங்கள் ஆலோசனை மையங்கள் மருத்துவமனைகள், சிறைச்சாலைகள், குற்றத்தடுப்பு பள்ளிகள், திட்டங்கள், அரசு நிறுவனங்கள் தன்னார்வ நிறுவனங்கள் (NGO) போன்றவற்றிலும் நிறுவனங்களிலும் சமூக சேவகர்களில் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. சமூக சேவை அமைப்புகள் பங்கேற்ற மாணவர்களுக்கு அட்மிஷனின் போது கூடுதல் மதிப்பெண்கள் கிடைக்கின்றன.

### என்ன படிப்பது?

B.A., in Social Work
Community Social Work.
Bachelor in Social Work
Family and Child Welfare
School/Educational Social Work
Labour Welfare and Industrial Relation
Urban and Rural Community Development

### கல்வித்தகுதி

இப்படிப்பில் சேர்வதற்கு குறைந்த பட்சம் 12 தேறியிருக்க வேண்டும்.

### கற்றுத்தரும் குறிப்பிடத் தகுந்த இடங்கள்

காவேரி மகளிர் கல்லூரி - திருச்சி
மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் சோஷியல் வொர்க் - சென்னை
சென்னை பல்கலைக்கழகம் - சென்னை
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் - மதுரை
பி.எஸ்.ஜி காலேஜ் ஆஃப் சோஷியல் வொர்க - கோவை

## வேளாண் மற்றும் வேளாண் தொழில் துறைகள் (Agriculture Allied Industries)

வேளாண் வணிகம், வேளாண் தொழிற்சாலைகள், வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி, வேளாண் பத்திரிக்கையியல் என்று வேளாண்துறை பல பிரிவுகளாக விரிவடைந்து வருகிறது. மாநில அரசின் வேளாண்துறை, நேஷனல் ஸீடு (Seed) கார்ப்பரேஷன் CASE, ஸ்டேட் ஃபார்ம் கார்ப்பரேஷன் CASE வேர்ஹவுசிங் கார்ப்பரேக்ஷன் ஃபுட் கார்ப்பரேக்ஷன் உணவு சார்ந்த தொழிற்சாலைகள், உரத் தொழிற்சாலைகள், பால் மற்றும் கோழிப் பண்ணை நிர்வாகம் ஏற்றுமதி நிறுவனங்கள் தரக்கட்டுப்பாடு தோட்டங்கள் ஆகியவற்றில் வேலைவாய்ப்பு உண்டு.

### நுழைவுத் தேர்வு முறை

புது டில்லியில் உள்ள இந்தியன் கவுன்சில் ஆஃப் அக்ரிகல்ச்சுரல் ரிசர்ச் நடத்தும் நுழைவுத் தேர்வு எழுதவேண்டும். இயற்பியல் வேதியியல் உயிரியல் கணிதம் வேளாண்மை பாடங்களிலிருந்து கேள்விகள் கேட்கப்படும் விவசாயத்தில் பி. ஈ பி. எஸ்ஸி பட்டம் பெறலாம:

### கற்றுத்தரும் இடங்கள்

வேளாண்மைக கல்லூரி ஆராய்ச்சி மையம்

(கோவை, மதுரை, கிள்ளிக்குளம், திருச்சி)

பொறியியல் கல்லூரி (கோவை, குமுலூர்)

ஃபாரஸ்ட் காலேஜ் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் (மேட்டுப்பாளையம்)

ஹார்டிகல்சர் காலேஜ் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் (பெரியகுளம்)

Centre for Management in Agriculture, IIM, Ahmedabad

Universal College of Agriculture, Calcutta

Centre for Agriculture, Aligarh

Allahabad Agricultural Institute, Allahabad

Institute of Agricultural Sciences, Varanasi.

## நீங்கள் கிராம மேம்பாட்டு ஆர்வலரா இதோ நவீன படிப்பு

கிராமப்புற பிண்னனி உள்ளவர்கள் ஆர்வத்தோடு ஈடுபட ஏற்ற துறை இது. இன்றைய சூழ்நிலையில் ஒரு நாட்டின் மேம்பாடு கிராம முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டது என்று அரசு ஏற்றுக் கொண்டுவிட்டது. அதன் காரணமாக கிராமங்களை முன்னேற்றுவதற்கு அரசு பெரும் தொகைகளை முதலீடு செய்கிறது. இந்நிலையில் நம்முடைய கிராமங்களை தயாராக்கி அதிலே வேலைவாய்ப்பை பெறுவதை அனுகூலமாக்கிக்க கொள்ளலாம். எதிர் காலத்தில் கிராமங்களில் பயிற்சி பெற்ற நிர்வாகிகளின் தேவை ஆண்டு ஒன்றுக்கு பத்து ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்கும் என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

### தேவை எப்படி இருக்கும்

கிராமப்புற மேம்பாட்டில் பயிற்சி பெற்றவர்களுக்கு பல வாய்ப்புகள் உள்ளன. கிராமப்புறங்களில் பல தன்னார்வத் தொண்டு நிறுவணங்கள் உள்ளன. இவைகளுக்கு வேலை செய்ய பயிற்சி பெற்றவர்கள் தேவைப்படுகின்றனர். அரசின் பல்வேறு திட்டங்களுக்கும், அரசின் உதவி பெறும் பல அமைப்புகளும் அதிகரித்து வருகின்றன. இவைகளில் வேலை வாய்ப்புகளை பெறலாம். கிராமப்புறங்களில் மட்டுமே நடத்தக்கூடிய பல தொழில்கள் உள்ளன. இம்மாதிரியான இடங்களில் முயற்சிக்கலாம். தாராளமயமாக்கலுக்கு பிறகு பன்னாட்டு நிறுவனங்கள் நம்நாட்டு நகர்புறம் தவிர கிராமங்களிலும் காலூன்ற முயன்று வருகின்றன. கிராமப்புற நிர்வாகம் தெரிந்தவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

### என்ன படிக்கலாம்

வேளாண் தொழிலில் சான்றிதழ் படிப்புகளும் வைத்துள்ளார்கள். இதில் பழங்கள், காய்கறிகள், பக்குவம் செய்வது பற்றியும், கோழிப்பண்ணை, பால் பண்ணை பொன்றவற்றை அமைக்கவும் பயிற்சி தருகிறார்கள். இது தவிர நறுமணப் பொருள்கள், எண்ணை வித்துக்கள், உணவு தாணியங்க்ள பற்றிய பயிற்சியும் தருகிறார்கள். கிராம நோக்கில் உள்ள பட்டப்படிப்பை பல பல்கலைக்கழகங்கள் நடத்துகின்றன. கிராம நிர்வாக நோக்கில் பல பட்டப்படிப்புகள் உள்ளன. இப்படிப்பில் கிராம முன்னேற்றம் பற்றியும் கிராமியத் தொழில்கள் மற்றும் வளர்ச்சிகள் பற்றியும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இந்தப் பட்டப்படிப்பை பல்வேறு அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்கள் நடத்துகின்றன.

### பட்டயப்படிப்பு

பட்டப்படிப்பு முடித்தவுடன் படிக்க வேண்டிய பட்டயப்படிப்பு இது. இது கிராம மேளாண்மை மற்றும் நிர்வாகம் பற்றியது. இது முதநிலைப்பட்டத்திற்கு நிகரானது. இப்படிப்பில் 50 சதவீதம் இதற்கான மதிப்பெண் தகுதி. புனேயில் யக்ஷ்வந்த் ராவ்சவான் ஆக்ஷாடா என்ற அமைப்பு கிராம சம்மந்தப்பட்ட 100க்கும் மேற்பட்ட படிப்புகளை நடத்துகிறது. கிராம மேலாண்மையின் பல்வேறு அங்கங்களிலும் நடைமுறைக்கேற்ப பாடங்களை நடத்துகிறார்கள். கிராம வங்கியியல், பொருளாதாரம், கிராம முன்னேற்றம் போன்ற துறைகளிலும் பயிற்சியளிக்கப்படுகின்றன. இது போன்ற பயிற்சிகள் தேவை அடிப்படையில் நன்கு திட்டமிட்டு நடத்தப்படுவதால் பயிற்சியை முடித்தவுடன் வேலை பெறுதல் என்பது எளிதான ஒன்றாகிவிடுகின்றது.

பயிற்சி நடத்தும் நிறுவணங்களில் சில :-

Gandhigram Rural Institute, Deemed University

Gandhigram – Dindugal (District). Tamilnadu.

Agri Business Management

Govind Ballabh University of Agriculture and Technology

Pantanagar.

அறிவியல் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயனுள்ள தகவல்களை அளிக்கும் அமைப்பு இது. மாணவர்களானாலும் ஆசிரியர்களானாலும் இதில் பங்கெடுத்துக்கொள்ளலாம்.

All India Science Teachers Association

Bharatiya Vidya Bhavan

Kasturba Gandhi Marg

New Delhi- 1

## படிப்போம் பயோகெமிஸ்ட்ரி

1903ம் ஆண்டில் ஜெர்மனி அறிவியல் அறிஞர் கார்ல் நியூபெர்க் என்பவரால் உருவாக்கப்பட்ட துறை பயோகெமிஸ்ட்ரி, ஃபிஸியாலஜி செல் மற்றும் மாலிக்யூலர் பயாலஜி, ஃபார்மகாலஜி, ஜெனட்டிக்ஸ், இம்யூனாலஜி, டாக்ஸிகாலஜி, பயோடெக்னாலஜி, மைக்ரோபயாலஜி, நியூரோபயாலஜி, உள்ளிட்ட லைஃப் சைன்ஸ் துறையின் பல்வேறு பிரிவுகள் குறித்த அறிவையும் அளிக்க கூடியது பயோகெமிஸ்ட்ரி. சேன்னைப் பல்கலைக்கழகத்தின் கிண்டி பிரிவு பயோகெமிஸ்ட்ரி மற்றும் மாலிக்யூல் பயாலஜியில் முதநிலைப் படிப்புகளை வழங்குகிறது. பயோகெமிஸ்ட்ரியில் இளநிலை பட்டம் பெற்றவர்களும் இப்படிப்பில் சேரலாம். 12ம் வகுப்பு சய்ன்ஸ் பிரிவில் படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லையெனில் பி.எஸ.சி. பயோகெமிஸ்ட்ரியில் சேரலாம்.

### கல்வித்தகுதிகள்

பயோகெமிஸ்ட்ரியில் சேர விரும்பும் மாணவர்கள் 12வது படிக்கும் போதே வேதியியல் இயற்பியல் மற்றம் விலங்கியல் பாடங்களைத் தெளிவாகப்படித்து வர வேண்டும். குறிப்பாக ஆர்கானிக் வேதியியல் பிரிவை மிகத் தெளிவாகப் படித்திருக்க வேண்டும்.

### படித்த பின் உள்ள வாய்ப்பு

இப்பிரிவில் படித்து முடிக்கும் மாணவர்களுக்கு பல்வேறு தொழிலகங்களில் சிறப்பான வேலைவாய்ப்புகள் கைவசமாகின்றன. பயோகெமிஸ்ட்ரி முடித்த பிறகு இத்துறை சார்ந்த ஆய்வு மையங்கள், மருந்து தயாரிப்பு நிறுவணங்கள் சி.எஸ்.ஆர் ஐ.சி.எம் ஆர் ஆய்வு நிலையங்கள் உள்ளிட்ட அமைப்புகளில் நல்ல வேலை கிடைக்கிறது. உதவித் தொகையுடன் ஆய்வுப்பணியையும் மேற்கொள்ளலாம். ஆய்வுப்பணியை முடித்தவர்களுக்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பெரும் வரவேற்பு உள்ளது.

### பயிற்றுவிக்கும் சில கல்வி நிறுவனங்கள்

காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை

சென்னை பல்கலைக்கழகம், சென்னை

பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சி மற்றும் பல்வேறு சுயநிதி கல்லூரிகள்.

## பயனுள்ள பயோஃபிஸிக்ஸ் மற்றும் கிரிஸ்டலோகிராஃபி

படிகங்களின் முப்பரிமாண அமைப்பைக் கண்டறிந்து அதன்மூலம் நவீன மருந்துகளைக் கண்டறியும் வித்தைக்கு வித்திட்டது பயோஃபிஸிக்ஸ் எனப்படும் உயிர் இயற்பியல் துறை எனலாம். படிக

மூலக்கூறுகளின் வினைப்படம் தொகுதிகளை (Functional Group) கண்டறிந்து அவற்றின் செயல் திறனை அதிகரிக்கும் உத்திகளைக் கண்டறியும் ஆய்வுகளை இத்துறை மேற்கொண்டுள்ளது.

### கல்வித்தகுதிகள்

இயற்பியல் வேதியியலில் இளநிலைப் பட்டம் பெற்றவர்களும் அறிவியலின் ஏதாவது ஒரு பிரிவை முதல் பாடமாகவும் கணிதத்தைத் துணைப்பாடமாகவும் படித்த மாணவர்களும் எம்.எஸ்.சி பயோ∴பிஸிக்ஸ் மற்றும் கிரிஸ்டலோகிரா∴பி படிப்பில் சேரலாம். இளநிலைப்பட்ட வகுப்பில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இப்பிரிவில் சேருவதற்கான எழுத்துத்தேர்வு ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். நேர்முகத் தேர்வு கிடையாது.

### படித்தபின் உள்ள வாய்ப்பு

இங்கு படித்து முடிக்கும் மாணவர்களுக்கு பயோகெமிஸ்ட்ரி மற்றும் பயோ∴பிஸிக்ஸ¤ டன் தொடர்புடைய அனைத்து ஆய்வு மையங்களிலும் நல்ல ஊதியத்துடன் சிறப்பான வேலைகள் கிடைக்கின்றன. அத்துடன் இத்துறை நிபுணர்களுக்கு வெளிநாடுகளில் மிகுந்த வரவேற்பு உள்ளது. எனவே இத்துறையில் படித்து வெளியேறும் மாணவர்கள் வேலை குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை.

### எங்கே படிக்கலாம்

சென்னைப் பல்கலைக்கழகத்தின் கிண்டி வளாகத்தில் பயோ∴பிஸிக்ஸ் மற்றும் கிரிஸ்டலோகிரா∴பி துறை உள்ளது. இத்துறையில் எம்.எஸ்.சி எம். ∴பில் மற்றும் பி.எச்.டி படிப்புகளை இத்துறை வழங்குகிறது. கல்கத்தாவில் உள்ள சாகா இன்ஸ்டிடியூட் ஆப் நியூக்ளியர் ∴பிஸிக்ஸ் மட்டுமே பயோ∴பிஸிக்ஸ் ல் எம்.எஸ்.சி மற்றும் எம்.பில் படிப்புகள் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் வாரத்தில் இப்படிப்புக்கான மாணவர் சேர்க்கை குறித்த விளம்பரம் வெளியாகும் சென்னையில் எழுத்துத் தேர்வு நடைபெறும்.

## விரைவான வேலைவாய்ப்புக்கு வெற்றிடக்கல்வி (Vaccum Technology)

இது ஒரு ஆச்சரியமான துறை. ஆம் வெற்றிடத்தைப் பற்றி என்ன படிப்பு உள்ளது என்று கேட்கத் தோன்றும். ஆனால் வெற்றிடத் தொழில் நுட்பம் என்பது ஒரு புதுமையான படிப்பு. தற்பொழுது மற்றும் எதிர்காலத்தில் இதற்கு அதிக வாய்ப்புள்ளதை கருத்தில் கொண்டு இந்த துறையை கொண்டு வந்துள்ளார்கள். இன்றைய காலகட்டத்தில் பல பணிகளுக்கு வெற்றிடச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது போன்ற சாதனங்கள் அதிகரித்து வரும் அதே வேளையில் இதனை பாதுகாத்து பராமரிக்க தொழில் நுட்பம் தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிக மிக குறைவு. ஆதனால் தான் இப்பயிற்சி மிகவும் எதிர்காலமுள்ள ஒரு படிப்பாக கருதப்படுகிறது. இந்த படிப்பிற்கு **Vaccum Technology** என்று பெயர். இது ஒரு Diploma படிப்பு. இது ஒரு வருட காலம் படிக்க வேண்டும்.

### எந்த துறைகளுக்கு இப்படிப்பு உதவும்

இப்பயிற்சியில் தரப்படும் தொழில் நுட்பம் பல துறைகளில் பயன்படுகிறது. மின்னனு சாதனங்கள் தயாரிப்பிலும் உலோகம் கண்ணாடி போன்ற மேற்படிப்புகளின் மேல் பூச்சுகளை உருவாக்கவும் இத்தொழில் நுட்பம் பயண்படுகிறது. இந்த தொழில் நுட்பம் வாகன தடை சாதனங்களிலும்

பயன்படுகிறது. வீடுகள் அலுவலகங்களில் இயங்கும் பல பொருள்கள் வந்துவிட்டன. இதன் பயன்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க இதன் தொழில் நுட்பம் தெரிந்த வல்லுநர்களுக்கு வாய்ப்பும் அதிகரிக்கும். இது மாதிரியான புதுப்புது துறைகள் ஆரம்பம் ஆகும் போது விரைவில் இவற்றில் சேர்ந்து பயிற்சி பெற்று அதை பயன்படுத்திக் கொள்ளலாம்.

### கல்வித்தகுதி

இக்கல்வியில் சேர விரும்பும் மாணவர்கள் பி.எஸ்.சி. பட்டம் பெற்ற மாணவர்களாகவோ அல்லது டிப்ளமோ முடித்த மாணவர்களாகவோ இருக்க வேண்டும். பட்டப்படிப்பு முடித்தவர்கள் குறைந்த பட்சம் 5.5 சதவீதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். அட்டவணை வகுப்பினருக்கு மதிப்பெண்களில் சலுகை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

### தேர்வு பெறும் முறை

இப்பயிற்சியில் சேர்வதற்கு முதலில் எழுத்து தேர்வும் இதில் வெற்றி பெற்ற பிறகு நேர்முகத் தேர்விலும் ஆஜராக வேண்டும். இத்தேர்வுகள் மே மாதம் அல்லது ஜூ ன் மாதங்களில் நடத்தப்படலாம். இப்படிப்பில் வெளிநாட்டு மாணவர்கள் 4 பேருக்கும் இடம் உள்ளது. மாணவர்கள் உடல் ஊனமுற்றோர்கள் போன்றவர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆட்டவணை இனத்தினருக்கும், இராணுவத்தினரின் குடும்பத்தினருக்கும் 7.5 சதவீத இட ஒதுக்கீடு இந்த பயிற்சியில் உண்டு. இந்த பயிற்சியை ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து படிக்கலாம். இப்பயிற்சிக்கு ஆண்டு கட்டணமாக ரூ. 5000 கட்ட வேண்டும்.

### விண்ணப்பிப்பது எப்படி?

ரூபாய். 300க்கு வங்கி வரைவோலை பெற்று அனுப்பி வைத்து விண்ணப்பத்தை இப்பயிற்சி பற்றிய விளக்க குறிப்புகளுடன் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டு கேட்கப்படும் தேதிக்குள் கிடைக்கும்படி செய்து விட வேண்டும். இது குறித்து மேலும் விளக்கம் பெற :

Sri Venkateswara University of Engineering College

Tirupati – 517502

Andrapradesh.

தமிழ்நாடு அம்பேத்கார் சட்டபல்கலைக் கழகத்தில் பொது இன்ஷூ ரன்ஸ் சட்டம் மற்றும் நடைமுறை என்ற முதநிலை டிப்ளமோ உள்ளது. யுடைடெடு இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் தொலை நிலை கல்வி முறை மூலம் நடத்தப்படும். இந்த ஓராண்டு படிப்பில் பட்டதாரிகள் சேரலாம். ஆண்டுக்கட்டணம் ரூ.6300. இப்படிப்பு படித்தவர்கள் இன்ஷூ ரன்ஸ் ஏஜெண்டு ஆகலாம்.

## ஆப்டோ மெட்ரியில் அரிய வாய்ப்பு

பெயர் சொன்னால் தரம் எளிதில் விளங்கும் என்பது போல் “Birla Institute of Technology” என்று அழைக்கப்படும் கல்வி நிறுவனத்தைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. ராஜஸ்தான் மாநிலம் பிலானியில் உள்ள இந்த நிறுவனம் பல்வேறு அரிய வாய்ப்புக்களை கொண்ட படிப்புகளை வழங்கி வருகிறது. படிக்க இராஜஸ்தான் போக வேண்டுமா? என்று யோசிப்பவர்களுக்கு ஒரு நல்ல செய்தி. அதாவது சென்னையிலேயே இந்த நிலையத்தின் படிப்பும் செயல்முறை பயிற்சியும் கிடைக்க வழி செய்திருக்கிறார்கள். இங்கே ஆட்டோ மெட்ரி என்னும் பிரிவை கொண்ட பாடம் உள்ளது. இது ஒளியியல் தொடர்பான கல்வி. இதல் ஒளியியல் தொடர்பான கருவிகள் சாதனங்கள் பற்றியும் உபயோகங்கள் பற்றியும் சொல்லித் தருகிறார்கள். இன்றைய வளரும் சூழ்நிலையில் மறைமுகமாக உள்ள இது போன்ற பாடப்பிரிவுகளை குறதிய காலத்தில் வெளிக் கொணரப்பட்டு அதிக வாய்ப்பு உள்ள துறைகளை சேர்ந்த படிப்புகளாக மாறலாம். காரணம் இந்த துறையின் கல்வி மக்களின் அன்றாட பயன்பாட்டினை அடிப்படையாக கொண்டது.

### கல்வி காலம்

இந்தப் படிப்பில் பட்டம் பெற நான்கு ஆண்டுகள் படிக்க வேண்டும். இந்த படிப்பிற்கு பி. எஸ் ஆட்டோ மெட்ரி என்று பெயர். வகுப்புகளும் சோதனை சாலை வசதிகளும் சென்னையில் உள் புகழ்பெற்ற எலைட் ஸ்கூல் ஆஃப் ஆட்டோ மெட்ரியில் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

### கல்வித்தகுதி

12ல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதற்கு சமமான தகுதியும் போதுமானது. 12ல் வேதியியல் இயற்பியல் கணிதம் உயிரியல் பாடங்களில் 60 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆண் பெண் இரு பாலரும் இதில் சேர தகுதியுடையவர்கள்.

### எதிர்கால வாய்ப்புகள்

இப்பயிற்சி முடித்த பிறகு அதிகமான வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு வாய்ப்பு இருக்கிறது. கல்வியியல் தொடர்பான கருவிகளின் பயன்பாடு இன்றைய காலக் கட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. எனவே இத்துறையை தேர்ந்தெடுக்கும் மாணவர்களுக்கு ஒளிமிகு எதிர்காலம் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

### விண்ணப்பிப்பது எப்படி:

விண்ணப்பத்தை பெற கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதலாம். விண்ணப்பம் பெற ரூ. 600 க்கான வங்கி வரைவோலையை இணைத்து அனுப்ப வேண்டும். மேலும் வெவ்வேறு விபரங்களை இணைய தளத்திலும் சென்று பார்க்கலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

Birla Institute Of Technology & Science (BITS)

Pilani – 333031

Rajastan.

E-Mail : http:www.bits.pilani.ac.in

## சூரியனை சுற்றி சிறப்பான வாய்ப்புகள்

இது சூரிய சக்தியை பயன்படுத்தி இயங்கும் சாதனங்கள் தொடர்பான படிப்பு. இந்த துறை அளிக்கும் வேலை வாய்ப்புகளும் வசதிகளும் குறைந்து போகாதவை. இதை தவிர இது பற்றிய பயிற்சி உங்களுடைய சொந்த தொழில் முயற்சிக்கும் மிகவும் ஏற்றதாக இருக்கும். சூரிய ஒளியை பல்வேறு வேலைகளுககு பயன்படுத்தலாம். குறிப்பாக ஒளியூட்ட, வெப்பம் உண்டாக்க, அறைகளை வெப்பமூட்ட, சமைக்க, துவைக்க மின்சக்தி உற்பத்தி பண்ண, விவசாய பம்ப் செட் இயக்க, உப்பு நீரை குடிநீராக்க இது போன்ற இன்னும் பல நூறு உபயோகங்கள் உள்ளன. சூரிய ஒளியை பயன்படுத்தி இயங்கும் பல்வேறு சாதனங்கள் விதவிதமாக வந்துவிட்டன. இவற்றை நிறுவ, பராமரிக்க, பழுதுநீக்க, இந்த துறையில் பயிற்சி பெற்றோரின் தேவையும் அவசியம். வளர்ந்து வரும் நம் இந்திய நாட்டில் சூரிய ஒளியின் வெப்பத்தை பயன்படுத்தி புதுப்புது சாதனங்கள் கண்டுபிடித்து மக்களுக்கு அளிக்கிறார்கள். இந்த துறையில் தற்சமயம் இஸ்ரேல் நாடு முன்னோடியாக திகழ்வது மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளுக்கு வழிகாட்டியாகவும் உள்ளது. இத்துறையைப் பயின்று நாமும் இத்துறையின் உபயோகங்களை நமக்கும் நமது நாட்டிற்கும் அளிக்கலாம்.

### யார் பயிற்சியை தருகிறார்கள்

இந்த துறையில் பயிற்சியை அமெரிக்காவின் ஸ்மென்ஸ் நிறுவனத்துடன் இந்திய புதுப்பிக்கத்தக்க வளங்கள் துறை கூட்டாக சேர்ந்து பயிற்சி அளிக்கிறார்கள். சென்னையில் உள்ள இந்திய தொழில் நுட்ப கழகத்தில் இந்த பயிற்சியை நடத்துகிறார்கள்.

### தேவையான தகுதிகள்

மின்னனுவியல், மின்னியல், எந்திரவியல் பிரிவுகளில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் டிப்ளமோ அல்லது ITI சான்றிதழ் போதுமானது. ஆங்கிலம் எழுத படிக்க மட்டும் தெரிந்திருப்பது அவசியம். இந்த துறையில் முன் அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

### கட்டணம்

இந்த பயிற்சி மிகவும் குறுகிய கால பயிற்சி. உள்ளுறைப் பயிற்சியாக நடத்தப்படுகிறது. இந்த பயிற்சியின் காலத்தில் மாணவர்களுக்கு உணவும் தங்க இடமும் இலவசமாகத் தருகிறார்கள்.

### வயது வரம்பு

இந்த பயிற்சியில் சேர்வதற்கான வயது வரம்பு அதிகபட்சமாக 35 ஆகும். இந்த வயதினை ஏப்ரல் மாத முதல் தேதியை விளிம்பாக எடுத்துக் கொண்டு கணக்கிட வேண்டும்.

### விண்ணப்பிப்பது எப்படி

பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்யப்படும். விளம்பரம் வெளியிட்ட 15 நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்களை தட்டச்சு செய்து விண்ணப்ப மாதிரியின் வடிவில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பத்தை நேரடியாக மரபு சாரா வளங்கள் துறைக்கு அனுப்பகூடாது என்பதை நினைவில் வைக்கவும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-

The Adviser,

2 D, 2nd Floor White House

10, Bhagwan Dass Road

New Delhi 110001

## சணல் தொழில் நுட்பம் (Jute Technology)

சுணலை பற்றிய படிப்பு சாத்தியமாகுமா? இது நியாயமான ஒரு கேள்விதான். ஆனால் இத்துறைப்பற்றியும் அதன் முக்கியத்துவம் மற்றும் எதிர்காலம் பற்றியும் தெரிந்துகொண்டால் நீங்களே படிக்க முன்வரலாம். காரணம் இத்துறை அதிகமான வேலை வாய்ப்புகளை கொண்டு முன்னேறி வரும் துறைகளில் ஒன்று. எத்தனை வகையான செயற்கை பொருள்கள் சந்தைக்கு வந்தாலும் சணலின் சிறப்பும் உபயோகமும் தனிதான். சுணலை கொண்டு பேக்கிங் செய்வது மட்டுமல்லாது எத்தனையோ பயன்படும் பொருள்கள் பலவற்றை செய்கிறார்கள். துணிகள், விரிப்புகள், திரைசீலை தயாரிப்பதுடன் பல்வேறு வண்ணங்களுடன் கூடிய கைவேலைப்பாடு மிக்க பொருள்களும் சணலில் அதிகம் தயாரிக்கிறார்கள். இந்திய அரசு தற்பொழுது சணல் சாகுபடி செய்யும் நிலப்பரப்பை பெருமளவு அதிகரித்து வருகிறது.

### கல்வித்தகுதிகள்

சணல் தொழில் நுட்பம் பற்றிய படிப்புகளை சான்றிதழ் படிப்பாகவும் பட்டயப்படிப்பாகவும் பட்ட மேற்படிப்பாகவும் படிக்கலாம். சான்றிதழ் படிப்பு படிப்பதற்கு பள்ளி இறுதிவரை படித்திருந்தால் போதுமானது. ஆனால் அனுபவமாக அதாவது ஒரு சணல் ஆலையில் குறைந்த காலமாவது வேலை செய்திருக்க வேண்டும். P.G. Diploma படிப்பதற்கு அறிவியல் துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அதுவும் இயற்பியல், வேதியியல் பாடங்களை படித்தவராக இருத்தல் அவசியம். மதிப்பெண்களை பொறுத்தவரை இரண்டாம் வகுப்பு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். பட்ட மேற்படிப்பில் சேர குறைந்த பட்சம் 55 சதவீத மதிப்பெண்களை கொண்ட இயற்பியல். வேதியியல், கணிதம், புள்ளியியல் பாடங்களை படித்த பட்டதாரியாக இருக்க வேண்டும். இதில் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர் தேர்வு நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் ஜூ ன் மாதத்தில் இந்த பயிற்சிக்கான வகுப்பு ஆரம்பமாகும். இதன் பயிற்சி ஓர் ஆண்டு காலம் ஆகும். இந்த பயிற்சியால் ஆண், பெண் இருபாலரும் கலந்து படிக்கலாம். இரு பிரிவினருக்கும் தனித்தனி விடுதி வசதி உள்ளது. சணல் தொழில் நுட்பம் பற்றிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கீழ்க்கண்ட பயிற்சிமையம் உங்களுக்கு தருகிறது. இந்த அமைப்பு பல்வேறு சணல் தொழில் அமைப்புகளுடன் சிறந்த தொடர்புகளை கொண்டுள்ளது. சணல் பற்றிய படிப்பு படிப்பதற்கான ஆலொசனையையும் மேலும் படித்தவுடன் எங்கே வேலைக்கு செல்லலாம் என்ற அனைத்து விபரங்களையும் இந்த பயிற்சி மையத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்தப்படிப்பில் நுழைவுத்தேர்வு போன்ற அடுத்தடுத்த தேர்வுநிலைகள் இல்லை என்பதால் மாணவர்கள் எடுத்த மதிப்பெண்களின் அடிப்படையில் எளிதில் சேர்ந்துவிடலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

அனுக வேண்டிய முகவரி :

Institute of Jute Technology

35, Ballygunge Circular Road

Kolkata – 700 019

West Bengal

தடய அறிவியல் இது குற்றங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் துறை. சவால்கள் நிறைந்தது. இதுபற்றிய விபரம் பெற :

Forensic Science Society of India

Forensic Science

35, Kamarajar Salai

Mylapore

Chennai – 600 004.

## லேப் டெக்னாலஜி படிக்கலாம்

லேப் டெக்னாலஜி என்பது மருத்துவ ஆய்வகத்தில் செய்யப்படும் மருத்துவ சோதனைகள் பற்றிய படிப்பாகும். இன்று நாட்டில் உள்ள அனைத்து சிறிய பெரிய நகரங்களிலும் தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. இந்த சூழ்நிலையில் முறைப்படி மருத்துவ ஆய்வக படிப்பு படித்தவர்களுக்கான தேவையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்த துறை சம்பந்தப்பட்ட படிப்புகளை பல்வேறு சிறு சிறு தனியார் கல்வி நிறுவனங்கள் நடத்தினாலும் பெரும் நகரங்களில் அதிக மருத்துவக் கருவிகளின் உதவியோடு செய்முறை வசதியும் கொண்ட நிறுவனங்களில் பயிற்சி பெறுதலே சிறந்ததாகும்.

### கல்வித்தகுதி

பிளஸ் டூ தேர்வில் முதல் முறையிலேயே தேறிய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் (அல்லது) மருத்துவ ஆய்வக நுட்பனர் படிப்பை எடுத்துப் படித்திருக்க வேண்டும். இப்படிப்பில் மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பு மே மாதத்தில வெளியிடப்படுகிறது. இப்படிப்புக்கான பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகள். இப்படிப்பு ஒவ்வோர் ஆண்டும் ஜனவரியில் தொடங்கி அடுத்த ஆண்டு டிசம்பரில் முடிவடையும். ஆண்டுதோறும் ஒவ்வொரு கல்வி நிறுவனங்களிலும் 40-45 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

### குறைந்தபட்ச தகுதிக்கான மதிப்பெண்கள்

உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் இவைகளின் குறைந்த பட்ச தகுதிக்கான மதிப்பெண் சதவீதம் இயற்பியல் மற்றும் வேதியியல் ஆகிய ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்ச

தகுதிக்கான மதிப்பெண் சதவீதம், பின்தங்கிய வகுப்பினர் 60 சதவீதமும் மிகவும் பின் தங்கிய வகுப்பினர் மற்றும் குறிப்பிட்ட சமூகத்தினர் 55 சதவீதமும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 40 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். இதர வகுப்பினர் குறைந்த பட்சம் 65 சதவீத மதிப்பெண்கள் எடுத்திருக்க வேண்டும்.

### வயது வரம்பு

விண்ணப்பதாரர்கள் குறைந்த பட்சம் 17 வயது முடிந்தவர்களாகவும் 25 வயதுக்கு மிகைப்படாமலும் இருக்க வேண்டும்.

### படிக்கும் காலம்

இப்படிப்பில் சான்றிதழ் படிப்புகள் மற்றும் பட்டயப் படிப்புகள் போன்ற வெவ்வேறு நிலைகள் இருப்பதால் அந்தந்த படிப்பிற்கு ஏற்ப படிக்கும் காலம் 6 மாதத்திலிருந்து 2 வருடம் வரை வேறுபடும்.

### எங்கே படிக்கலாம்

பல்வேறு சிறு சிறு நகரங்களில் இக்கல்வியைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் பல உள்ளன. குறிப்பாக சென்னையில் உள்ள கிங் நோய் தடுப்பு மருந்து நிலையம் இத்துறையில் சர்டிபிகேட் மற்றும் டிப்ளமோ படிப்புகளை நடத்துகிறது.

## பசியாற்றும் பிசியான பயிற்சி கேட்டரிங் டெக்னாலஜி

சென்னை தரமணியில் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மென்ட், கேட்டரிங் டெக்னாலஜி மற்றும் அப்ளைடு நியூட்ரிஷன் கல்வி நிலையம் உள்ளது. ஹோட்டல் நிர்வாகம் மற்றும் கேட்டரிங் டெக்னாலஜியில் 3 ஆண்டு டிப்ளமோ படிப்பு இங்கு உள்ளது. 12 படித்தவர்கள் இங்கு சேரலாம். இதற்கான நுழைவுத்தேர்வு அகில இந்திய அளவில் நடத்தப்படுகிறது. இதைத் தவிர உணவு தயாரிப்பு (ஒன்றரை ஆண்டு ஃபுட் அன்ட் பெவரேஜஸ் (24 வாரங்கள்) ஆகியவற்றில் சான்றிதழ் படிப்புகளும் உள்ளன. 10ம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் மற்றும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் இங்கு சேர்க்கப்படுவர் மத்திய அரசும் உத்தரப்பிரதேச அரசும் இணைந்து உருவாகியுள்ள தொழிற்பயிற்சி நிறுவனம் ஃபுட்கிராஃப்ட் இன்ஸ்டிடியூட் புதுதில்லியில் உள்ள ஹோட்டல் மேனேஜ்மென்ட் மற்றும் கேட்டரிங் டெக்னாலஜி கவுன்சில், இக்கல்வி நிறுவனம் தரமான கேட்டரிங் பயிற்சியை அளிக்கிறது.

- PG Diploma in Accommodation, Operation and Management (Reception and House Keeping – 18 Months) இவ்விரு படிப்புகளிலும் சேருவதற்கு ஏதேனும் ஓர் இளநிலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 28.
- Craftmanship Course in Food Production (18 Months)
- Craftmanship Course in Food and Beverage Service (7 Months) இவ்விரு படிப்புகளிலும் சேருவதற்கு ஆங்கிலத்தை ஒரு பாடமாக படித்து 12 தேறியிருக்க வேண்டும். வயது வரம்பு 22.

இது குறித்து மேலும் விபரம் அறிய விரும்புவோர் பின்வரும் முகவரியைத் தொடர்பு கொள்ளலாம்.

Acting Secretary

Foodcraft Institute

University Polytechnic Campus

AMU

Aligarh.

தமிழகத்தில் கேட்டரிங் படிக்க கீழ்க்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளலாம்.

Annai Fatimaa Institute of Hotel and Catering Administration

Bethel Nagar

Bye Pass Road

Madurai 625 010, Phone : 2380326

## அதிக பயனுள்ள பயோ டெக்னாலஜி

உயிரியல் இயற்பியல் வேதியியல் மருத்துவம் விவசாயம் பார்மாசூட்டிகல்ஸ் மற்றும் கெமிக்கல் என்ஜினியரிங் ஆகியவைகளை உள்ளடக்கிய கூட்டுக்கலவையே பயோ டெக்னாலஜி எனப்படும் உயிரி தொழில் நுட்பவியல் ஆகும். இவை அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்தும் பங்களித்தும் உயிரி தொழில் நுட்பவியலின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. பாலைத் தயிராக்குவதில் தொடங்கி, குளோனிங் (படியாக்கம்) முறையில் ஆட்டை உருவாக்குதல், மனித மரபணு வரைபடம் என்று பயோ டெக்னாலஜி வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. இந்த துறையில் விலங்கின உயிரி தொழில்நுட்பவியல், தாவர உயிர் தொழில் நுட்பவியல், மருத்துவ உயிரி தொழில நுட்பவியல் சுற்றுப் புறச் சூழல் உயிர்த்தொழில் நுட்பவியல் கடலின் உயிரித் தொழில் நுட்பவியல் என பல பிரிவுகள் உள்ளன.

### பாடப்பிரிவுகள்

பிடெக் பயோ டெக்னாலஜி, பிடெக் இன்டஸ்ட்ரியல் பயோ டெக்னாலஜி, எம்டெக் பயோ டெக்னாலஜி, பிஎஸ்சி பயோ டெக்னாலஜி, பி.எஸ்சி மாலிகுலர் பயாலஜி, பிஎஸ்சி மெரைன் பயோ டெக்னாலஜி, பி.எஸ்சி அக்ரி பயோ டெக்னாலஜி, எம்.எஸ்சி அக்ரி பயோ டெக்னாலஜி, எம்.எஸ்சி பயோ டெக்னாலஜி, எம்.எஸ்ச மெரைன் பயோ டெக்னாலஜி, போன்ற பாடப்பிரிவுகள் இருக்கின்றன. இருப்பினும் இத்துறையில் புதுப்புதுப் பிரிவுகள் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டே வருகின்றன.

### கல்வித்தகுதிகள்

இந்த துறையில் பட்டப்படிப்பில் சேர்வதற்கு 12 தேறியிருக்க வேண்டும். மேலும் 60 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். உயிரியல் மற்றும் வேதியியல் பாடங்களை படித்தவர்களாக இருக்க வேண்டும். பட்ட மேற்படிப்பிற்கு விலங்கியல் மற்றும் வேதியியல் பாடங்களில் பட்டம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இந்த பாடங்களில் முதல் வகுப்பில் தேறியிருக்க வேண்டும்.

### நுழைவுத்தேர்வு

இந்த படிப்பை தனியார் சுயநிதி கல்லூரிகளில் சேர்ந்து படித்தால் நுழைவுத்தேர்வு எழுத வேண்டிய அவசியமில்லை. மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். அதே நேரத்தில் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படிக்க விரும்பினால் நுழைவுத்தேர்வு எழுத வேண்டும். இந்த நுழைவுத்தேர்வு ஒவ்வொரு பல்கலைக்கழகங்களை பொறுத்து இந்திய அளவிலோ அல்லது தமிழக அளவிலோ நடத்தப்படும்.

### வேலைவாயப்பு

பிடெக் எம்டெக் பயோ டெக்னாலஜி, முடித்தவர்கள் பார்மாசூட்டிகல் நிறுவனம், கெமிக்கல் நிறுவனங்களில் வேலைக்குப் போகலாம். இவர்கள் ப்ரொடக்ஷனுக்கும் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கும் போகலாம். பி.எஸ்சி எம்.எஸ்சி பயோ டெக்னாலஜி, முடித்தவர்கள் பெரும்பாலும் கம்பெனி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கும் போகலாம். இன்ஜினியரிங் பாடங்கள் இல்லாததால் இவர்கள் புரொடக்ஷனில் போவதற்குச் சற்று கடினமாக இருக்கும். திசு வளர்ப்பு போன்ற கம்பெனிகளில் வேலைக்குப் போகலாம். மருத்துவமனைகளிலும் அதிக வேலைவாய்ப்புகள் உள்ளன. இதைத்தவிர, உயிரிதொழில் நுட்பவியலில் பயின்றவர்கள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ ஆராய்ச்சிப்படிப்பைத் தொடரலாம். பிடெக் பயோடெக்னாலஜியுடன் எம்பிஏ படித்தால் மருந்து கம்பெனிகளில் உயர் பதவிகளைப் பெறலாம். மொத்தத்தில் பயோடெக்னாலஜி என்பது கம்ப்யூட்டர் துறையையே பின்னுக்கு தள்ளிவிட்டு மிகவேகமாக முன்னேறி வரும் துறையாக வளர்ந்து வருகிறது.

### பி.எஸ்.சி பயோ டெக்னாலஜி படிப்பு உள்ள கல்வி நிறுவனங்களில் சில..

சென்னைப் பல்கலைக்கழகம் (சென்னை)

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் (மதுரை)

மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் (நாகர் கோவில்)

முகமது சதக் கலை அறிவியல் கல்லூரி (சோளிங்கநல்லூர், சென்னை)

டீடிஜிடி வைகூஷ்ணவ கல்லூரி (சென்னை) லயோலா கல்லூரி (சென்னை)

டிகேஎம் மகளிர் கல்லூரி (சாயிநாதபுரம் வேலூர்)

எஸ் ஆர் எம் கலை அறிவியல் கல்லூரி (காட்டாங்கொளத்தூர்)

வேல்ஸ் அறிவியல் கல்லூரி (பழைய பல்லாவரம் சென்னை)

மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி (சென்னை)

## குறைந்த செலவில் அர்மேனியாவில் டாக்டர் படிப்பு

எப்படியும் டாக்டர் ஆக வேண்டும் இது. பனிரெண்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் அறிவியல் மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுடைய தவிர்க்க முடியாத சராசரி கனவு. ஆனால் நுழைவுத் தேர்வில் நூலளவில் தோல்வியடைந்தும் வருடம் முழுவதும் சிரத்தையுடன் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்றும் தேவையான டொனேஷன் கொடுக்க முடியாமல் ஏங்கிக்கொண்டிருக்கும்

நடுத்தர வர்க்கத்தினரின் எண்ணிக்கையும் வருடத்திற்கு வருடம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் மருத்துவம் படிக்கும் கனவுகளோடு அலைமோதும் மாணவர்களுக்கு பழைய சோவியத் யூனியன் நாடுகள் சிவப்பு கம்பளம் விரித்துள்ளனர். அங்குள்ள பல்கலைக்கழகங்கள் குறைந்த செலவில் மருத்துவம் பயில வசதிகளை செய்து தருகின்றன. இந்நிலையில் பழைய சோவியத் நாடுகளில் தரமான மருத்துவ பல்கலைக்கழகங்கம் எது? என்ற குழப்பம் மாணவர்களிடையே நிலவுகிறது. ஆர்மோனியாவில் உள்ள மருத்துவப் பல்கலைக்கழகம் நமது பட்டியலில் முதலிடம் பெறுகிறது. இப்பல்கலைக்கழகம் உலகில் உள்ள 100 மருத்துவ பல்கலைக்கழகங்களின் தர வரிசையில் 38வது ரேங் கில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பல்கலைக்கழகத்தை உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் இந்ததியன் மெடிக்கல் கவுன்சில் (IMC) ஆகியன அங்கீகரித்துள்ளன.

### எல்லோருக்கும் மருத்துவ வாய்ப்பு

இந்தியாவில் உள்ளது போல் மதிப்பெண் கெடுபிடிகள் அங்கு இல்லை. நமது ஊரில் 12 தேர்வில் 50 சதவீத மதிப்பெண்கள் எடுத்த 17 வயது நிரம்பிய எவரும் இப்பல்கலைகழகத்திற்கு விண்ணப்பிக்கலாம். 7 வருடங்களைக் கொண்ட MBBS படிப்பான இதனை ஆங்கில வழியாகவே போதிக்கிறார்கள். ஆனால் மற்ற சோவியத் நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் பாடங்களை ரக்ஷ்ய மொழியிலேயே பயிற்றுவிக்கின்றனர். முதல் ஒரு வருடம் மருத்துவ புதுமுக வகுப்பு (Preliminary) நடைபெறும். அடுத்த ஐந்து வருடங்கள் மருத்துவக் கல்வியும் அதனை அடுத்து ஒரு வருடம் பயிற்சி மருத்துவமும் இதன் பாடத் திட்டங்களாக உள்ளன. மூன்றாம் ஆண்டில் மாணவர்கள் நுழையும் போது அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் பல்கலைக்கழகத்திற்குச் சென்று ஒரு மாதம் சிறப்புப் பயிற்சி எடுக்கவும் அங்கேயே பகுதி நேரமாக வேலை செய்யவும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றது. அந்த ஒரு மாதத்தில் சம்பாதிக்கும் தொகையைக் கொண்டு ரக்ஷ்யாவில் 8 மாத செலவுகளைச் சமாளிக்க முடியும். MBBS படிப்பை ஆர்மோனியாவில் முடித்த பிறகு மருத்துவ மேல் படிப்புகளான MD; MS, MCH போன்றவைகளைக் கற்க அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் பல்கலைக்கழகத்திற்கு செல்லவும் விசா வசதிகள் செய்து தரப்படுகிறது.

### என்ன செய்ய வேண்டும்

ரக்ஷ்யாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் சேர கீழ்க்கண்ட நடைமுறை ஆவணங்களை தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டும். இதையும் சில முகவர்கள் செய்து தருகின்றார்கள்.

- பல்கலைக்கழகத்தில் Admission Letter வாங்கித் தருவது
- பல்கலைக்கழகத்தில் Cnvitation Letter வாங்கித் தருவது
- Certificate எல்லாம் ரக்ஷ்ய மொழியில் மொழியாக்கம் Transaction Certificate செய்து வாங்கித்தருவது
- HRD MINISTRY GOVT. OF INDIA அனுமதி பெறுவது
- Foreign Ministry Govt. Of India Attestation வாங்கித் தருவது.
- மெடிக்கல் Certificate HIV பெற்றுத்தருவது

- MCI அனுமதி பெற்றுத் தருவது.
- பொது மருத்துவப் பரிசோதனை Certificate பெற்றுத் தருவது
- வெளிநாட்டு விசா
- வெளிநாட்டு அரசாங்க அனுமதி
- வெளிநாட்டு டிக்கெட் பெறுவது

**செலவு எவ்வளவு**

எல்லாம் சரி. இதற்கான செலவுகள் எவ்வளவாகும் என நீங்கள் கேட்பது புரிகிறது. குறைந்த பட்சம் 8 லட்சம் முதல் அதிகபட்சம் 10 லட்சம் வரை மட்டுமே செலவாகும். கல்வி செலவு விடுதி உணவு எல்லாமே இதற்குள் அடங்கிவிடுகின்றது. இந்தியாவில் டொனேசன் மட்டுமே 25 லட்சம் செலவாகும் நிலையில் வெறும் 10 லட்சத்தில் டாக்டர் பட்டத்தையே முடித்துவிடலாம்.

**முதல் வருடம் செலுத்த வேண்டிய தோராயத் தொகை**

University Tution Fees Food ஹாஸ்டல் மற்றும்

ஒரு தடைவ ரஷ்யா போய் வர செலவு 117800

முகவர்களுக்கான சர்வீஸ் சார்ஜ் 107200

மொத்தம் 225000

**தோராயமான மொத்த படிப்பு செலவு**

யூனிவர்சிட்டி சார்ஜ்

முதல் வருடம் சர்வீஸ் சார்ஜ் உணவு புத்தகம் ரூ 225000

ஹாஸ்டல் உள்பட ரூ 14000

(தோராயமாக)

117800 X 4 = 471200 Rupees = 471200

மொத்தம் 5 வருடங்களுக்கான தோராய செலவு ரூ 710200

இது ஒரு தோராயமான மதிப்பீடு. டூாலர் மதிப்பு விமானப் பிரயாணம் பொறுத்து சிறிது ஏறலாம் அல்லது குறையலாம்.

மேலும் விபரங்களுக்கு : -

டாக்டர் எஸ். வின். வரன்

அம்மாயில் எஜூ கேசனல் டிரஸ்ட்

80 சன்னதி தெரு

திருவண்ணாமலை

போன் : 222280, 224029

**பெண்கள் பட்டியல் இனத்தவர்கள். உடல் ஊனமுற்றவர்கள் இவர்களுக்கு கணிப்பொறி பயிற்சி பல**

சலுகைகளுடன் வழங்கப்படுகிறது. விபரங்களுக்கு

Small Industries Service Institute

Government of India of Ministry of SISI

65/1, GST – Road

Guindy – Madras – 32

Phone - 23410111 – 23410112

## இப்பொழுது அஞ்சல் வழியில் இரயில்வே இன்ஜினியரிங்

பெரும்பாலும் பொறியியல் படிப்புகள் அஞ்சல் வழியில் பயிலும் வாய்ப்புகள் மிகவும் குறைவு. இந்திய இரயில்வே அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் Institution of Permanent Way Engineers (India) இந்நிறுவனம் அஞ்சல் வழியில் பொறியியல் டிப்ளமோ படிப்பை வழங்குகிறது.

### தகுதிகள்

கொங்கள் இரயில்வே போர்ட் ட்ரஸ்ட் இரயில்வே RITES, IRCON, CRIS, DMRC மற்றும் வேறு இரயில்வே துறை சார்ந்தவர்கள் கல்வித் தகுதியாக உயர்நிலைப் பள்ளி படிப்பு HSC அல்லது SSC ஆகிய வகுப்புகளில் கணக்கு அல்லது அறிவியல் பாடத்துடன் இரயில்வே துறையில் 3 வருடம் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அல்லது அறிவியல் பட்டதாரியாகவோ அல்லது பட்டப்படிப்போடு அறிவியல் கணக்கு பாடங்களில் ஏதேனும் ஒன்றினை மேல்நிலை பள்ளியில் முதன்மை பாடமாக பயின்றிருக்க வேண்டும்.

### இரயில்வே துறை அல்லாதவர்களுக்கான தகுதிகள்

இரயில்வே துறை அல்லாதவர்கள் மத்திய அரசாங்கத்தாலோ அல்லது மாநில அரசாங்கத்தாலோ அல்லது UT அரசாங்கத்தாலோ வழங்கப்பட்ட 3 வருட இன்ஜினியரிங் பட்டய (Diploma) படிப்பு அல்லது அறிவியல் பட்டதாரியாகவோ அல்லது பட்டப்படிப்புடன் அறிவியல் அல்லது கணக்கு பாடங்களில் ஏதேனும் ஒன்றினை மேல்நிலைப்பள்ளியில் முதன்மை பாடமாக பயின்றிருக்க வேண்டும்.

### இப்பயிற்சியின் மூலம் இரயில்வேயில் கிடைக்கும் சலுகைகள்

இரயில்வே துறை சார்ந்தவர்களாயிருந்தால் க்ரூப் C பிரிவில் இன்ஜினியரிங் மற்றும் வேறு துறைகளில் பதவி உயர்வு பெற இந்த டிப்ளமோ பயிற்சி உதவிகரமாக இருக்கும். இரயில்வே துறையல்லாதவர்கள் என்றால் இரயில்வே துறை நடத்தும் பலவித பணிகளுக்கும் இது ஒரு கூடுதல் கல்வித் தகுதியாக ஏற்றுக் கொள்ளப்படும். இது பற்றிய அதிக விபரங்களைப் பெற

Institute of Permanent Way Engineers (India)

Room NO. G-11

Rail Bhavan

Faisina Road

New Delhi – 110001.

## அதிகம் வாய்ப்புள்ள அதிகம் அறியாத பொறியியல் படிப்புகள் பல பல

மாணவர்கள் பெறியியல் படிப்பகள் என் தேர்வு செய்தால் கம்ப்யூட்டர் மின்னனுவியல் (Electronics Engineering) மின்னனுவியல்-கருவியியலும் (Electronics and Instrumentation) மின்னியியல் ஊரு உயிற்சி (Electrical Sandwich Engineering) மின்னனுவியலும் தகவல் தொடர்பும் (Electronics and Communication) என இவற்றையே தேர்வு செய்து மின்னனுபித்தர்களாக மாறிப் போய்விட்டார்கள். இவை தவிர பல பொறியியல் படிப்புகளும் அவற்றிற்கான எதிர்கால வாய்ப்புகளும் நிறைய உள்ளன. அவற்றைப் பற்றிய சிறு அறிமுகம்.

### நெசவுத் தொழில் நுட்பம் :- (Textile Technology)

இது தான் கோடிகளை கைமாற வைக்கும் பணக்கார படிப்பு என போற்றப்படுகிறது. நூல் தயாரிப்பு, ஆடை உருவாக்கம், சாயம் போடுதல், பட்டு பாலியஸ்டர், நைலான் போன்ற செயற்கை இழை தயாரித்தல் முதலிய தொழில் நுட்பங்கள் இப்படிப்பில் கற்றுத்தரப்படுகிறது. வணிக நோக்கமுள்ள, நேரிடையாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புகளை தரக்கூடிய படிப்பாகும்.

### ரப்பர் தொழில் நுட்பம் :- (Rubber Technology)

ரப்பர், ரப்பர் சார்ந்தபொருட்களின் உற்பத்தி, ரப்பர் விளை பொருட்கள் தரும் உற்பத்தி ஆகியவற்றை இப்பிரிவில் படிக்கலாம். ரப்பர் தொழிற்சாலைகள் வேதிப்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றில் இதற்கு வேலை வாய்ப்புக்கள் உண்டு.

### அச்சுத்தொழில் நுட்பம் (Printing Technology)

பல்வகை அச்சிடும் முறைகள், அச்சுப்பொறிகள், அச்சிட தேவையான பொருட்கள், நவீன அச்சுத்துறையில் கணினியின் பங்கு நிர்வாக மேலாண்மை ஆகியவைகள் இப்பிரிவில் கற்றுத்தரப்படுகின்றன. பெரிய அச்சகங்கள், செய்தித்தாள் நிறுவனங்கள் போன்றவற்றில் வேலைவாய்ப்புகள் இதற்கு உள்ளது.

### பாலிமர் (Polymer Technology)

இதுவும் பணம் குவிக்கும் படிப்புதான். அன்றாட வீட்டு உபயோகப் பொருட்கள் முதலாக விண்வெளிப் பயணம் மற்றும் மின் உற்பத்தி முதலிய உயர் தொழில் நுணுக்கப் பயன்பாடுகள் வரை பரவலாகப் பயன்படும் பாலிமர் பொருளினை பற்றிய படிப்பான இதனை இப்பொழுது மாணவர்கள் விரும்பிப் படிக்கின்றார்கள்.

### உலோகவியல் (Metallurgical Engineering)

பலவகை உலேகத் தாதுக்களிலிருந்து உலோகங்களைப் பிரித்தெடுத்தல், செம்மைப்படுத்துதல், கலத்தல், பொருள் வடித்தல், வடிக்கும் முறைகள் அவற்றின் தன்மைகள் போன்றவை இப்பிரிவில் கற்றுத்தரப்படுகிறது. இரும்பு உருக்கு தொழிற்சாலை உள்ளிட்ட பிரிவுகளில் வேலை வாய்ப்புகள் உள்ளது.

## கடற் பொறியியல் (Marine Engineering)

வணிக மற்றும் பல்வேறு துறைகளைப் பற்றி இப்பிரிவில் படிக்கலாம். கப்பல் இயந்திரங்களை கையாளுதல், பழுது பார்த்தல் போன்றவற்றில் வகுப்புப் பயிற்சியுடன் கப்பல்களில் நேரடி பயிற்சியும் உண்டு. இப்பிரிவில் சேர உடல்நிலைக் கட்டுப்பாடும் உண்டு.

## சுரங்கவியல் (Mining Engineering)

தாதுப் பொருட்களை அகழ்ந்தெடுத்தல் சுரங்க இயந்திரங்கள், சுரங்க மேலாண்மை, சுரங்கவியலில் கணிப்பொறிகளின் பயன்பாடு ஆகியவைகள் இப்பிரிவில் கற்றுத் தரப்படுகிறது. இப்பிரிவில் பெண்கள் படிக்க இயலாது. சுரங்கம் சார்ந்த தொழில்களில் வேலை வாய்ப்புகள் உள்ளது.

## உற்பத்தி பொறியியல் (Manufacturing Engineering)

இயந்திரவயலைப் போன்றதே உற்பத்திப் பொறியியலாகும். தொழிற்சாலை பொருட்களின் உற்பத்தி முறைகள் அதற்குப் பயன்படும் பொறிகள், அவற்றைத் தேர்வு செய்யும் வழிகள் ஆகியவைகள் இப்பிரிவல் கற்றுத் தரப்படுகின்றன.

### இயந்திரவியல் :

தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் இயந்திர சாதனங்கள், பொருள் உற்பத்தி முறைகள், பொறி வடிவமைப்பு ஆய்வு செய்தல் கணிப்பொறி பயன்பாடு ஆகியவற்றை இப்படிப்பில் அறியலாம்.

### இயந்திர மின்னணுவியல் :-

இயந்திரவியல், மின்னியல், மின்னணுவியல் ஆகியவற்றின் தேர்ந்த கலவை (ஜூ ஸ்) மெகாட்ரானிக்ஸ் என்ற படிப்பாகும்.

### தோல் தொழில் நுட்பம் :-

தோல் பதனிடல், காலணிகள், தோலாடைகள், விளையாட்டு பொருட்கள் போன்ற தோல் சார்ந்த பொருட்களின் உற்பத்திகள் அதற்குப் பயன்படுத்தப்படும் சாதனங்கள் பற்றியும் இப்பிரிவில் கற்றத்தரப்படுகிறது.

### தோழில் பொறியியல் :-

பொருட்களின் உற்பத்திக்கு உதவும் பல்வேறு செயல்களையும் இயந்திரங்கள் கச்சாப் பொருட்கள் நிதி ஆகியவற்றை சிறந்த முறையில் கையாளும் வழிகளையும் இப்பிரிவில் கற்கலாம்.

### கருவியியலும் - கட்டுப்பாடும் :-

கருவியியலின் அடிப்படைகளும் பொறியியல் கட்டுப்பாடு பற்றியும் இப்பிரிவல் கற்றுத்தர்பபடுகிறது. மின் நிலையங்கள், ஊர்ச்சாலைகள், வேதிப் பொருள் உற்பத்தியகங்கள் ஆகியவற்றில் இப்படிப்புக்கு

வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. சமீபகாலமாக மாணவர்களின் கவனம் இப்படிப்பின் பக்கமும் திரும்பியிருக்கின்றது.

### புவித் தகவலியல் (Geo – Information Engineering)

செயற்கை கோள் வழியாக அளவெடுத்தல், கணிப்பொறி வழி வளரவியல், புவித்தகவலியல் அளவியல், தொலையுணர்வியல், ஒளிப்படநில அளவை ஆகிய படிப்புகள் இப்பிரிவில் உள்ளன. ஆண்ணா பல்கலைக்கழகத்தில் இப்பிரிவு உள்ளது. சர்வே ஆ.்ப் இந்தியா விண்வெளித்துறை, பொதுப்பணித்துறை ஆகியவற்றில் இதற்கு வேலைவாய்ப்பு உள்ளது.

### செராமிக் தொழில் நுட்பம் (Ceramic Technology)

பழம்பெரும் இந்த மண்பொருள் தொழில் நுட்பம் இன்னும் நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் சவாலாக உள்ளது. தானியங்கிகள், சிமெண்ட், அனுவிசைப் பொருள்கள் மின்னனுவியல் தொலைத்தொடர்பு மருத்துவ சாதனங்கள் போன்ற பல்வேறு துறைகளில் பயன்படும் தொழில்நுட்பம் பற்றி இப்பிரிவில் கற்றுத்தரப்படுகின்றது.

### வேதிப் பொறியியல் (Chemical Engineering)

பெட்ரோலியம், உரம், சர்க்கரை, மருந்துகள், சாயம், சிமிண்ட் ஆகியன இப்பிரிவில் உள்ளன. தவிர மாசுக்கட்டுப்பாடு சம்பந்தமான படிப்பும் இத்துறையில் உள்ளது. அனுமின் நிலையம் விண்வெளி ஆராய்ச்சியகம் மற்றும் ராணுவத் துறைகளில் இதற்கு வேலை வாய்ப்புகள் உள்ளது. மாணவர்கள் ஆர்வம் காட்ட வேண்டிய படிப்பு இது.

### தானியங்கி பொறியியல் (Automobile Engineering)

பிரம்மாண்டங்கள் நிறைந்த பணம் கொழிக்கும் துறைகளில் இதுவும் ஒன்று. போக்குவரத்து வாகன தயாரிப்புகள் வாகன பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, வாகனங்கள் உற்பத்தி மேலாண்மை, எரி இயந்திரம் தயாரித்தல் ஆகியவை இப்பிரிவில் கற்று தரப்படுகிறது. ஏராளமான தொழில் வாய்ப்புகளும் வேலைவாய்ப்புகளும் தரக்கூடிய இப்படிப்பை முஸ்லிம் சமுதாய மாணவர்கள் கண்டுக் கொள்ள மறுப்பது வேதனையே.

### கட்டிடக்கலை (Architecture)

கட்டிடங்களள் உருவாக்கும் நுட்பங்களை கற்று தரும் படிப்பாகும். விமான நிலையங்கள், கலாச்சார அரங்குகள், நவீன கூடங்கள், மருத்துவ நிலையங்கள், நினைவாலயங்கள், சுற்றுலாவாசிகளைக் கவரும் கட்டடங்கள் என இவற்றை அமைக்கும் நுட்பங்கள் இப்படிப்பில் கற்றுத்தரப்படுகின்றது. இது ஐந்து வருடப்படிப்பாகும்.

### பொது பொறியியல் (Civil Engineering)

கட்டிடங்கள் சாலைகள் கால்வாய்கள் அணைகள் பாலங்கள் நீர்த்தேக்கங்கள் துறைமுகங்கள் விமானதளங்கள் போன்ற பல்வேறு கட்டுமானங்களைப் பற்றியும் இவற்றை பழுது பார்த்தல் பராமரித்தல் போன்றவைகளும் இப்பிரிவில் கற்றுத்தரப்படுகிறது. சமீபகாலமாக மவுசு குறைந்தப்படிப்பாக இதனை பார்க்கிறார்கள். உண்மை நிலை அதுவல்ல. எப்போதும் வேலை வாய்ப்புகளை நமக்கு அருகாமையிலேயே தேடிசெல்லாமல் தரக்கூடிய படிப்பு இது. சுயமாக தொழில் செய்யவும், வேலைவாய்ப்புகளை உலுவாக்கவும் இங்கு வாய்ப்புகள் ஏராளமாக உள்ளது.

ஒன்றுமே இல்லாவிட்டாலும் கூட கட்டிடங்களைக் கட்டி விற்பனை செய்து ரியல் எஸ்டேட் மூலம் லட்சங்களை சம்பாதிக்கும் முறையை இப்படிப்பு வழங்குகிறது.

வெளிநாடுகளில் நடத்தப்படும் படிப்பு மற்றும் பயிற்சிகளில் சேருவதற்கான பொதுவான தேர்வுகள் பற்றிய விவரங்கள் கிடைக்கப் பெற

Institute of Psychological Education

Measurement (IPEM)

25-A Mahathma Gandhi Marg

Allahabath – 211 001

## துல்லியமான வேலை வாய்ப்புக்கு தொல்லியல் படியுங்கள்

மிகத் தொண்மையான மக்களின் பண்பாடு, வரலாறு அதற்கான சான்றுகளைக் கண்டுபிடித்து ஆய்வு செய்தல் தொல் வரலாறு மற்றும் தொல்லியல் முதுகலைப் பட்டப்படிப்பின் முக்கிய நோக்கம். பழங்கால நகரங்களைக் கண்டறிதல், அகழ்ந்து ஆய்வு செய்தல் அகழ்ந்தெடுத்த பொருள்களைப் பாதுகாத்தல் இப்படிப்பின் பிற நோக்கங்கள் ஆகும்.

### கல்வித்தகுதிகள்

தொல்லியல் துறையில் எம்.ஏ எம்.ஃபில் மற்றும் பி.எச்.டி படிப்புகள் உள்ளன. முதுநிலைப்படிப்பிற்கு ஏதேனும் ஒரு பிரிவில் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். தொல்லியலின் அனைத்துப் பிரிவுகளோடு இந்திய வரலாறும் கற்றுத் தரப்படுகிறது. தொல்லியல் கள ஆய்வு முறைகள், அகழாய்வு முறைகள், அகழாய்வின் முக்கியத்துவம் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பழமையான பொருள்களை ஆய்வு செய்தல் அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் கற்றுத்தரப்படுகின்றன.

### படித்த பின்பு வாய்ப்பு

தொல்லியலில் மேற்படிப்பை முடித்தவர்கள் மத்திய மாறில அரசுகளின் தொல்லியல் துறைப் பணிகளில் சேரலாம். மத்திய அரசின் தொல்லியல் கள ஆய்வாளர் பதவியில் சேரலாம். இத்துறையின் கல்வெட்டுப் பிரிவில் கல்வெட்டு ஆய்வாளராகவும் அரசு மற்றும் தனியார் அருங்காட்சியகக் காப்பாளராகவும் வேலைபெற வாய்ப்புள்ளது. மத்திய அரசுப் பணிகளில் சேர விரும்புவோர் மத்திய அரசு ஊழியர் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் வெற்றி பெற வேண்டும். தமிழக அரசின் அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் அமரலாம். மத்திய மாநில அரசுகளின் சுற்றுலா வளர்ச்சித்துறைகளில் பணியாற்றும் வாய்ப்பு உள்ளது. அரசு அங்கீகாரம் பெற்ற சுற்றுலா உதவியாளர்களாகவும் பணியாற்றலாம். பேச்சுத் திறமையும் சுற்றுலா நாட்டமும் கொண்டோர் இத்துறையில் சிறந்து விளங்க முடியும்.

### எங்கே படிக்கலாம்?

இந்த படிப்பு சென்னை பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கப்படுகிறது. முதுநிலைப் பட்டத்திற்கு பிறகு இந்த துறையிலேயே ஆராய்ச்சி படிப்பு வரை படிக்கலாம்.

## மானுடவியல் (Anthropology)

இந்திய மக்களைப் புரிந்து கொள்ளவும் அதற்கேற்ப அவர்களை ஆட்சி செய்யவும் ஆங்கிலேயர்களால் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்ட பாடப்பிரிவு மானுடவியல் (Anthropology) முதலில் கல்கத்தாவிலும் பின்னர் அதாவது 1945ம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் இப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது பட்டயப்படிப்பாகவும் சான்றதழ் படிப்பாகவும் மட்டுமே மானுடவியல் இருந்தது. 1975ல் முதுநிலைப்பட்டப்படிப்பாக இது உயர்த்தப்பட்டது. முதுநிலைப் படிப்புடன் எம். ஃபில் மற்றும் பிஎச்டி படிப்புகளையும் நடத்துகிறது.

### கல்வித்தகுதிகள்

மானுடவியலில் முதுநிலைப் படிப்பில் சேர்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து ஏதேனும் ஒரு பிரிவில் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

### பாடப்பிரிவுகள்

சமுதாய மானுடவியல், மானுடவியல் தொல்லாய்வு, பழங்குடியினப் பண்பாடு, மானுட உடற்கூறு, மானுடவியல் ஆய்வு முறைகள் பயன்முறை மானுடவியல் கிராமிய மற்றும் பழங்குடியினர் நலம் குறித்த பாடங்கள், இப்பிரிவில் கற்கப்படுகின்றன. அத்துடன் 2ம் ஆண்டின் இறுதியில் ஏதாவது ஒரு தமிழ்ப் பழங்குடியினர் வாழும் இடத்துக்குச் சென்று கள ஆய்வு செய்து மானுடவியல் மாணவர்கள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

### படித்த பின் உள்ள வாய்ப்புகள்

மானுடவியலில் முதுநிலைப் பட்டம் பெற்ற மாணவர்கள் தமிழக அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளை எழுதி கிராம அதிகாரி உதவி ஆட்சியர் உதவி மாவட்டக் காவல் அதிகாரி உள்ளிட்ட உயர் பதவிகளுக்குச் செல்ல முடியும். அத்துடன் குடிமைப் பணிகளில் தேர்ச்சி பெற்று காவல்துறை அதிகாரகளாகவும் ஆட்சியராகவும் அரசுப் பணியில் அமர முடியும். அரசுப் பணியில் மட்டுமல்லாது தன்னார்வத் தொண்டு நிறுவனப் பணிகளையும் இப்பட்டம் பெற்ற மாணவர்கள் எளிதாகப் பெறுகின்றனர்.

### எங்கே படிக்கலாம்

சென்னை பல்கலைக்கழகத்தில் இந்த படிப்பு உள்ளது. எம்.ஏ மானுடவியல் வகுப்பில் ஒவ்வொரு ஆண்டும் 20 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். எம்.ஃபில் வகுப்பில் 12 முதல் 16 பேரும் பி.எச்.டி பிரிவில் 32 பேரும் சேர்க்கப்படுகின்றனர்..

## கிரிமினாலஜி

கிரிமினாலஜி எனப்படும் குற்றவியல் துறை பன்முகப்பட்ட பாடப்பிரிவு மனித சமூக அமைப்பில் மனிதத் தவறுகளும் குற்றங்களும் அதிகரித்துக் கொண்டு வரும் சூழ்நிலையில் குற்றத்தின் மறுபக்கமான குற்றப்பாதிப்புகளின் விளைவுகள் பாதிக்கப்பட்டோரின் துயரங்கள். உலக அளவிலான குற்றவியல் மற்றும் பாதிப்பியல் ஆகியவற்றின் வளர்ச்சி போன்றவை குறித்தும் கவனம் திரும்பி வருகிறது. இச்சூழ்நிலையில் குற்றவியலும் குற்ற நீதி நிர்வாக அறிவியலும் குறித்த இத்துறை சமீபகாலமாக முக்கியத்துவம் பெற்று வருகிறது.

### பாடப்பிரிவுகள்

கிரிமினல் சைக்காலஜி ஆய்வு வழிமுறைகள் போலீஸ் நிர்வாகம் குற்றவியல் நீதி நிர்வாகத்தில் மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நிர்வாகம் போன்ற பல்வேறு பாடங்கள் இத்துறை மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

### தகுதிகள்

எம்.ஏ கிரிமினாலஜி படிப்பிற்கு இளநிலைப் பிரிவில் ஏதேனும் ஒரு பாடத்தில் 55 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்களுடன் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

### வாய்ப்புகள்

சிறைத்துறை போலீஸ் துறை சமூகப் பாதுகாப்புத் துறை சட்டம் தொடர்பான பணிகள் வங்கிப் பணிகள் போலீஸ் துறை ஆய்வுப் பணிகள் போன்றவற்றில் இப்படிப்புகளைப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன.

### எங்கே படிக்கலாம்

சென்னைப் பல்கலைக்கழகத்தலும் மத்தியப் பிரதேசத்தில் உள்ள சாகர் பல்கலைக்கழகத்திலும் தார்வாரில் கர்நாடகப் பல்கலைக்கழகத்திலும் கிரிமினாலஜி படிக்க வாய்ப்புகள் உள்ளன. வெளிநாடுகளில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் குற்றவியல் குறித்த ஆய்வுப் படிப்புகளில் இங்கிருந்து பல மாணவர்கள் சேருகிறார்கள். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் இந்த படிப்பை அஞ்சல் வழியில் படிப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

## நுட்பமான ..நுண்கலைப் படிப்புகள்

நுண்கலைத் துறையைத் தேர்ந்தெடுத்து அதில் நல்ல நிலையை அடைய முடியும் என்ற நம்பிக்கையும் முழு அர்ப்பணிப்பு உணர்வும் உள்ளவர்கள் மட்டுமே இத்துறைக்கு வர வேண்டும். இதற்கென குறிப்பிட்ட பாடப் புத்தகங்கள் கிடையாது. சுற்றுச் சூழல்தான் பாடத்திட்டம்.. எனவே சுற்றுச்சூழலை உற்றுநோக்கி உள்வாங்கும் உணர்வும் அதை ஓவியமாக வெளிக்கொணரும் திறனும் மாணவர்களுக்கு இருக்க வேண்டும். அமைதியை விரும்புபவர்களும் இயற்கையை ரசிப்பவர்களும் ரசனைப் பிரியர்களும் இந்த நுண்கலை துறையை தேர்ந்தெடுத்தால் எதிர்காலத்தில் ஜொலிக்க முடியும். இந்த படிப்பில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகள் உள்ளன.

### பாடப்பிரிவுகள்

நுண்கலையில், பெயிண்டிங், சிற்பக்கலை, கிரா∴பிக்ஸ் ஆகிய பாடங்கள் நடைபெறுகின்றன. இளநிலை அறிவியல் பிரிவில் விசுஷூ வல் கம்யூனிகேசன் இன்டஸ்ட்ரியல் டிசைன் மற்றும் செராமிக்ஸ் டெக்ஸ்டைல் டிசைன் ஆகிய பாடங்கள் நடைபெறுகின்றன. முதுநிலை நுண்கலைப் பிரிவில் பெயிண்டிங் முதுநிலை அறிவியியல் பிரிவில் செராமிக்ஸ் டெக்ஸ்டைல் டிசைன் விசுஷூ வல் கம்யூனிகேசன் ஆகிய பாடங்கள் நடத்தப்படுகின்றன.

### கல்வித்தகுதி

இவையணைத்தும் 12வது வகுப்பிற்கு பிறகு 4 ஆண்டுகள் நடைபெறும் படிப்புகள். 12ல் தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானது.

### நுழைவுத்தேர்வு

இப்படிப்பில் சேர்வதற்கு நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது. பிற நுழைவுத் தேர்வுகளைப் போல் அல்லாமல் மிகவும் வித்தியாசமானது. நுண்கலைப் பிரிவில் சேர்வதற்கான நுழைவுத்தேர்வு. மற்றொரு பாடத்தை பார்த்து முழு உருவப்படம் வரைதல், லை∴ப் ஸ்டில் வரைதல், எழுத்துக்களை எழுதுதல் ஆகிய பிரிவுகளில் நடைபெறும். ஆண்டுக்கு 100 மாணவர்கள் இங்கு சேர்க்கப்படுகின்றனர். நுழைவுத்தேர்வில் பெறும் மதிப்பெண்ணை அடிப்படையாக வைத்து மாணவர்களுக்கு பாடப்பிரிவு ஒதுக்கப்படும்.

### எங்கே படிக்கலாம்

சென்னையில் நுண்கலைக் கல்லூரி உள்ளது. கும்பகோணத்தில் அரசினர் கலைத் தொழில் கல்லூரி உள்ளது. பெரும்பாலான மாநிலங்களில் நுண்கலைக் கல்லூரிகள் உள்ளன. இருப்பினும் ராஜஸ்தான் மாநில் அரசு ஜெய்ப்பூரில் அமைந்துள்ள நுண்கலைக் கல்லூரியில் இத்துறை சார்ந்த நவீனப் பிரிவுகள் உள்ளன.

## காசு கொட்டும் காலணி படிப்பு

செருப்பு தைப்பது என்பது ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் வேலைதான் என்ற காலம் மாறி, இப்பொழுது காலணி துறை கற்பனைக் கெட்டாத தூரத்தில் பறந்து கொண்டிருக்கின்றது. இன்றைய நுகர்வோரின் மத்தியில் நிலையான சந்தை மதிப்பை உள்நாடு உட்பட உலகநாடுகள் அளவில் இந்த காலணிகள் பெற்றுள்ளன. இந்த நிலையில் காலணி படிப்பில் பெறக்கூடிய பயிற்சி மிகவும் அதிகமான வாய்ப்புகளை பெற்றுத்தந்திட உதவும் என்பதில் ஐயமில்லை. நமது தமிழ்நாட்டில் காலணி தயாரித்தல் பற்றிய அடிப்படை குறுகிய கால பயிற்சிகள் ஆங்காங்கே சொல்லித் தரப்படுகின்றன. ஆனால் இத்துறையில் உள்ள உயர்நிலைக்கல்வி படிப்புகள் தான் இந்த துறையில் அதிக வாய்ப்புகள் கொண்டுள்ளன. காலணி தயாரிப்பு பற்றிய அறிவை பெற்றிட சான்றிதழ் படிப்பு பட்டப்படிப்பு உயர் தொழில் நுட்பப்படிப்பு என்று இருப்பதால் ஒவ்வொரு நிலைக்கும் பயிற்சி காலமும் பயிற்சியும் முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது.

### பகுதி நேரப் பயிற்சி – சான்றிதழ் படிப்பு

மாலை 6 மணி முதல் பிற்பகல் எட்டு மணி வரை பகுதி நேரமாகப் பயிற்சிகளை பெறலாம். இதற்கான அடிப்படை தகுதி 12வது வகுப்பு மட்டுமே. இது தவிர இதில் அடிப்படை வடிவமைப்பு

பயிற்சி, மேற்பார்வையாளர் பயிற்சி, உற்பத்தி தொழில் நுட்பப்பயிற்சி, நிர்வாக மேம்பாடு போன்ற துறைகளில் வெவ்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. காலணிகள் மற்றும் தோல் பொருள் தயாரிப்பில் பட்டயம் பெற இங்கு பயிற்சி தரப்படுகின்றது.

சான்றிதழ் படிப்பிற்கான காலம் 26 வாரம்

பட்டயப்ப படிப்பிற்கான காலம் 40 வாரம்

### வயது வரம்பு

அதிகபட்ச வயது 30 ஆகும். வயதின் அளவு ஒவ்வொரு வருடமும் ஜூ ன் முதல் தேதியை கொண்டு கணக்கிடப்படும்.

### கல்வித்தகுதி

சான்றிதழ் படிப்பிற்கும் பட்டயப்படிப்பிற்கும் 12வது வகுப்பில் 50சதவீத மதிப்பெண்களுக்கு அதிகம் பெற்றிருக்க வேண்டும். நுழைவுத் தேர்வு நடத்தப்படும். அதில் வெற்றி பெற வேண்டும். பயிற்சி பற்றிய அறிவிப்பு ஒவ்வொரு வருட பிப்ரவரி மாதத்தில் வெளியிடப்படும். இப்பயிற்சி பற்றிய மேலும் பல விபரங்கள் பெற

Head Education and Training Division Centre Leather Research Institute

Council of Scientific and Industrial research

Adayar – Chennai – 600 020

## உயர்வு தரும் உளவியல் படிப்பு

பொறுமையாக மற்றவர்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்பது. பிறரிடம் நன்றாகப் பேசி பழகுவது பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் திறமை போன்ற குணங்கள் உங்களுக்கு இருந்தால் உளவியல் துறையில் பிரகாசிக்க முடியும்.

### என்ன படிப்பது?

இந்த படிப்பில் மூன்றாண்டு பட்டப் படிப்புகளும் மற்றும் பட்டயப்படிப்புகளும் உள்ளன. கீழ்க்கண்ட வேறுபட்ட படிப்புகளை நீங்கள் படிக்கலாம்.

B.A. psychology

Diploma in Psychology

Diplomo in Medical Psychology

Diplomo in Educational Psychology

Diplomo in Clinical and Community Psychology

Diplomo in Child Psychology and Family Relations

படித்த பின் வாய்ப்பு

உளவியல் துறை இன்று சைக்கொதெபி, எக்ஸ்பரிமெண்டல் சைக்காலஜி, கிளினிக்கல் சைக்காலஜி என்று பல்வேறு பிரிவுகளாக விரிந்து கிடக்கின்றன. மனநல மருத்துவமனைகள், சிறைச்சாலைகள், சமூகநலத்துறை, கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களில் வேலைக்குச் சேரமுடியும்.

கற்றுத்தரும் குறிப்பிடத்தக்க இடங்கள்

அரசு கலைக்கல்லூரி கோவை ஜே.பி.ஏ.எஸ் மகளிர் கல்லூரி சென்னை

பி.எஸ.ஜி காலேஜ் ஆஃப் பெர்ஃமார்மிங் ஆர்ட்ஸ் கோவை

மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி ராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி சென்னை

National Institute of Mental Health and Neuro Science Bangalore

சென்னைப் பல்கலைக்கழகம் பாரதியார் பல்கலைக்கழகம் கோவை

அவினாசிலிங்கம் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹோம்சயின்ஸ் அண்ட் ஹையர் எஜூகேஷன், கோவை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலை நகர்

அன்னை தெரஸா பெண்கள் பல்கலைக்கழகம் NCERT New Delhi

Indira Gandhi National Open University (IGNOU) New Delhi.

## பயணம் மற்றும் சுற்றுலா

சில வருடங்களுக்கு முன்பெல்லாம் சுற்றுலாத்துறையில் வேலை என்றால் புருவத்தை உயர்த்துவார்கள். ஆனால் தற்போது சுற்றுலா துறை வேகமாக வளர்ந்து வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தி வருகிறது. இன்றைய சூழ்நிலையில் இந்தியா வல்லரசு நாடு என்ற முனையை நோக்கி பயனித்துக் கொண்டிருக்கிறது. இதனடிப்படையில் வளர்ந்து வரும் இந்தியா பல்வேறு நிலைகளில் தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கிறது. இதன்படி பயணம் மற்றும் சுற்றுலா துறையை மேம்படுத்தி உலக மக்களின் கவனத்தை இந்தியாவை நோக்கி திரும்ப வைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறது. எனவே இந்த துறையை தேர்ந்தெடுத்து படிக்கும் படிப்பு பிற்காலத்தில் வாய்ப்புமிக்கதாக இருக்கும்.

### படிப்புகள்

இந்த துறையை பொறுத்தவரை சான்றிதழ் படிப்புகள் பட்டயப் படிப்புகள் மற்றும் பட்டப்படிப்புகள் போன்ற பல நிலைகள் உள்ளன. ஒவ்வொரு படிப்பிற்கும் தகுந்தாற்போல் படிக்கும் காலம் வேறுபடும். குறைந்தது 6 மாத கால சான்றிதழ் படிப்பிலிருந்து அதிகமாக மூன்று ஆண்டுகால பட்டப்படிப்புகளையும் இதில் படிக்கலாம்.

### கல்வித்தகுதிகள்

கல்வித்தகுதிகள் அடிப்படைத் தகுதியாக 12வம் வகுப்பு படித்திருக்க வேண்டும். ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு முடித்த பிறகு பட்டயப்படிப்புகளிலும் சேரலாம்.

### படித்த பின் வாய்ப்பு

இப்படிப்பு முடித்தபின்பு பல்வேறு சுற்றுலா துறை அலுவலகங்களில் மதிப்புமிக்க வேலைகளில் சேரலாம். டிராவல் ஏஜென்ஸி டூர் ஏற்பாடு செய்தல் டூரிஸ்ட் கைடு போன்ற கிளைத்

தொழில்களிலும் ஈடுபடலாம். வெளிநாடுகளிலும் வேலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

கற்றுத் தரும் குறிப்பிடத் தகுந்த இடங்கள்

மத்திய பல்கலைக்கழகம் புதுவை

International Air Transport Association (IATA) and

Universal Federation of Travel Agencies Association (UFTAA)

Indian Institute of Travel and Tourism Management (IITTM) Delhi.

## படிக்கலாம் நிதி நிர்வாகம்

நாட்டில் உள்ள சிறந்த மேலாண்மைக் கல்வி நிலையங்களில் ஒன்று சென்னையில் உள் ள இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபைனான்சியல் மேனேஜ்மென்ட் அண்ட் ரிசர்ச் (IFMR) இங்கு நிதி நிர்வாகத்தில் (பகுதி நேர 3 ஆண்டு படிப்பு) பிசினஸ் மேனேஜ்மென்ட்டில் முதுநிலை டிப்ளமோ (18 மாதங்கள்) ஆகியவற்றை படிக்கலாம்.

கல்வித்தகுதிகள்

12வது படித்து 60 விழுக்காட்டிற்கும் அதிகமான மதிப்பெண்களை பெற்றவர்களாக இருக்க வேண்டும். முதல் குரூப் மற்றும் வணிக பிரிவு மாணவர்களும் இந்த படிப்பில் சேர தகுதியுடையவர்கள் ஆவர். பிரிட்டனில் உள்ள திறந்தநிலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து Executive MBA (3 ஆண்டுகள்) படிப்பை வழங்குகிறது இந்நிறுவனம். இது தவிர இங்கு மேலாண்மை தொடர்பான டிப்ளமோ மற்றும் சான்றிதழ் படிப்புகளையும் படிக்கலாம்.

படித்த பின் வாய்ப்பு

இப்படிப்பு முடித்து பெரிய கம்பெனிகளில் நிதி நிர்வாக அதிகாரியாக பணியாற்ற வாய்ப்பு உள்ளது. பல பெரிய தனியார் கம்பெனிகள் இந்த நிதி நிர்வாக படிப்பு முடித்த திறமையானவர்களை அதிக ஊதியம் கொடுத்து தங்கள் கம்பெனிகளில் நிலை நிறுத்திக் கொள்ள விரும்புவது வாடிக்கையான ஒன்று. இந்தத் துறை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளையும் கொண்ட துறையாகும். இப்படிப்பு பற்றிய விபரங்களை கீழ்க்கண்ட முகவரியை தொடர்பு கொண்டு பெறலாம்.

IFMR

30, Kothari Road

Nungamabakkam

Chennai – 600 034

Website : www.ifmr.com

E-Mail : ifmr@giasmd0.1vsnl.net.in

-

## பன்மொழி புலவராகலாமே

ஒரு மொழி தெரிந்தவர் இரண்டு நபர்களுக்கு சமம் என்று சொல்வார்கள். அந்த அளவு பல மொழி தெரிந்தவர்களுக்கு மதிப்புடன் கூடிய மரியாதை உண்டு. பல மொழி படித்தவர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புக்கள் கிடைப்பதோடு மட்டுமல்லாமல் அதிகம் சம்பாதிப்பதற்கும் வாய்ப்பு உண்டு. நீங்களும் அதிக மொழிகள் படித்து சிறப்புற முயற்சிக்கலாமே. எந்த மொழியை எங்கே கற்றுக் கொள்ளலாம் என்ற விபரம் தெரிந்து கொள்ளுங்கள்.

### பிரெஞ்சு

அலியான்ஸ் பிராஞ்சேஸ்

40-ஏ, கல்லூரிச் சாலை

நுங்கம்பாக்கம்

சென்னை – 6

தொலைபேசி 8279803, 8271477

### ஜெர்மன்

மாக்ஸ்முல்லர் பவன்

13, காதர் நவாஸ்கான் சாலை

சென்னை 16

தொலைபேசி 8261314, 8262343

### ஜப்பான்

இந்தோ-ஜப்பான் சென்டர்

26, .டி.டி.கே. சாலை

முதல் குறுக்குத் தெரு, ஸ்ரீராம் நகர்

சென்னை – 18

தொலைபேசி 4352010, 4354779

### ரக்ஷ்யமொழி

ரக்ஷிய கலாச்சார மையம்

27 கஸ்துாரி ரங்கா சாலை

சென்னை 18

தொலைபேசி 4990050, 4671411

### சமஸ்கிருதம்

பாரதீய வித்யா பவன்

37:39 கிழக்கு மாட வீதி

மயிலாப்பூர்

சென்னை – 4

தொலைபேசி 4943450, 4943420

தமிழ்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி சென்னை 113

தொலைபேசி 235781, 2350992

இந்தி

தட்சிண பாரத இந்தி பிரசாரசபா

தணிகாசலம் சாலை

தி.நகர் சென்னை – 17

தொலைபேசி 4345486, 4341824, 4348420

தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்

உருது, ரக்ஷ்யன், இத்தாலி, போர்ச்சுகீஸ், இந்தோனேசியன், கொரியன், புக்ஷ்டோ, ஜப்பான், ஸ்பானிக்ஷ், ஜெர்மன், ஃபிரெஞ்ச் (3 லிருந்து 5 ஆண்டுகள் வரை) போன்ற மொழிகளை தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொள்ளலாம்.

## ஆசிரியர் ஆகலாமே

ஆசிரியராக ஆர்வம் உள்ளவர்கள் ஆசிரியர் பயிற்ச பள்ளிகளில் சேரலாம். தற்சமயம் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சேர அதிகப் போட்டி நிலவுகிறது. காரணம் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு முடித்த பிறகு அடுத்து என்ன படிக்கலாம் என்று சிந்திக்கும் அதிகமான மாணவர், மாணவியர்களின் சிந்தனைக்கு வருவது இந்தப்பயிற்சியே ஆகும்.

குறிப்பிடத் தகுந்த சில அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் செயல்படும் ஊர்கள்

திரூர் (திருவள்ளுவர்)

உத்திரமேரூர் (காஞ்சிபுரம்)

ராணிப்பேட்டை (வேலூர்)

கீழ்ப்பெண்ணாத்துார் (திருவண்ணாமலை)

விழுப்புரம் (வடலுார்)

குருக்கத்தி (நாகப்பட்டிணம்)

மன்னார்குடி (திருவாரூர்)

ஆடுதுறை (தஞ்சாவூர்)

புதுக்கோட்டை

லால்குடி (திருச்சி)

கீழப்பழூர் (பெரம்பலூார்)

மாயானுார் (கரூர்)

நாமக்கல்

உத்தம சோழபுரம் (சேலம்)

கிருஷ்ணகிரி (தர்மபுரி)

பெருந்துறை (ஈரோடு)

திருமூர்த்தி நகர் (கோவை)

கோத்தகிரி (நீலகிரி)

ஒட்டன்சத்திரம் (திண்டுக்கல்)

காளையார்கோவில் (சிவகங்கை)

மஞ்சூர் (ராமநாதபுரம்)

டி. கல்லுப்பட்டி (மதுரை)

பாலையம்பட்டி (விருதுநகர்)

உத்தமபாளையம் (தேனி)

முனைஞ்சிப்பட்டி (திருநெல்வேலி)

வானாரமுட்டி (துாத்துக்குடி)

தேரூர் (கன்னியாகுமரி)

லேடி வெலிங்டன் வளாகம், திருவல்லிக்கேணி சென்னை.

இது தவிர அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் உள்ளன.

## காது கேளாதவர்களுக்கு கற்பிப்பதற்கான ஆசிரியர் பயிற்சி (Speech and Hearing – Andiology)

செவித்திறன் இல்லாதவர்களுக்கு பயிற்சியளித்து அவர்களை சமூகத்தின் சிறந்த அங்கத்தினராக்குவதற்கு பல பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவர்களுக்கு பயிற்சியளிக்கும் ஆசிரியர்களின் தேவையும் உள்ளது. இது போன்ற பயிற்சிகளில் சேர்ந்து பயின்றால் இது போன்ற போட்டி அதிகம் இல்லாத நிலையில் வேலைக்கு செல்லலாம் மேலும் மிகச் சிறந்த சமூக தொண்டில் வாழ்க்கையே அர்ப்பணிக்கிறோம் என்ற ஆத்ம திருப்தியும் இருக்கும்.

### பயிற்சியளிக்கும் இடங்கள்

இதற்கான பயிற்சி அளிக்க மும்பையில் தேசிய பயிற்சி மன்றம் ஒன்று உள்ளது. இதன் மண்டல மையங்கள் கொல்கத்தா, டில்லி, ஹைதராபாத் போன்ற இடங்களில் உள்ளது. இவைகள் அந்தந்த பகுதி பல்கலைக்கழக அங்கீகாரத்துடன் நடத்தப்படுகின்றன.

### கல்வித்தகுதிகள்

நிறுவனத்திற்கேற்ப படிப்பின் பெயரும் தகுதியும் வேறுபடும். 10, 12 படித்தவர்களும் சேரலாம். பட்டப்படிப்பு முடித்திருப்பவர்களும் சேரலாம். தகுதிக்கேற்ப படிப்புகள் உள்ளன. பயிற்சி நிறுவனங்களில் சில :

B.Sc., (Speech Pathology and Audiography)

University of Mysore,

Mysore Viswaidya Nilaya

Karya Soudha Grawford Hall

Mysore – 570 005

Karnataka.

Diploma in Educational of Deaf

University of Pune

Ganesh Hind

Pune – 411 007

## மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான ஆசிரியர் பயிற்சி

ஆசிரியர்கள் என்றதும் 10ம் வகுப்பு 12 மற்றும் பட்டப்படிப்பு படித்துவிட்டு செல்லும் ஆசிரியர் பயிற்சி தான் நம் அனைவரின் மனதிலும் நிழலாடும். ஆனால் அதிக திருப்தி தரக்கூடிய இத்துடன் அதிக வாய்ப்புள்ள இன்னும் எத்தனையோ வேறுவித ஆசிரியப் பணிகள் நம் கவனத்திற்கு வராமலேயே இருக்கின்றன. ஆம் நீங்கள் பொறுமை சேவை மனப்பாங்கு சமூக சிந்தனை இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர் எனில் இந்த வித ஆசிரியப்பணிக்கு தாங்கள் மிகவும் பொருத்தமானவராக இருக்க முடியும். இதைவிட பெண்கள் இப்பணிக்கு மிகவும் பொருத்தமானவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்ட படிப்பு என்னவென்றால் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான ஆசிரியர் பணி இவைகள் எங்கெங்கே பயிற்றுவிக்கப்படுகின்றன மற்றும் என்னென்ன தகுதிகள் தேவை என்பதை தெரிந்து கொள்வோம். இப்பயிற்சி செகந்தராபாத்தில் உள்ள தேசிய மனவளங்குன்றியோர் பயிற்சி மையத்தில் நடத்துகிறார்கள். இது உஸ்மானியா பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது. இம் மையம் இந்திய அரசின் நல வாழ்வு துறையின் கீழ் இயங்குகிறது. இம்மையத்திற்கு கல்கத்தா, மும்பை, டெல்லி போன்ற நகரங்களில் மண்டல கிளைகளும் உண்டு.

### கல்வித்தகுதிகள்

12ல் 50 சதவீதத்திற்கு அதிக மதிப்பெண்களுடன் 17 வயது முடிந்திருக்க வேண்டும். அட்டவணை

இனத்தவருக்கு 40 சதவீத மதிப்பெண்களே போதுமானது. வயது வரம்பு அக்டோபர் முதல் தேதியிலிருந்து நிர்ணயிக்கப்படுகின்றது.

நுழைவுத்தேர்வு

இப்பயிற்சிக்கான நுழைவுத் தேர்வை இந்திய மறுவாழ்வு கழகத்தால் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் சென்னையில் மட்டும் தேர்வு மையம் உண்டு. இந்த படிப்பு மற்றும் நுழைவுத் தேர்வுக்கான விபரங்கள் அடங்கிய விளம்பரம் பிப்ரவரி மாத நாட்களில் முன்னனி ஆங்கில பத்திரிக்கையில் அறிவிக்கப்படும். இப்பயிற்சிக்கு ஒவ்வொரு வருடமும் 17 இடங்கள் தான் உண்டு. இவற்றில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 4 இடங்களும் மலைவாழ் பழங்குடியினருக்கு ஒரு இடமும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு அரசு உதவி தொகையும் வழங்கப்படுகிறது. அதாவது பயிற்சி மையத்தை சுற்றியுள்ள மாணவர்களுக்கு மாதம் 300 வீதமும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இது பற்றிய விபரங்கள் மேலும் அறிய :

National Institute of Mentally Handicapped

Manovikas Nagar

Secundarabad

Andrapradesh – 500 009

தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவின் பல புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களும் அவற்றின் இன்டர்நெட் முகவரிகளும் :

University of Hong Kong – www.hku.hk

University of Singapore – www.nus.sg

Kyoto University – www.kyoto-u.ac.jp

Chinese University – www.cuhk.edu.hk

## அற்புதமான அழகியல் படிப்பு

அழகு மனிதர்கள் அனைவரும் விரும்புவது. அழகை அதிகரிக்க கற்றுத்தரும் இந்த படிப்பு. இது எதிர் காலத்தில் அதிக பிரகாசமுள்ள துறையாக மாற அதிக வாய்ப்புள்ளது. இத்துறை மனிதர்களின் அனைத்து உறுப்புக்களையும் அதிக அழகுறச் செய்ய கற்றுத் தருவதற்கும், அழகு சாதனங்கள் மற்றும் இதற்கு உபயோகப்படுத்தப்படும் பொருள்களை தயாரிப்பதற்கும் கற்றுத்தருகிறது. திரைப்பட துறையில் மனதை விட்டு மாறாத தெய்வ மகன் சிவாஜி, நாளை நமதே எம்.ஜி.ஆர் மற்றும் அவ்வை சன்முகி இந்தியன் கமல்ஹாசன் பாத்திரப் படைப்புகளுக்கு காரணம் அந்த ஒப்பனை கலைஞர்கள் தான் என்பது மிகையில்லை. கற்பனைத் திறனும் கலை உணர்வும் மிக்க மாணவர்களுக்கு இது ஏற்ற துறை. இந்த அழகு சாதனங்களை அடிப்படையாகக் கொண்டு பி.டெக் படிக்கலாம் என்பது பலருக்கு புதிய செய்தி. அழகு சாதனத்துறையில் படிக்கும்

இந்த படிப்பு நான்கு ஆண்டு படிப்பை கொண்டது. பி.டெக் முடித்து எம்.டெக் கூட இதில் படிக்க முடியும். இது மூன்று செமஸ்டர்கள் படிக்கக்கூடியது

### கல்வித்தகுதி

12வது வகுப்பு பாடத்தில் 60 சதவீதத்திற்கும் அதிக மதிப்பெண்கள் குறிப்பாக இயற்பியல் வேதியியல் உயிரியியல் பாடங்களில் ஆங்கில பாடத்திலும் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

### கற்றுத்தரும் இடங்கள்

இப்படிப்பு அதிகமான செயல்முறை பயிற்சிகளை கொண்டது. படிப்பு இறுதியில் அழகு சாதன தொழிற்சாலையில் குறிப்பிட்ட நாட்கள் வேலை செய்யும் வாய்ப்பு தரப்படும். அழகு சாதனங்கள் எப்படி வேதியியல் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. எந்தெந்த சூழ்நிலையில் எந்தவிதமான சாதனங்களை உபயோகிப்பது போன்ற விபரங்களடங்கிய பாடப்பிரிவுகளை படிக்க வேண்டும்.

### வாய்ப்புகள்

இப்படிப்பை முடித்தால் அழகு சாதன நிலையங்களில் பயிற்சியாளராக சேரலாம். சொந்தமாக தொழில் தொடங்கலாம். திரைப்படத்துறை தவிர மற்ற பெரும்புள்ளிகளுக்கு அழகு ஆலோசகராகலாம். அழகு நிலையங்கள் செல்லாதவர்களுக்கு வீட்டிற்கு சென்று அழகுபடுத்தலாம். சின்னத்திரையில் இன்று நாளொன்றுக்கு ஒரு நடிகர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு இதுபோன்ற பயிற்சியாளர்களின் தேவை அவசியம். இது போன்ற படிப்புகள் நீண்ட கால படிப்பு மட்டுமல்லாது பல தனியார் நிறுவனங்கள் பல வித குறுகிய கால பயிற்சியையும் நடத்துகின்றனர். பயிற்சி காலம் மற்றும் நிறுவனங்களின் தரத்தைப் பொறுத்து பயிற்சிக்கான செலவு தொகை வேறுபடும். இது போன்ற பயிற்சி நிறுவனங்கள் தமிழ்நாட்டை காட்டிலும் வட நாடுகளில் தான் அதிகம் செயல்படுகின்றன. சில முக்கிய பயிற்சி நிறுவனங்களின் முகவரிகள்:

Loyala Institute of Vocational Education
Loyala College
Nungambackam
Chennai – 600 034

RVTIW
Khazakuttam
Trivandrum
Kerala – 695 582

## மின் வேதியியல் படிக்கலாம்

காரைக்குடியில் உள்ள மத்திய மின் வேதியியல் ஆய்வுக் கழகத்தில் (செக்ரி) கெமிக்கல் மற்றும் எலெக்ட்ரோ கெமிக்கல் என்ஜினியரிங் பாடப்பிரிவுகளில் பி.டெக். படிக்கலாம்.

**கல்வித்தகுதிகள்**

12ல் 60 விழுக்காட்டிற்கு அதிகமான மதிப்பெண்களை பெற்றிருக்க வேண்டும். கணிதம், இயற்பியல், வேதியியல், படித்த மாணவர்கள் மட்டும் தகுதியுடையவர். இங்குள்ள படிப்புகளுக்கு நுழைவுத்தேர்வு மூலம் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். விண்வெளி, அனுசக்தி பாதுகாப்புத் துறை சம்பந்தமாக பல்வேறு ஆய்வுகள் நடைபெறுகின்றன. சென்னை, கொச்சி, மண்டபம் தூத்துக்குடி ஆகிய இடங்களில் செக்ரியின் விரிவாக்க மையங்கள் உள்ளன.

## சட்டம் உன் கையில்

12ல் நல்ல மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்கள் கூட சுயமாகச் சிந்தித்து தனக்கேற்ற கல்வி முறையைத் தேர்ந்தெடுப்பதில்லை. இத்தகைய காரணங்களால் மதிப்பிழந்து போன கல்விகளில் சட்டக் கல்வியும் ஒன்று. சட்டக் கல்வியை நாட்டிலேயே முதல் தரம் வாய்ந்ததாக மாற்றும் திட்டத்துடன் தமிழக அரசு புதிய ஐந்தாண்டு படிப்பான பி.ஏ.பி.எல் (ஹானர்ஸ்) என புது படிப்பை அறிமுகம் செய்துள்ளது. இதற்கென தனியாக நுழைவுத்தேர்வு நடைபெறவுள்ளது. வெளிநாட்டு சட்டங்கள் மற்றும் சர்வதேச சட்டங்களான பைசர் லா காப்புரிமைச் சட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய அதிநவீன சட்டப்படிப்பாக இப்படிப்பு இருக்கும்.

**தகுதிகள்**

இதில் சேர விரும்பும் மாணவர்கள் 12வது வகுப்பில் 70 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். 19 வயதுக்குள் இருப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். 21 வயதிற்குட்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 65 சதவீத மதிப்பெண்கள் எடுத்தாலே விண்ணப்பிக்கலாம். சட்டப் பல்கலைக்கழகத்தில் 40 மாணவர்களும் சட்டக்கல்லூரியில் 80 மாணவர்களும் பயில சீட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தீயணைப்பில் பொறியியல் கல்வி

உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் நாகபுரியில் தீயணைப்புப் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் பி.இ (ஃபயர்) பட்டப்படிப்பு உள்ளது.

**கல்வித்தகுதிகள்**

நாகபுரி பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி பட்டம் பெற்றிருக்க வேண்டும் (அல்லது) பி.எஸ்.சி வேதியியல் அல்லது கணிதத்தை துணை பாடமாகவும் படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பி.எஸ்.சி 3ம் ஆண்டுப் படிப்பின் இறுதி செமஸ்டரை எழுதியிருக்கும் மாணவர்களும் இப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம். 30 இடங்கள் அதிக பட்ச வயது வரம்பு 23 இதற்கான நுழைவுத் தேர்வ தில்லி மும்பை கொல்கத்தா சென்னை மற்றும் நாகபுரியில் நடைபெறும். பி.எஸ.ஃசி பாடத்திட்டத்திலிருந்து கேள்விகள் இடம்பெறும். மேலும் விபரங்களுக்கு :

The Director

National Fire Service College
Nagpur– 440 001

## ஐஐடி யில் சேர வேண்டுமா?

இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி எனப்படும் ஐஐடி க்கள் நமது நாட்டில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவில் புகழ் பெற்றுத் திகழ்கின்றன. இங்கு வழங்கப்படும் பட்டங்கள் சர்வதேச கிரடிட் கார்டு போன்றவை. எங்கும் அதற்கு மவுசு உண்டு. இதனாலேயே இக்கல்வி நிறுவனங்களில் சேர மாணவர்களிடம் கடும் போட்டி நிலவுகிறது. கடும் நுழைவுத்தேர்வு முறை மூலம் இக்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இங்கு படிக்கும் மாணவர்களில் கணிசமானவர்களுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் குறிப்பாக அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் கல்வி உதவித் தொகையுடன் மேற்படிப்பு படிக்க வாய்ப்பு கிடைத்து விடுகிறது. இங்கு படிக்கும் பெரும்பாலான மாணவர்களுக்கு பட்டம் பெறுவதற்கு முன்னதாகவே கேம்பன் இன்டர்வியூ மூலம் காலடியில் வேலை காத்துக் கிடக்கிறது. எனவே நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் தங்களது குழந்தைகளை ஐஐடியில் சேர்ப்பதற்காக 9ம் வகுப்பிலிருந்தே கோச்சிங் மூலம் ஆயத்தங்களில் இறங்கி விடுகின்றார்கள். மும்பை தில்லி கான்பூர் கரக்பூர் சென்னை வாரணாசியில் உள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (பனாரஸ் ஹிந்து யுனிவர்சிட்டி) தன்பாத்தில் உள்ள இந்தியன் ஸ்கூல் ஆஃப் மைன் ஆகிய கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்க்க பொது நுழைவுத் தேர்வ (IIT JEE) நடத்தப்படுகிறது. வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் இக்கல்வி நிறுவனங்களில் சேர தாசா (DASA – Direct Admission of Students Abroad) என்ற தனி அட்மிசூஷன் முறை உள்ளது. 12ம் வகுப்பு தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல், ஆகிய பாடப்பிரிவுகளை எடுத்துப் படித்த மாணவர்கள் ஐஐடி நுழைவுத் தேர்வு எழுத விண்ணப்பிக்கலாம். பயோ டெக்னாலஜி, பயோ கெமிக்கல் என்ஜினியரிங் பாடப்பிரிவுகளில் சேர விரும்புவோர் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களை எடுத்துப் படித்திருக்க வேண்டும். பி.ஆர்க். (ஆர்க்கிடக்சரி) பி.டெக் (டிசைன்) ஆகிய பட்டப் படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் நுழைவுத் தேர்வு எழுதுவதுடன் திறனறித் தேர்வையும் எழுத வேண்டும்.

## விளையாடி படியுங்கள்

விளையாட்டில் அதிக கவனம் செலுத்தியதால் நல்ல ஸீட்டைக் கோட்டை விட்டுவிட்டோமே என்று விளையாட்டு வீரர்களாகத் திகழும் மாணவர்கள் வருந்தத் தேவையில்லை. தமிழக அரசு ஸ்போர்ட்ஸ் கோட்டாவாக ஒதுக்கியுள்ள இடங்களைப் பாருங்கள், பயன்படுத்துங்கள்.

எம்.பி.பி.எஸ் - 3

பொறியியல் - 30

அண்ணா பல்கலைக்கழகம் - 3

கால்நடை அறிவியல் - 3

ஃபாரன்சிக் சயின்ஸ் - 1

சட்டம் (3 ஆண்டுகள்) – 6

சட்டம் (5 ஆண்டுகள்) – 7

வேளாண்மை – 1

சர்வதேச மாநில மாவட்ட அளவுகளில் விளையாட்டு வீரர் எந்த அளவுக்கு முன்னேறி பதக்கங்கள் வென்றிருக்கிறார் என்பதை பொறுத்தே இந்த இடங்கள் கிடைக்கும். விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்கள் P.Ed (Physical Education) படிப்பில் சேரலாம். இதன் மூலம் குறிப்பிட்ட விளையாட்டில் சிறப்புப் பயிற்சி எடுத்துக் கொள்ள முடியும். அதோடு மற்ற விளையாட்டுகளின் நுணுக்கங்களையும் தெரிந்து கொண்டு பயிற்சியாளராகவும் மாறலாம். சென்னை YMCA காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழக் சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகம் உட்பட சில கல்வி நிறுவனங்களில் இந்த படிப்பு உள்ளது.

## வனவியல் கல்லூரி

மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் பி.எஸ்.சி வனவியல் படிப்பு உள்ளது. தொழிற்கல்வி நுழைவுத்தேர்வு மூலம் 12வது மாணவர்கள் இப்படிப்பில் சேர்க்கப்படுகின்றனர். படிப்பு காலம் 4 ஆண்டுகள் 20 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

## விளையாட்டுப் பள்ளிகள் விடுதிகளில் சேர்ந்தும் படிக்கலாம்

தகுதி வாய்ந்த இளம் விளையாட்டு வீரர்களை இனம்கண்டு தேர்ந்தெடுத்து அவர்களை பட்டை தீட்டுவது தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தின் பணி. இதற்காக மாநிலத்தில் முக்கிய நகரங்களில் விளையாட்டுப் பள்ளிகளையும் விளையாட்டு விடுதிகளையும் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அமைத்துள்ளது. மாணவர்களுக்கும் மாணவியருக்கும் தனித்தனியே விளையாட்டு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

### மாணவர்களுக்கான விளையாட்டுப் பள்ளிகளும் பயிற்சியளிக்கப்படும் விளையாட்டுக்களும்

அண்ணா விளையாட்டு விடுதி

அண்ணா விளையாட்டு அரங்கம்

காஜாமலை – திருச்சி – 23

தடகளம், கால்பந்து, வாலிபால்

எம். ஜி. ஆர் விளையாட்டு விடுதி
எம். ஜி. ஆர் விளையாட்டு அரங்கம்
மதுரை – 2
தடகளம், கால்பந்து, கூடைப்பந்து

தேர்வு முறைகள்

- மாணவ மாணவியருக்கு மாவட்ட அளவில் உடல்திறன் தேர்வு நடைபெறும்.
- மாவட்ட அளவில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும் மாநில் அளவில் தேர்வு நடைபெறும் . விளையாட்டுத் திறன் அடிப்படையில் மட்டுமே தேர்வு நடைபெறும். மாவட்ட அளவில் நடைபெறும் உடல் திறன் தேர்வில் பந்து எறிதல், நின்று கொண்டு தாண்டுதல், கூடிட்டில் ஓட்டம், 300 மற்றும் 600 மீட்டர் ஓட்டம் ( 8-9 வது வகுப்பு மாணவர்களுக்கு) 800 மற்றும் 1000 மீட்டர் ஓட்டம் (11வது வகுப்பு மாணவர்களுக்கு)

மாநில அளவில் நடைபெறும் உடல்திறன் தேர்வில், அந்தந்த விளையாட்டில் உள்ள அனைத்து அம்சங்களையும் தனியாகவும் போட்டிச் சூழ்நிலைகளிலும் செய்து காட்ட வேண்டும். இவை அனைத்திலும் சிறப்பாகத் திறனை வெளிப்படுத்தும் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

## சுற்று வட்டார மாவட்ட விளையாட்டு அலுவலகங்களின் முகவரி

| | |
|---|---|
| சென்னை | நீச்சல்குளம் வளாகம்<br>30 ஈஸ்ட் கிளப் ரோடு<br>ஷெனாய் நகர்<br>சென்னை – 30 |
| மதுரை | எம். ஜி. ஆர் விளையாட்டு அரங்கம்<br>மதுரை- 2 |
| திண்டுக்கல் | மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் (பின்புறம்)<br>வேலுநாச்சியார் காம்ப்ளக்ஸ்<br>திண்டுக்கல் |
| சிவகங்கை | மருதுபாண்டி வளாகம்<br>சிவகங்கை |

| | |
|---|---|
| இராமநாதபுரம் | சீதக்காதி விளையாட்டு அரங்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>இராமநாதபுரம் |
| விருதுநகர் | திறந்த வெளி விளையாட்டு அரங்கம்<br>சாத்தூர் சாலை<br>விருதுநகர். |

அரசு விளையாட்டுப் பள்ளிகள் கல்லூரிகளைத் தவிர தனியார் அமைப்புகளும் பல்வேறு விளையாட்டுக்களுக்குப் பயிற்சிகள் அளிக்கின்றன. கிரிக்கெட் வேகப்பந்து வீச்சுக்கு சென்னையிலுள்ள எம்.ஆர்.எஃப் பேஸ் ஃபவுண்டேஷன் பயிற்சி அளிக்கிறது. சுழந்பந்து வீச்சுக்கு மேக் விளையாட்டு அறக்கட்டளை பயிற்சி அளிக்கிறது. டென்னிஸ் வீரர் ரமேஷ் கிருஷ்ணனின் மேட்ச் பாயிண்ட் அமைப்பு, டென்னிஸ் வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. தற்போதைய தேசிய டென்னிஸ் வீரர்களில் பலர் இங்கிருந்து உருவானவர்களே. வாலிபால் விளையாட்டுக்கு எழும்பூரில் உள்ள நெல்லை நண்பர்கள் விளையாட்டுக் கழகம் பயிற்சி அளிக்கிறது. முன்னாள் தேசிய சர்வதேச வீரர்கள் பலர் இக்கழகத்துக்கு வந்து பயிற்சி அளிக்கின்றனர்.

## மிலிட்டரி சயின்ஸ் பாதுகாப்புத் துறை படிப்புகள்

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முக்கியத் துறைகளுள் ஒன்று Department of Defence and Strategic Studies. எம்.ஏ.. எம்.ஃபில் மற்றும் பி.எச்.டி படிப்பகளை இத்துறை வழங்குகிறது. தேசியப் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள் சர்வதேச உறவுகள் குறித்து இப்பாடப்பிரிவில் விளக்கப்படுகிறது.

### படித்த பின் வாய்ப்பு

இந்த படிப்பு முடிக்கும் மாணவர்களில் பெரும்பகுதியினர் முப்படைகளில் பணியில் சேருகின்றனர் அல்லது காவல்துறை, துணை இராணுவப் படை, மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படைகளில் பணியில் சேருகின்றனர். அத்துடன் நட்சத்திர ஹோட்டல்கள் பெரிய நிறுவனங்கள் மற்றும் தொழிலகங்களில் பாதுகாப்பு அதிகாரிகளாகப் பணியாற்றும் வாய்ப்பும் இவர்களுக்கு எளிதில் கிடைக்கிறது. இந்தியாவில் 33 பல்கலைக் கழகங்களில் இப்பாடப் பிரிவு உள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் டிஃபன்ஸ் ஸ்டடீஸ் என்றும் வேறு சில பல்கலைக்கழகங்களில் மிலிட்டரி சயன்ஸ் என்றும் அழைக்கப்படுகின்றது. மிலிட்டரி சயின்ஸ் பிரிவைப் பொருத்தவரையில் போர்க்கள வாகனங்கள் உத்திகள் மற்றும் நவீன ஆயுதங்கள் அவற்றின் பயன்பாடுகள் குறித்துக் கற்பிக்கப்படுகின்றது. இருப்பினும் வழக்கமான கல்வி சம்பந்தப்பட்ட கூறுகள் இப்பிரிவில் இல்லாததால் டிஃபன்ஸ் ஆஃப் சய்ன்ஸ் என்ற புதிய பாடப்பிரிவு துவக்கப்பட்டது

### கல்வித்தகுதிகள்

இளநிலை அறிவியல் பட்டம் பெற்றவர்களும் சில கலைப் பிரிவுகளில் இளிநலைப் பட்டம் பெற்றவர்களும் எம்.ஏ டிஃபன்ஸ் ஸ்டடீஸ் பாடப்பிரிவில் சேருவதற்கு விண்ணப்பிக்கலாம்.

### எங்கு சேரலாம்

சென்னை குருநானக் வேலூர் ஊரிஸ் கல்லூரிகளில் இளநிலை டி∴பன்ஸ் ஸ்டடீஸ் பாடப்பிரிவு உள்ளது. உதகை வெலிங்டன் ராணுவக் கல்லூரியில் எம்.எஸ்.சி. டி∴பன்ஸ் அன்ட் ஸ்ட்ராடஜிக் ஸ்டடீஸ் பாடப்பிரிவு உள்ளது. முப்படைகளில் பணியாற்றுவோர், பாதுகாப்புத் துறையில் பணிபுரிவோர் மட்டுமே வெலிங்டன் ராணுவக் கல்லூரியில் சேர முடியும்.

## படிக்கலாம் நூலக அறிவியல்

குறைவான வேலைவாய்ப்புகள் கொண்ட படிப்பு என இப்படிப்பை சொல்வதுண்டு. இன்று அறிவை வளர்க்கும் கலாசாலைகளாக நூலகங்கள் திகழ்கின்றன. அரசு சார்ந்த நூலகங்கள் மட்டுமின்றி தனியார் நூலகங்களும் வேகமாக பரவி வருகின்ற நிலையில் இதற்கான வேலைவாய்ப்புகள் நிறைய இருந்துக் கொண்டிருக்கின்றது.

### கல்வித்தகுதிகள்

B.L.I.S. என்னும் நூலக அறிவியல் பட்டப்படிப்பில் சேர குறைந்த பட்சம் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ரெகுலர் முறையில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் சேர்ந்து படிக்கலாம். அஞ்சல் வழியிலும் படிக்கலாம். இப்பாடத்தில் பட்டமேற்படிப்புக்காக M.L.I.S. படிப்பும் உள்ளது. அதையும் நீங்கள் அஞ்சல் வழியில் படிக்க வாய்ப்பு உள்ளது. 12ம் வகுப்பு முடித்தவர்களுக்கு வசதியாக சான்றிதழ் படிப்புகள் பல தனியார் கல்வி நிறுவனங்களில் நடத்தப்படுகின்றன. பல பல்கலைக்கழகங்கள் அஞ்சல் வழியிலும் இவற்றை வழங்குகின்றன. சான்றிதழ் படிப்பு படித்தவர்கள் நூலகங்களில் உதவி நூலகராக பணியமர்த்தப்படுகின்றனர். சான்றிதழ் படிப்பை நீங்கள் பின்வரும் பல்கலைக் கழகங்களில் அஞ்சல் வழியில் படிக்கலாம்.

- அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
- சென்னைப் பல்கலைக்கழகம்
- மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்

சென்னைப் பல்கலைக்கழகம் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் இந்த துறையில் டிகிரி டிப்ளமோ தொழிற்கல்வி மற்றும் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இது தவிர திருச்சியிலுள்ள பிக்ஷப் ஹீபர் கல்லூரியில் B.Sc (Library Information) படிப்பு இருக்கிறது.

## ஆளை அசத்தும் ஆடை வடிவமைப்புக் கல்வி

டாக்டர், இன்ஜினியர், வக்கீல் என்கிற வரிசையில் ∴பேஷன் டிசைனரும் சமீபகாலமாகச் சேர்ந்திரக்கிறார். சுக்ஷ்மிதா சென்னில் தொடங்கி ப்ரியங்கா சோப்ரா வரை செய்த புண்ணியம் நம்ம ஊர் எம்ப்ராய்டரிக்கும் பருத்தித் துணிக்கும் இன்று சர்வதேச மார்க்கெட்டில் இருக்கிற மரியாதையே

தனி. லேட்டஸ்டாக மந்த்தராபேடி கிரிக்கெட் ரசிகர்களிடமும் ஐஸ்வர்யா ராய் கேன்ஸ் திரைப்பட விழாவிலும் இந்திய டிசைனர்களின் உடைகளுக்கு விளம்பரம் தேடித் தந்துள்ளனர். ஃபேஷன் தொழில் நுட்பம் கற்றுத் தருவதற்கு ஏகப்பட்ட கல்வி நிறுவனங்கள் உள்ளன. ஆனால் மத்திய ஜவுளித்துறையின் கீழ் நடத்தப்படுகிற நிஃப்டுக்கு (National Institute of Fashion Technology – NIFT) முதல் மரியாதை இன்ஜினியங்குக்கு ஒரு ஆர்.ஈ.சி. ஐஐடி மாதிரி பேஷனுக்கு ஒரு நிஃப்ட். ஆனால் இந்தியா முழுவதற்கும் ஏழே பயிற்சி மையங்கள் தான் உள்ளன. அதனால் மிகக் குறைந்த மாணவர்களே இங்கு படிக்க முடிகிற நிலை. இப்போது ஃபேஷன் டிசைனிங் கற்றுத் தருகிற தனியார் பயிற்சி மையங்கள் நிறைய வந்துள்ளன.

### பேஷன் டிசைனிங்கிற்கு அடிப்படைத் தேவை என்ன?

ரசனை தான் மிகமிக அடிப்படை ப்ளஸ் டூ முடித்திருக்க வேண்டும். ஓரளவுக்கு வரையத் தெரிந்திருக்க வேண்டும். இயல்பாகவே உடையில் என்னவெல்லாம் புதுமை படைக்கலாம் என்கிற கற்பனை இருக்க வேண்டும். நிறத்திலும் துணியிலும் நினைத்துப் பார்க்க முடியாத புதிய காம்பினேஷன்களை உருவாக்குதல் பேஷனில் மிகவும் முக்கியம்.

### படித்த பின் வாய்ப்பு

பல பயிற்சி நிறுவனங்களில் இறுதியாண்டு படிக்கிற போதே கேம்பஸ் இன்டர்வியு மூலம் வேலை கிடைத்து விடுகிறது. பேரிய துணிக்கடைகளில் டிஸைனராகப் பணியாற்றலாம். சொந்தமாக தொழில் வைக்கலாம். ஆள்பாதி, ஆடைபாதி என்ற காலமெல்லாம் ஓடிப் போய்விட்டது. இன்றைக்கு ஆடை தான் முழுவதும். கல்லூரி முதல் கல்யாணவீடு வரை எங்கு போனாலும் வேறு யாரும் உடுத்தியிராத புத்தம் புதிதான ஆடையை உடுத்த விரும்புகிறார்கள். அதனால் பொட்டிக்குகளைத் தேடி வருகிற கூட்டம் அதிகரித்திருக்கின்றது. இப்போதெல்லாம் வெறுமனே உடையை வடிவமைப்பதோடு டிஸைனரின் வேலை முடிந்து போவதில்லை. அந்த ஆடைகளுக்குப் பொருத்தமான நகைகள் கைப்பை செருப்பு என்று எல்லாவற்றிலும் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது. டி.வி. சேனல்கள், பெரிய கார்ப்பரேட் கம்பெனிகள் என்று பலரும் இப்போதெல்லாம் டிஸைனர்களை வேலைக்கு வைக்கிறார்கள்.

### ஃபேஷன் டிஸைனிங் கற்றுத் தருகிற சில கல்வி நிறுவனங்கள் :-

நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபேஷன் டெக்னாலஜி

National Institute of Technology

NIFT Campus

NIFT கேம்பஸ்

புழைய மகாபலிபுரம் ரோடு, தரமணி சென்னை – 600 113

நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபேஷன் டெக்னாலஜி

134 ரோஸ் வுட் ஆபிஸஸ்

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை – 600 034

பாரதிதாசன் கலை, அறிவியல் கல்லூரி, ஈரோடு – 638 116

பிஷப் அப்பாஸ்வாமி கலை, அறிவியல் கல்லூரி கோவை – 648 018

மகாராஜா பெண்கள் கல்லூரி, பெருந்துறை, ஈரோடு – 638 052

Apparel Training and Design Centre

No. 18-23 Ready made Garment Complex

Thiru. Vi. Ka. Industrial Estate

Guindy, Chennai 600 032, Phone 044-23312121

## தோள் கொடுக்கும் தோல் துறை

நீரின்றி அமையாது உலகு என்பது போல தோலின்றி அமையாது உடலும் எனக் கூறலாம். அந்த வகையில் நமது அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்து விட்ட ஒரு துறை தோல்துறை. தோலினால் ஆன செருப்பு, ஷூ , பர்ஸ், பெல்ட், கீ செயின், ஹான்ட் பேக், க்ளவுஸ், மேசை அலங்காரப் பொருட்கள் என்று பயன்படுத்தாதவர்கள் நம்மில் மிகக் குறைவு. அந்நியச் செலாவணி ஈட்டித்தருவதில் இந்தியாவில் ஏழாவது இடத்தில் இருப்பது தோல்துறை. இந்தியாவின் மற்றொரு சிறப்பு உலகில் ஆடு, மாடுகளின் எண்ணிக்கையில் இந்தியா நம்பர் 1. மக்கள் தொகையில் நம்பர் 2. தமிழகத்தில் மட்டுமே கிட்டத்தட்ட 822 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. சென்னை லெதர் சிட்டி என்று அழைக்கப்படுகிறது. 1000க்கும் மேற்பட்ட சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் தோல்பொருட்கள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டு, சென்னையில் பல இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளன. இத்தொழிற்சாலைகளில் இந்த படிப்பு படித்த மற்றும் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு இருக்கிறது. தோல் பொருட்கள் தயாரிப்பு சம்பந்தமான படிப்புக்கு சென்னையிலேயே 3 மிகச்சிறந்த கல்வி நிறுவனங்கள் (IILP, CLRI, CFTI) உள்ளன. IILP என்கிற இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் லெதர் ப்ராடக்ட்ஸ் நிறுவனம் அம்பத்தூரில் உள்ளது. இங்கு வழங்கப்படும் தொழிற்கல்வி படிப்பு பற்றிய விவரம் இதோ

10வது படித்தவர்களுக்கு:

மாஸ்டர் டெக்னிசியன் கோர்ஸ் (ஆறுமாத காலம்)

லெதர் புட்வேர்

லெதர் கார்மென்ட்ஸ்

லெதர் குட்ஸ்

ஸ்கில்ட் ஆபரேட்டர் கோர்ஸ் (ஆறுமாத காலம்)

பத்தாம் வகுப்பு தவறியவர்களுக்கு

ஜூ னியர் டெக்னிசியன் கோர்ஸ் (3மாத காலம்)

12ம் வகுப்பு தேறியவர்களுக்கு

டிப்ளமோ இன் லெதர் புட்வேர் (12 மாதங்கள்)

டிப்ளமோ இன் லெதர் குட்ஸ் (10 மாதங்கள்)

டிப்ளமோ இன் லெதர் கார்மென்ட்ஸ் (10 மாதங்கள்)

பட்டதாரிகளுக்கு

**P.G** டிப்ளமோ இன் புட்வேர் டெக்னாலஜி (15 மாதங்கள்)

இப்படிப்பு படிப்பதனால் என்ன பயன்?

IILP நிறுவனத்தின் மூலம் இப்பயிற்சிகள் படிப்பதனால் உயர்தர தொழிற்கல்வி, தனிப்பட்ட கவனம், வெளிநாட்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களில் பயிற்சி பெற வாய்ப்பு போன்ற பயன்கள் உள்ளன.

உடனடியாக உறுதியான வேலைவாய்ப்பு

தொழில் தொடங்க விரும்புவோருக்கு இலவச ஆலோசனை மற்றும் உதவி கிடைக்கின்றன உடனடி வேலை வாய்ப்பிற்கு அதிகமான வாய்ப்பு ஏற்படுத்தித் தருகின்றன.

பயிற்சி எப்போது தொடங்குகிறது?

ஒவ்வொரு மாதமும் ஜூலை மாதக் கடைசியில் இப்பயிற்சிகள் தொடங்க உள்ளது. மேலும் விபரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி

செயல் இயக்குநர் ரிஜிஸ்திரார்

இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் லெதர் ப்ராடக்ட்ஸ்

102 மங்களபுரம்

சிட்கோ இன்டஸ்ட்ரீஸ் எஸ்டேட்

அம்பத்தூர் சென்னை – 600 098

தொலைபேசி : 26250690, 26358192

## அழைக்கிறது கைத்தறி தொழில் நுட்பம்

கைத்தறி தொழில் நுட்பம் சார்ந்த படிப்புகளைக் கற்பவர்களுக்கு வேலை வாய்ப்புகள் எங்கும் நிறைந்துள்ளன. இத்துறையில் மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக இந்தியக் கைத்தறி தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (Indian Institute of Handloom Technology) செயல்படுகிறது. தமிழகத்தில் சேலம், உ.பி யில் வாரணாசி உள்ளிட்ட நான்கு இடங்களில் இப்பயிற்சியகம் செயல்படுகிறது. சேலத்தில் உள்ள கைத்தறி பயிற்சி நிறுவனம் 1960 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இங்கு கைத்தறித் தொழில் நுட்பத்தில் டிப்ளமோ, முதுநிலை டிப்ளமோ மற்றும் பல்வேறு குறுகிய காலப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

DIPLOMO IN HANDLOOM TECHNOLOGY

மூன்றாண்டுகளைக் கொண்ட இப்படிப்பில் 75 இடங்கள் உள்ளது. அதில் தமிழகத்திற்கு 23 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பில் சேர குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களில் 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆங்கில அறிவு அவசியமானதாகும். இப்படிப்பில் சேர வயது வரம்பு 15 முதல் 21 வரை ஆகும்.

உதவித் தொகை

இங்கு முதலாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகையாக ரூ.400ம் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு ரூ.450ம் இறுதியாண்டு படிப்போருக்கு ரூ.500ம் அளிக்கப்படும்.

Post Diplomo in Textile Chemistry :

கைத்தறி தொழில் நுட்பம் அல்லது ஜவுளித் தொழில் நுட்பத்தில் டிப்ளமோ படித்தவர்கள் அதிலும் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றவர்கள் இப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம். ஒன்றரை வருடங்கள் படிக்க வேண்டிய இப்படிப்பில் சேர பத்து இடங்களே ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் படிக்கும் மாணவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.300 வழங்கப்படுகிறது. இது தவிர

- Computer Colour Matching
- Textile Design & Pattern Making
- Textile Testing and Cloth Analysis

உள்ளிட்ட படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. முகவரி :

Indian Institute of Handloom of Technology

Pillai Nagar

Sale Phone – 262943

## வரைமுறையற்ற எதிர்காலத்திற்கு வடிவமைப்பாளர் ஆகலாமே

தொழிற்சாலைகளில் விற்பனை செய்து சந்தைக்கு வரும் பொருள்களுக்கு கட்டாயம் வடிவமைப்பு அவசியம். சிறிய சீப்பு முதல் பெரிய விமானம் வரை வடிவமைப்பு என்பது அவசியமான ஒன்று. இன்றைய சூழ்நிலையில் நுகர்வோர்களின் விருப்பம் வித்தியாசமாக உள்ளது. தொழிற்சாலைகளின் தயாரிப்பு பொருள்களை அதற்கான சிறப்பு பயிற்சி பெற்றவர்களை கொண்டு நேர்த்தியாக தயாரிக்கிறார்கள்.

### வடிவமைப்பின் நோக்கம்

கார்கள், இருசக்கர வாகனங்கள், கணிணிகள், வீட்டு உபயோகப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மருத்துவச் சாதனங்கள், அலுவலகப் பொருட்கள், பொழுது போக்கு சாதனங்கள் போன்ற பொருள்களை உருவாக்கவும் இன்று உபயோகத்தில் உள்ள பொருள்களை மாற்றியமைத்து நவீனமாக வடிவமைப்பதிலும் இத்துறையின் பங்கு அவசியமாகிறது. புதிய வடிவமைப்பினால் நுகர்வோரின் விருப்பமும், சந்தையில் புதுப்புதுப் பொருள்களை அறிமுகம் செய்வதே இத்துறையின் நோக்கமாகும்.

### எங்கே படிக்கலாம்

அகமதாபாத்தில் இயங்கிவரும் நேசுனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிசைன் என்ற பெயரில் இயங்கிவரும் நிறுவனமே இதில் புகழ் பெற்ற நிறுவனமாகும். இது நான்கு வருடம் படிக்க வேண்டிய படிப்பு. 10ம் வகுப்பு தேறிய மாணவர்கள் கூட இதற்கு விண்ணப்பிக்கலாம்.

### வயது வரம்பு

இப்படிப்பில் சேர அதிகபட்ச வயது வரம்பு 22. ஒவ்வொரு ஆண்டின் ஜூ ன் மாதம் முதல் தேதியை வைத்து வயது வரம்பை நிர்ணயம் செய்கிறார்கள். இதில் பழங்குடியினருக்கும் மற்றும் மலை வாழ் பிரிவினருக்கும் வயது வரம்பு மூன்று ஆண்டுகள் தளர்த்தப்படுகின்றது.

### எப்பொழுது விண்ணப்பிப்பது

இது பற்றிய விளம்பரம் பத்திரிக்கையில் வெளியிடப்படும். செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில்

அறிவிப்பு வெளியிடப்படலாம். அதை தொடர்ந்து ஜனவரி மாதத்தில் நுழைவுத் தேர்வு நடத்தப்படும். இந்த பாடப்பிரிவின் வகுப்பு ஜூ ன் மாதத்தில் ஆரம்பம் ஆகும். எனவே அடுத்த ஆண்டு படிக்க விரும்பினால் இந்த ஆண்டே அதற்காக ஆயத்தமாகி விட வேண்டும்.

### நுழைவுத் தேர்வு மற்றும் நேர்காணல்

நுழைவுத் தேர்வு அறிவியல், தொழில் நுட்பம், வடிவமைப்பு, திறனறிவு, கலாச்சாரம் போன்ற துறைகளில் கேள்விகளை கொண்டதாக இருக்கும். நுழைவுத் தேர்வில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்காணலில் உங்களின் ஆர்வம், மனோபாவம் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்படும். அடிப்படைத் தகுதி 10ம் வகுப்பு தான் என்றாலும் பட்டதாரி மாணவர்கள் அநேகர் போட்டிக்கு வருவதால் 10ம் வகுப்பு மாணவர்கள் அதிகம் தயார் செய்து நுழைவுத் தேர்வு மற்றும் நேர்காணலுக்கு ஆஜராக வேண்டும். இது பற்றி மேலும் விபரங்கள் அறிய:

Government College of Arts and Crafts (Autonomous)
Government of Tamilnadu
Department of Arts and Culture
Chennai – 600 028

Centre for Electronics Design and Technology of India
A-34 Industrial Area Phase VIII
Mohali – 160 059

இங்கிலாந்தில் படிப்பதற்கான விபரங்களைக் கொண்ட ஒரு பத்திரிக்கை வெளிவருகிறது. இது இங்கிலாந்து கல்வி பற்றிய அனைத்து விபரங்களையும் தருகிறது.

Sangeeta Rana
Editor Education UK
The British Counciling Service
The British Council – 17
Kasturiba Gandhi Mag, New Delhi.

## எளிதில் வேலை வாய்ப்பு இணைய காவலர்கள்

இன்றைய உலகில் கம்ப்யூட்டர் தவிர்க்க முடியாத முக்கியத்துவம் பெற்ற அங்கமாகிவிட்டது. நவீன விஞ்ஞானம் உலகலாவிய வியாபாரங்களையும் விபரங்களையும் கம்ப்யூட்டர் திரையிலேயே முடித்துவிடும் அளவு முன்னேறிவிட்டது. அதே சமயம் இந்த கணிணி அமைப்பு இணையதளங்களுக்குள் சென்று பெருங்குற்றத்தை செய்யக் கூடியவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. இணையத்தில் அத்துமீறி நுழைந்து தொழில் இரகசியங்களையும் முக்கிய தகவல்களையும் திருடிச் செல்வோரின் எண்ணிக்கை உலக நாடுகளைப் போல நமது இந்திய நாட்டிலும் கூடிக் கொண்டு போகிறது. இந்த குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு காவலர்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால் இத்துறையில் தேவைக்கேற்ப தேவையான காவலர்கள் கிடைப்பதில்லை. இது முற்றிலும் புதிய முறை என்பதால்

இன்னும் அதிகமான நபர்கள் இதில் நுழையவில்லை எனவே இந்த துறையை தற்பொழுது தேர்ந்தெடுத்தால் பிரகாசமான எதிர்காலம் உங்களுக்கு உண்டு என்பதில் வியப்பில்லை.

### எங்கே படிப்பது

இந்தியாவில் இரண்டே இடங்களில் தான் இதற்கான பயிற்சி நடத்தப்படுகிறது. பயிற்சி மையங்களில் ஒன்று புனே நகரில் உள்ளது. மற்றொன்று டெல்லியில் உள்ளது. அமெரிக்க பயிற்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தை பெற்ற இதை நடத்துகிறார்கள். இந்த பயிற்சியை முடித்த பிறகு தேர்வில் கலந்து கொள்ள வேண்டும்.

### எங்கே வேலைக்கு சேரலாம்

தேர்வில் வெற்றி பெற்ற பிறகு தான் இணைய காவலர் என்ற தகுதியைப் பெற முடியும். இதன் பிறகு காவலர் தேவைப்படும் எந்த ஒரு நிறுவனத்திலும் வேலைக்கு சேரலாம்.

### பயிற்சி காலம்

பயிற்சி காலம் 6 மாதங்கள் படிக்க வேண்டியிருக்கும் தேவைக்கேற்ப இந்த காலம் கூடுவதற்கும் வாய்ப்புள்ளது.

### தகுதிகள்

கம்ப்யூட்டர் பற்றிய அடிப்படை அறிவுடன் கம்ப்யூட்டரில் வேலை செய்யும் திறமையுள்ளவர்களுக்கு முன்னுரிமை. பட்டதாரிகள் எளிதில் சேர வாய்ப்புள்ளது. ஆங்கில அறிவு அதிகம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த துறை மிகவும் சவால்கள் நிறைந்த துறை என்பதால் அதிக துணிச்சலும் புத்திசாலித்தனமும் இத்துறை மாணவர்களுக்கு அதிகம் தேவைப்படுகின்றது. வெகு விரைவில் பதவி உயர்வும் அதிக வாய்ப்பும் இத்துறையில் கிடைக்க வாய்ப்புள்ளது. இத்துறை பற்றிய அதிக விபரம் பெற கீழ்க்கண்ட முகவரி :

Shri Satish Bhide
Centre Bureau of Investigation
Triner, Net Infosys Academy
Pune – Maharastra
India.

## அற்புதமான வாய்ப்புக்கு அனிமேஷன் படிக்கலாம்

அனிமேஷன் துறை இந்தியத் திறனாளிகளுக்கு சர்வதேச அளவில் மதிப்பு இருக்கிறது. குறிப்பாக பிரான்ஸ், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் இந்திய வல்லுநர்களுக்கு வலை வீசுகின்றன. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 250 மில்லியன் டாலர் மதிப்புள்ள அனிமேஷன் ஸ்பெஷல் எஃபெக்ட் பணிகளை இந்தியா தயாரித்து அளிக்கிறது. இன்னும் 5 ஆண்டுகளில் 1 பில்லியன் டாலர் அளவுக்கு இது உயரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பின்னனியில் அனிமேஷன் துறைக்கு உள்ள எதிர்காலத்தை பிரகாசமான வாய்ப்புகளையும் அறிந்து கொள்ளலாம். அனிமேஷன் மல்டி மீடியா என்றவுடன் திரைப்படத்துறையில் மட்டுமே இத்துறைக்கு வேலைவாய்ப்பு இருக்கும் என்று பலர் எண்ணுகின்றனர். ஆனால் இதன் எல்லை விரிந்தது. அட்வர்டைசிங் கம்பெனிகள், தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள், வீடியோ கிராபிக்ஸ் மையங்கள் ஆகியவற்றில் மிகப் பெரிய அளவில் இத்துறைக்கு வேலை வாய்ப்பு உள்ளது. மேலும் தீம் பார்க், அகழ்வாராய்ச்சி, ஆர்க்கிடெக்சர், வேதியியல், கல்வி, பொறியியல், தடய அறிவியல், விண்வெளி ஆய்வு ஆகிய துறைகளிலும்

அனிமேஷன் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

### எப்படி சேரலாம்

ஓவிய அறிவு, ஓவியக் கண்ணோட்டம், வண்ணம், வடிவமைப்புப் பற்றிய தெளிவு, அழகியல், கலைப்பூர்வமான மொழி ஆகியவற்றை வளர்த்துக் கொண்டால் உங்களுக்கு இத்துறை எளிதல் வசப்படும். +2 முடித்த பின்னர் அனிமேஷன் கல்விக்கு நேரடியாக நீங்கள் செல்லலாம். எனினும் இளங்கலையில் டிசைன் அல்லது நுண்கலைப் பட்டப்படிப்பு படித்து அதன்பின் அனிமேஷன் மல்டி மீடியா முதுகலைப் பயிற்சி பெற்றால் அதிக அளவில் வாய்ப்புகள் கிடைக்கும். சொந்தமாகவும் நீங்கள் தொழில் தொடங்க வசதியாக இருக்கும்.

### எவ்வளவு சம்பாதிக்கலாம்

புதிதாகப் பணிக்குச் சேரும் அனிமேஷன் பணியாளர்களுக்கு ரூ. 4 ஆயிரத்தில் இருந்து 6 ஆயிரம் வரை சம்பளம் கிடைக்கும். அனிமேஷன் சா∴ப்ட்வேர்களைப் பயன்படுத்தும் திறன் அதிகரிக்க அதிகரிக்க உங்கள் ஊதியத்தின் அளவும் உயரும். மாதம் 30 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம். உங்கள் திறனை வளர்த்து ∴ப்ரீலான்ஸ் அனிமேட்டராக வலம் வந்தால் இன்னும் கணிசமாக பொருளீட்ட முடியும். 30 விநாடிப் படங்களுக்கு அனிமேஷன் செய்து கொடுத்தாலே சுளையாக ரூ. 50 ஆயிரத்தில் இருந்து ரூ. 60 ஆயிரம் வரை கிடைக்கும். அனிமேஷன் மல்டி மீடியா கற்றுத் தர தற்போது பல்வேறு கல்வி நிறுவனங்கள் உள்ளன. ஆனால் தகுதியுள்ள தரமான நிறுவனம் தானா என்பதைக் கண்டறிந்து சேருவது முக்கியம். இளநிலை டிப்ளமோவில் சேர +2 படித்திருந்தால் போதும். வயது வரம்பு 22. எஸ். சி. எஸ். டி பிரிவினருக்கும் 25 வயது மொத்த இடம் 60. கிரா∴பிக் டிசைன் அனிமேஷன் பிலிம் டிசைன் பிலம் அண்ட் வீடியோ கம்யூனிகேஷனு் ஆகியவை இப்பிரிவில் கற்றுத்தரப்படும். முதுநிலை டிப்ளமோவில் சேர நுண்கலை டிசைன் போன்ற துறைகளில் இளநிலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். இப்பிரிவில் கிராபிக் டிசைன் அனிமேஷன் பிலம் டிசைன் பிலம் அண்ட் வீடியோ கம்யூனிகேசன் நியூ மீடியா சாப்ட்வேர் அண்ட் யூசர் இன்டர்∴பேஸ் டிசைன் இன்பர்மேசன் டிஜிட்டல் டிசைன் ஆகியவை கற்றுத்தரப்படுகின்றன. இது தவிர மும்பை ஐஐடியில் உள்ள இன்டஸ்ட்ரியல் டிசைன் சென்டர் திருவனந்தபுரத்தில் உள்ள டூன்ஸ் அனிமேஷன் பள்ளி மற்றும் சென்னையில் உள்ள பென்டாமீடியா கிராபிக்ஸ் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் அனிமேஷன் துறை தொடர்பான பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகின்றன. அகமதாபாத்தில் உள்ள தேசிய டிசைன் மையத்தில் இளநிலை டிசைன் பட்டயப் படிப்பும் (ஜிடிபிடி) முதுநிலை டிசைன் பட்டயப்படிப்பும் (பிஜிடிபிடி) கற்றுத் தரப்படுகின்றன.

## காட்டிலாக்கா அதிகாரியாகுங்கள்

மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பி. எஸ். சி வனவியல் படிப்பு உள்ளது. தொழிற்கல்வி நுழைவுத்தேர்வு மூலம் பிளஸ் டூ மாணவர்கள் இப்படிப்பில் சேர்க்கப்படுகின்றனர். படிப்புக் காலம் 4 ஆண்டுகள் 20 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இங்கு எம். எஸ். சி பி. எச். டி படிக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

## மண்ணிலிருந்தே விண்ணைப் படிக்கலாம் (Astronomy)

கணிதம் மற்றும் இயற்பியலில் ஆர்வம் உள்ளவரா நீங்கள்? இது உங்களுக்கு ஏற்ற படிப்பாகும்.

இது விண்ணைப் பற்றய படிப்பு அதாவது வானத்தில் உள்ள நட்சத்திரங்கள். கோளரங்கள் இவைகளின் செயல்பாடுகள் குறித்த படிப்பாகும். கற்பனை திறமையும் விடா முயற்சியும் தன்னம்பிக்கையுடனும் இத்துறையில் காலடி எடுத்து வைத்தால் மிகவும் சிறப்பான எதிகாலம் உண்டு. விண்கோள்களின் சுற்றுப்பாதை, ஈர்ப்புவிசை கடல் ஏற்ற இறக்கம், செயற்கை கோள்கள் போன்றவை இப்பிரிவில் வரும். இப்படிப்பின் பாடங்கள் நியூட்டனின் இயக்க விதிகளின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டிருக்கும். இது மிகவும் சவால்கள் நிறைந்த துறை என்பதனால் இந்த துறையில் மற்ற துறைகளைப் போன்று அதிகம் போட்டி கிடையாது.

### எங்கே வேலைக்கு சேரலாம்

வான் ஆராய்ச்சி நிலையங்களில் நல்ல வேலை வாய்ப்பு உண்டு. பல அறிவியல் பூங்காக்கள் இப்போது உருவாக்கப்படுகின்றன. இது போன்ற இடங்களில் வேலைக்கு சேர வாய்ப்புள்ளது. ராணுவம் போன்ற துறைகளில் விண்ணியலாரின் சேவை மிகவும் அதகிம்.

### இத்துறையில் உள்ள படிப்புகள்

இத்துறையில் பட்டயப்படிப்பு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்பு வரை உள்ளது. பொதுவாக இத்துறையில் பட்டப்படிப்பு சேர்வதற்கு 12 ல் கணிதம் இயற்பியல் போன்ற பாடங்களில் உள்ள மதிப்பெண் அதிகம் கவனிக்கப்படும். பட்டப்படிப்புகளில் மற்றும் பட்ட மேற்படிப்புகளில் விண் இயக்கவியல் பிரபஞ்ச இயல், விண் இயற்பியல் போன்ற தனித்தனி பாடப் பிரிவுகள் உள்ளன. இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இத்துறையின் புதுப்புது ஆராய்ச்சிகளுக்கு வாய்ப்பு வளர்ந்து கொண்டே போகிறது. மேலும் இத்துறையை சார்ந்த ஈரோ ஆசிய விண்ணியல் கழகம் என்ற அமைப்பு ஆண்டு தோறும் விண்ணியல் தொடர்பான போட்டி ஒன்றை நடத்துகிறது. இப்போட்டியில் வெற்றி பெறும் இளம் விஞ்ஞானிகளை பல உலக நாடுகளுக்கு அனுப்பி வைத்து விண்ணியல் குறித்த பயிற்சியை அளிக்கிறது.

### பாடப்பிரிவுகள்

இப்பிரிவு பயிற்றுவிக்கும் கல்வி நிறுவனங்களும் பாடமுறைகளும்

B.Sc.,

Madras University, Chepauk Chennai – 5

Planaterium Technology
Usmania Unviersity
Hyderabad, Andrapradesh – 500 007

Astrophysis ShivajiUniversity, Kolhpur – 416 004

M.Sc.,

Astronomy Swamy Ramanand Teerth
Marathwada University, Nanded – 431 603

Space Physics : Anthra University
Visakappatinum – 530 003, Andrapradesh.

S.S.L.C. படித்தவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்காமலேயே தனித் தேர்வர்களாக +2 பொது தேர்வை எழுத முடியும். S.S.L.C. தேரியதிலிருந்து இரு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு தனித் தேர்வுகள் மேல்நிலைப்பள்ளி பொது தேர்வை எழுத முடியும்..

## ரயில் போக்குவரத்துக் கல்வி நிறுவனம்

புதுடில்லியில் உள்ள ரயில் போ்கவுரத்துக் கல்வி நிறுவனத்தில் ரயில் போக்குவரத்து மற்றும் மேலாண்மையில் ஓராண்டு கால டிப்ளமோ படிக்கலாம். உதவி ஸ்டேஷன் மாஸ்டர் போன்ற பணிகளுக்கு இப்படிப்பு உதவியாக இருக்கும். பட்டம் பெற்றோர் இந்த டிப்ளமோ படிப்பில் சேரலாம். மே, ஜூன், மாதங்களில் இதற்கான அறிவிப்பு வெளியாகும். இதுபற்றிய விவரங்களை பெற அனுக வேண்டிய முகவரி :

Institute of Rail

Transport, Room no. 17,

Rail Bhavan

Raisina Road

New Delhi 110 001

## கம்பெனி செகரெட்டரி ஆக வேண்டுமா?

ஒரு நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது என்றால், அதற்கு அந்த கம்பெனியின் செகரட்டரியும் ஒரு முக்கிய காரணகர்த்தாவாக இருப்பார் என்பதில் மாற்றுக் கருத்து இருக்காது. நிறுவனத்தின் நிதி, கணக்கு, சட்டம், நிர்வாகம், பணியாளர் நிர்வாகம் ஆகிய அனைத்து பிரிவுகளோடும் தொடர்பு கொண்டிருப்பவர் இவர். கம்பெனி சட்ட நடைமுறைகளைப் பற்றி நிறுவனத்தின் இயக்குநர் குழுவுக்கு அறிவுறுத்தவது கம்பெனி செகரட்டரி பணிகளில் ஒன்று.

### எப்படி சேர்வது ?

தி இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செக்ரட்டரீஸ் ஆப் இந்தியா நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெற்று கம்பெனி செக்ரட்டரி ஆகலாம். இதன் தலைமையகம் டில்லியில் உள்ளது. சென்னை, மும்பை, கொல்கத்தா போன்ற நகரங்களில் மண்டல அலுவலகங்கள் உள்ளன.

### தேர்வு முறை :

ஜூன், டிசம்பர் மாதங்களில் தேர்வு நடைபெறுகிறது. ஜூன் மாத தேர்வு எழுத செப்படம்பர் மாதமும் டிசம்பரில் தேர்வு எழுத மார்ச் மாதமும் பதிவு கொள்ள வேண்டும்.

### படிப்பு முறை :

முதலில் பவுண்டேஷன் கோர்ஸில் தேர்ச்சி பெற வேண்டும். இதற்கு 12ம் வகுப்பு தகுதி. பிறகு

இண்டர்மீடியட் கோர்ஸ‌ க்கு பதிவு செய்ய வேண்டும். இது தேர்வு பெற்ற பிறகு இறுதியாக Final Courseல் பதிவு செய்யலாம். ஒரு நிறுவனத்திலோ அல்லது ஒரு கம்பெனியின் செக்ரட்டரியின் கீழோ 15 மாதங்கள் கட்டாய பயிற்சி பெற வேண்டும். இது தவிர Secular Model Training Programme பயிற்சியும் பெற வேண்டியது அவசியம். பொதுவாக இத்துறையில் சட்ட அறிவும் மற்றவர்களோடு நல்ல முறையில் தொடர்பு கொள்ளும் திறனும் வளர்த்து கொண்டால் எளிதில் சாதிக்கலாம். இது பற்றி மேல் அறிய :

No. 13 First Floor Eskay Building

74 Greams Road

Chennai – 06

Phone : 044-28295644

## தொலைத் தொடர்பு மேலாண்மை படிப்பு

இன்று வேகமாக வளர்ந்து வரும் துறைகளில் மிக முக்கியமான இடத்தில் இருப்பது தொலைத் தொடர்பு துறை. தொலைத் தொடர்புக்கு தொலைபேசி ஒன்றுதான் என்றிருந்த காலம் போய் மொபைல், பேக்ஸ், இண்டர்நெட், ஈமெயில், வீடியோ போன் என்று அதன் வகைகள் நீண்டு கொண்டே போகிறது. இந்த நிலையில் தகவல் தொடர்பை நிர்வகிப்பதற்கு திறமையான நிர்வாகிகள் தேவைப்படுகிறார்கள். இத்துறையில் அதற்கான பற்றாக்குறையும் உள்ளது. இது போன்ற தேவையை உணர்ந்து மஹாராஸ்டிராவில் உள்ள ஒரு நிறுவனம் இந்த மேலாண்மை படிப்பை சிறந்த உபயோகமுள்ள பாடத்திட்டத்துடன் கற்றுத்தருகிறது. அதே வேளையில் இந்த நிறுவனம் ஒரு முன்னாள் ராணுவ வீரரின் நிர்வாகத்தில் நடப்படுவதால் கிட்டத்தட்ட ராணுவ பயிற்சி நெறிமுறைகளுடனேயே இந்த கல்வி நிறுவனம் செயல்படுகின்றது. ஆனால் இப்படிப்பிற்கான எதிர்காலத்தை மனதில் கொண்டு இதை கற்றால் வெற்றி நிச்சயம்..

### கல்வித்தகுதி :

இளநிலை அறிவியியல், புள்ளியியல், மின்னணுவியல் பாடத்தை படித்திருக்க வேண்டும். வணிகவியல் துறை மாணவர்களும் தகுதியுடையவரே. இளநிலை தேர்வில் இறுதியாண்டு படிப்போரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பித்த பிறகு எழுத்துத் தேர்வும் இன்டர்வியும் உண்டு மொத்தம் 80 இடங்கள் மாத்திரம் உள்ளன. இந்த பயிற்சிக்கு அதிக போட்டியும் உள்ளது.

### வயது வரம்பு :

ஒவ்வொரு வருடத்தின் ஜ‌ லை மாதம் முதல் தேதியை கணக்கில் கொண்டு முப்பது வயதிற்குட்பட்டோர் இந்த பயிற்சியில் சேர தகுதியுடையோர்.

### விண்ணப்பிக்கும் முறை :

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் இரண்டாம் வாரத்திலிருந்து வழங்கப்படும் விண்ணப்பங்களை பெற ரூ. 350 வரைவோலை அல்லது காசோலையாக இயக்குநர் என்ற பெயரில் அனுப்பி வைக்கலாம். இந்த படிப்பு பற்றிய விபரங்களையும் அதன் எதிர்காலம் மற்றும் படிக்கும் காலத்தில் உள்ள வசதிகள்

குறித்து விபரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

Symbiosis Institute of Telecom Management

Senapatic Bapat Road

Pune – 411 004

Maharastra

Phone 530427

## பேக்கிங் டெக்னாலஜி

பொருள்களை கட்டி அனுப்புவதற்குமா படிப்பு? என்று புருவத்தை உயர்த்துபவர்களும் உண்டு. இன்று உலகம் கவர்ச்சி நிறைந்த புதுமையான பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது. முன்பெல்லாம் ஒரு பொருளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்ப அதை கட்டி அனுப்பி வைத்தாலே போதும் என்றிருந்தார்கள். கையில் கிடைத்த காகிதம், சணல், துணி போன்றவற்றை சுற்றி தான் பார்சல் அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் விஞ்ஞான மாற்றத்தின் விளைவாக அனுப்பும் பொருள்களை எப்படி பேக்கிங் செய்வது? பொருள்கள் நீண்ட காலம் கெடாமல் இருக்க எந்த மாதிரியான பொருள்களை கொண்டு பார்சல் செய்வது? உணவு பொருள்களை கிருமிகள் தாக்காது பேக்கிங் செய்து அனுப்புவது எப்படி? என்று சிந்தித்ததன் பயனாக வளர்ந்தது தான் இந்த துறை. உலக அளவில் ஒவ்வொரு நாடும் பலவகையான பொருள்களை உற்பத்தி செய்து உள்நாட்டிலும் அயல் நாட்டிலும் விற்பனை செய்து வருகின்றன. உலக சந்தையில் இந்த பொருள்களின் தரம் அதனுடைய பேக்கிங் முறையிலேயே நிர்ணயிக்கப்படுகிறதென்றால் அது மிகையன்று. எனவே உலக அளவில் வாய்ப்புள்ள இந்த படிப்பு பற்றி தெரிந்து கொள்வோம்.

### கல்வித்தகுதி :

இது இரண்டு ஆண்டுகள் படிக்கக்கூடிய படிப்பு. இதில் சேர இளநிலை பட்டதாரியாக இருக்க வேண்டும். இயற்பியல், வேதியியல், கணிதம், நுண் உயிரியல், மின்னணுவியல் போன்ற பாடங்களில் ஏதேனும் இரண்டு பாடங்களை துணைப்பாடமாக படித்திருக்க வேண்டும். மதிப்பெண்களை பொருத்த வரையில் 50 விழுக்காடு தான் குறைந்த பட்சம்.

### தேர்வு முறை :

விண்ணப்பத்திற்கு பிறகு நுழைவுத்தேர்வு உண்டு. நுழைவுத் தேர்வில் விருப்பப் பாடங்களை தேர்வு செய்து கொள்ளலாம். நுழைவுத் தேர்வு வெற்றிக்குப் பிறகு நேர்காணலில் ஆஜராக வேண்டும்.

### தேர்வு மையம் :

ஜூ லை மாதத்தில் நடைபெறும் தேர்வுக்கு மே மாதத்தில் விண்ணப்பிக்க வேண்டியிருக்கும். தேர்வு மையங்கள் சென்னை, மும்பை, கொல்கத்தா, டெல்லி போன்ற குறைந்த எண்ணிக்கையிலான நகரங்கள் மட்டுமே.

### பயிற்சி முறை :

பயிற்சி முறை மிகவும் சிறப்பாக இருக்கும். அதிகமான தொழிற்சாலைகளுக்கு அழைத்துச் சென்று

நேரில் செய்முறை விளக்க பயிற்சி தருவது இதன் சிறப்பு அம்சமாகும். இந்த துறையை தேர்ந்தெடுத்து படிக்கும் மாணவர்களுக்கு சொந்தமாக தொழில் தொடங்கும் வாய்ப்பும் அதிகம். இது பற்றிய தகவல் மேலும் அறிய :

Indian Institute of Packing, Plot – 169 Industrial Estate, Perungudi – Chennai – 96

Indian Institute of Packing, E-2 MIDC Area Post Box 9432

Chakala Andheri (East), Mumbai – 400 093

## தமிழ் படித்தாலும் தலை நிமிரலாம்

இன்றைய நவீன யுகத்தில் ஆங்கில படிப்பின் மீதுள்ள மோகம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. எத்தனையோ புதுப்புது படிப்புகள் வந்து கொண்டிருப்பதால் மாணவர்கள் அவைகளின் பக்கம் தங்கள் கவனங்களை முழுவதுமாக திருப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் நம் தமிழ்நாட்டில் தமிழ் படிப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. தமிழ் படித்து என்ன செய்யப் போகிறோம்? என்ன செய்ய முடியும் என்ற ஒரு கேள்வி தமிழை நினைத்தாலே வந்துவிட வாய்ப்புள்ளது. பொறியியல் படித்தவர்களே மாதம் 2000 ருபாய்க்கு வேலைக்கு இருக்கிறார்கள். இந்த நிலையில் தமிழை படித்துவிட்டு என்ன செய்ய என்ற யோசனை எழலாம்?

### தமிழ் என்றால் சும்மாவா:

எத்தனையோ ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் தமிழ் படித்தவர்கள். அரசு வேலை பெறுவதற்கு அடிப்படை தகுதி ஒரு பாடத்தில் பட்டம் தான். எந்த பாடம் என்று விதிவிலக்கு கிடையாது. பத்திரிக்கை துறையை எடுத்துக் கொண்டால் அங்கே தமிழ் படித்தவர்களுக்கு நிரம்ப மரியாதை உண்டு. நிருபர் பிழை திருத்துபவர் போன்ற வேலைகளில் தமிழ் படித்தவர்கள் தான் இருக்கின்றார்கள். பல்கலைக்கழகத்தில் தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு சுற்றுவாவியல் கோவில் கலை கல்வெட்டியல் நாடகவியல் போன்ற பாடப்பிரிவுகள் உள்ளதால், படிப்பிற்கு பிறகு அந்தந்த துறைகளில் பணியாற்ற வாய்ப்புள்ளது. ஆவணக் கோப்பு கோவில்கள் போன்ற இடங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம். சின்னத்திரையின் வர்ணனையாளர்கள், செய்தி வாசிப்பவர்கள் போன்றவர்களில் தமிழ் படித்தவர்களுக்கு மதிப்பு அதிகம் என்பதை மறுக்க முடியாது. இன்றைய காலங்களில் உள்ளூர் சானல்களும் பெருகிவிட்டதை மனதில் கொள்ள வேண்டும். பட்டிமன்ற பேச்சாளர்கள் நடுவர்கள் போன்ற துறைகளில் தமிழ் படித்தவர்களே அதிக கை தட்டுகளை பெறுகின்றனர். ஆக என்ன படித்தாலும் அதை திறம்பட படித்தால் அதில் முன்னேறலாம் அந்த துறையையும் முன்னேற்றலாம். இப்போ தமிழ் படிக்க தயாரா?

-

-

## செவிலியர் படிப்பு செழுமையான வாய்ப்பு

மனிதாபிமானம், பொறுமை, சகிப்புத்தன்மை இவைகள் மீது உங்களுக்கு நாட்டம் இருந்தால் இந்த தொழிற்படிப்பு உங்களுக்கு ஆத்ம திருப்தி தரும் என்பதில் ஐயமில்லை. ஆம் செவிலியர் படிப்பு இது இன்றைய காலகட்டத்தில் அதிகமான வாய்ப்புகளைக் கொண்ட படிப்பு. காரணம் நம்

நாட்டில் மிகச் சிறிய ஊரிலும் கூட சகல வசதிகளுடன் கூடிய மருத்துவமனை அதிகம் உள்ளன. எனவே இத்துறையில் ஒரு நம்பிக்கையுடன் படிக்கலாம். சென்னையில் உள்ள அரசு செவிலியர் கல்லூரி.. சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு MGR மருத்துவ பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படுகிறது. இங்கு 4 வகையான படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன.

B.Sc., நர்சிங் 4ஆண்டுகள் 25 இடங்கள்

இளங்கலை செவிலியப்

பட்டப்படிப்பு 2ஆண்டுகள் டிப்ளமோவைப் பெற்று

செவிலியர்களுக்கான 40 இடங்கள்

B.Sc., நர்சிங் முடித்தவர்களுக்கு ஒரு ஆண்டு 20 இடங்கள்

சிறப்புப் பயிற்சி

M.Sc., நர்சிங் 2 ஆண்டுகள்

நான்கு ஆண்டுகள் இளங்கலை நர்சிங் படிப்பை முடித்த மாணவியருக்கு தனியார் மருத்துவமனைகளிலோ மத்திய மாநில அரசு மருத்துவமனைகளிலோ செவிலியராக பணியில் சேரலாம். மேலும் செவிலியர் பயிற்சி பள்ளிகளில் ஆசிரியராக பணி புரியலாம். வெளிநாடுகளில் செவிலியராகவும் ஆய்வு கூட உதவியாளராகவும் பணிபுரிய வாய்ப்புள்ளது. அதிகமான மாணவர்களுக்கு ஆண்களுக்கு செவிலியர் படிப்பு உள்ளதா? என்ற சந்தேசம் உள்ளது. உண்மை என்னவென்றால் பெண்களைக் காட்டிலும் ஆண்களுக்கான செவிலியர் படிப்பில் தான் அதிக வேலை வாய்ப்பு உள்ளது. ஆண் செவிலியருக்கு தனியார் மனநலக் காப்பகத்திலும் ஆப்பரேஷன் தியேட்டர்களிலும் சிறைச் சாலைகளிலும் செவிலியப் பணியாளராக பணிபுரிய வாய்ப்புள்ளது.

## அருமையான வாய்ப்பு தரும் பிளாஸ்டிக் தொழில் நுட்பம் படிக்கலாம்

பிளாஸ்டிக் தொடர்பான பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகளை அளிக்கிறது சென்னை கிண்டியில் உள்ள மத்திய பிளாஸ்டிக் பொறியியல் தொழில் நுட்ப நிறுவனம் (Central Institute of Plastics Technology) இங்கே பிளாஸ்டிக் பொருட்களை உருவாக்குவது அவற்றின் தரத்தைச் சோதனை செய்வது, தொழிற்சாலைகளில் பயன்பாட்டுக்கு எற்ப அச்சு மாதிரிகளைக் குறைந்த செலவில் செய்து தருவது, தொழிலகங்கள் உற்பத்தி செய்யும் பிளாஸ்டிக்குகளின் தரத்தைச் சோதனை செய்வது போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு அளிக்கப்படும் பிளாஸ்டிக் தொழில்நுட்பம் தொடர்பான படிப்புகள் :

PG Diploma in Plastics Engineering (ஓராண்டு காலம்)

PG Diploma in Plastics Processing and Testing (ஒன்றரை ஆண்டு காலம்)

Post Diploma in Plastics Mould Design (ஓராண்டு காலம்)

Post Diploma in Machine Technology (ஓராண்டு காலம்)

PG Diploma in Plastics Mould Technology (மூன்றாண்டு காலம்)

PG Diploma in Plastics Mould Making Technicians (இரண்டாண்டு காலம்)

Master of Technology in Plastics Engineering (இரண்டாண்டுகள் பயிற்சி)

இதைத்தவிரவும் Identification and Selection of Plastics Materials for Product Development, Injection Moulding Process, Quality Control, Testing and Evaluation of Plastics Materials and Products, Plastics Product and Mould Design Processing Methods and application of Plastics ஆகிய குறுகிய கால பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Deputy Director,

CIPET

Chennai 600 032

Phone : 044-23342371

E-Mail : cipetchnn@eth.net, Website : www.cipetindia.com

## விமான துறையில் டிரா∴பிக் அசிஸ்டென்ட்ஸ்

விமான துறையில் சேர என்று முடிவு செய்துவிட்டால் பைலட்டாகவோ ஏர்ஹோஸ்டஸாகவோ தான் ஆக வேண்டும் என்பதில்லை. இதே துறையில் மேலும் சில வாய்ப்புகள் உள்ளன. இவர்களின் வேலை விமானத்தில் அல்ல. விமானத்தில் செல்லும் பயணிகளுக்கு டிக்கட் வழங்குவது ரத்து செய்வது தொலைபேசி வழி சேவை கார்கோ புக்கிங் டெலிவரி போன்றவை.

### கல்வித்தகுதி

இந்த வேலையில் சேர பொதுவாக 10ம் வகுப்பு படித்திருந்தால் போதுமானது. பட்டப்படிப்பு முடித்திருந்தால் வாய்ப்பு அதிகம். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிந்திருப்பது அவசியம்.

### அயரா முயற்சி

(IATA) International Air Transport Association ஜெனிவாவில் உள்ள இந்த சங்கம் நடத்தும் ஏர்டிக்கட்டிங் பயிற்சியை முடித்திருந்தால் அது கூடுதல் தகுதி. இது ஓராண்டு கால பயிற்சி. பாடப் புத்தகங்களை ஜெனிவாவிலிருந்து பெற்று படிக்கலாம். ஏப்ரல் செப்டம்பர் மாதங்களில் தேர்வு நடைபெறும். இந்த பயிற்சியில் சேர ஏர் இந்தியா அலுவலகங்களை அனுகலாம்.

### எங்கே சேரலாம்

சென்னை எத்திராஜ் சாலையில் இந்த அலுவலகம் உள்ளது. அங்கு தேவையான தகவல்களை பெறலாம். இது தவிர சென்னை அண்ணா மேம்பாலம் அருகே பார்சன் காம்ப்ளக்ஸில் ஒரு தனியார் பயிற்சி பள்ளியும் உள்ளது. இப்பயிற்சிக்கு ஆங்கிலம் அவசியம் ஹிந்தி கூடுதல் தகுதி. தற்சமயம் இந்திய விமானத் துறை தவிர பல்வேறு மாநிலங்களில் தனியார் உள்நாட்டு விமான போக்குவரத்துச் சேவை தொடங்கப்பட்டு வருகிறது. இது இந்த துறையில் அதிகமான வேலை வாய்ப்பிற்கு வழி வகுக்கும்.

## பாலிடெக்னிக்குகளும் பயிற்றுவிக்கும் முக்கிய பாடங்களும்

தமிழ்நாட்டில் 200க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக்குகள் உள்ளன. அங்கு பல்வேறு பொறியியல் தொழில் நுட்பப் பாடப்பிரிவுகளில் மூன்று ஆண்டு டிப்ளமோ படிக்கலாம். எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். அந்தந்தப் பாலிடெக்னிக்குகளுக்குத் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும். பாலிடெக்னிக்குகளில் டிப்ளமோ படித்த மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் இரண்டாம் ஆண்டில் சேர்ந்து (Lateral Entry) படிக்க வாய்ப்பு உள்ளது. தொழில் அனுபவம் பெற்ற டிப்ளமோ மாணவர்கள் மாலை நேர பி.ஈ. வகுப்புகளில் சேரலாம். சில முக்கியத்துவம் வாய்ந்த டிப்ளமோ படிப்புகளும் அவை பயிற்றுவிக்கப்படும் கல்வி நிறுவனங்களின் முகவரியும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கெமிக்கல் டெக்னாலஜி இராணிபேட் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி

தெங்கயந்தங்கள் வேலூர் (District)

முருகா பாலிடெக்னிக்

மேலூர் போஸ்ட்

கல்லக்குறிச்சி (Taluk)

விழுப்புரம் - 605602

மீன் தொழில் நுட்பம் டிரஸ்ட் இன்ஸ்டிடியூட் ஆஃப் பிகூஷ்கூஷரீஸ்

டெக்னாலஜி, திருத்தனி – திருவள்ளுவர் (District)

Man Mad Fire Technology தியாகராயர் பாலிடெக்னிக், சேலம் - 636 005

Petro Chemical Technology ஈரோடு இன்ஸ்டிடியூட் கெமிக்கல் டெக்னாலஜி

நடுப்பட்டி விஜய மங்களம், பெருந்துறை - ஈரோடு.

அன்னை J.K.K.S Ammal பாலிடெக்னிக், தூாக்கனை செக்கன் பாளையம்
பெருந்துறை - ஈரோடு

Petrolium Technology நந்தா பாலிடெக்னிக், 33, திண்டுக்கல் வில்லேஜ்
ஈரோடு – 638502

MRL பாலிடெக்னிக், மணலி சென்னை – 68

Textile Technology லதா மாதவன் பாலிடெக்னிக்
கிடாரிபட்டி மேலூர் தாலுகா மதுரை மாவட்டம்
தி கரூர் பாலிடெக்னிக், கரூர் - 639002

Instrument Technology Dr. தர்மாம்பாள் அரசு மகளிர் பாலிடெக்னிக்
துரமணி சென்னை – 113

Polymer Technology அருள்மிகு செந்தில் ஆண்டவர் பாலிடெக்னிக்
தென்காசி திருநெல்வேலி மாவட்டம்

Ceramic Technology இன்ஸ்டிடியூட் ஆ.ஃப் செராமிக் டெக்னாலஜி
விருத்தாச்சலம் கூடலூார் 626002

Plastic Engineering V.S.V நாடார் பாலிடெக்னிக்
விருதுநகர் 626001

Pulp and Paper Technology சேசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, திருச்சி - 10

பல்கலைக்கழகங்களிலும் விரிவுரையாளர்களாகப் பணி புரிவதற்கும் ஜூனியர் ரிசர்ச் ஃபெலோசுஷிப் பெறுவதற்கும் பல்கலைக்கழக மானியக் குழு நடத்தும் நெட் எனப்படும் தேசியத் தகுதிக்ககான தேர்வை எழுத வேண்டும். கல்லூரி விரிவுரையாளர்களாகப் பணிபுரிவதற்கு மாநில அளவிலான விரிவுரையாளர் தகுதிக்கான தேர்வை ஸ்லெட் அல்லது நெட் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றால் கல்லூரி விரிவுரையாளர் ஆக முடியாது. இத்தேர்வுகள் பற்றிய விவரம் :

**சி.எஸ்.ஐ.ஆர் - யூஜிஸி தேர்வு :**

பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் அறிவியல் பாடப்பிரிவுகளில் விரிவுரையாளர்கள் ஆவதற்கும் ஜூனியர் ரிசர்ச் ஃபெலோசுஷிப் பெறுவதற்கும் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கவுன்சில் (சி.எஸ.ஐ.ஆர்) பல்கலைக் கழக மானியக்குழு (யு.ஜி.சி) ஆகியவை இணைந்து நடத்தும் தேசியத் தகுதிக்கான தேர்வில் (NET – Nationality Eligibility Test) தேர்ச்ச பெற வேண்டும். விரிவுரையாளராவதற்கு மட்டும் அல்லது இரண்டுக்கும் சேர்த்து விண்ணப்பிக்கலாம். இரண்டுக்கும் தனித்தனியே தகுதிப் பட்டியல் வெளியிடப்படும். இத்தேர்வில் வெற்றி பெறுபவர்கள் விரிவுரையாளர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியுடையவர்கள் ஆவார். ஜூனியர் ரிசர்ச் ஃபெலோசுஷிப் தேர்வில் தேர்ச்சிப் பெற்று கல்வி நிறுவனங்களில் ஆய்வுப் பணியை மேற்கொள்பவர்களுக்கு மாதம் ரூ. 5 ஆயிரம் வீதம் உதவித் தொகை கிடைக்கும். கெமிக்கல் சயின்ஸ், எர்த் சயின்ஸ், லைப் சயின்ஸ், அர்த்தமேட்டிக்கல் சயின்ஸ், பிசிக்கல் சயின்ஸ் ஆகிய பாடப்பிரிவுகளில் இத்தேர்வுகள் நடத்தப்படும். எம்.எஸ்.சி அல்லது நிகரான பட்டப்படிப்பில் குறைந்த பட்சம் 55 சதவீதம் (பொது மற்றும் பின்தங்கிய வகுப்பினர்) மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கான குறைந்த பட்ச மதிப்பெண்கள் 50 சதவீதம் எம்.எஸ்.சி இறுதியாண்டு தேர்வு எழுத இருப்பவர்களும் இத்தேர்வு எழுத விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்களும் இறுதியாண்டுத் தேர்வில் உரிய அளவுக்கு மதிப்பெண் பெற வேண்டும். பல்கலைக்கழக மானியக்குழு ஃபெலோசுஷிப் மற்றும் விரிவுரையாளர் தகுதி குறித்த விவரங்களுக்கு :

**Education Officer**

**University Grants Commission**

**South Campus, Bento Juarez Marg**

**Dhaula Kaun**

**New Delhi 110021**

இத்தேர்வுகள் நடைபெறும் விவரங்கள் குறித்து எம்ப்ளாய்மென்ட் நியூஸ் இதழில் விரிவான விளம்பரம் வெளியிடப்படும். இத்தேர்வுக்கான பாடத்திட்டம், தகுதி, வயது வரம்பு, எப்படி விண்ணப்பிப்பது என்பது போன்ற பல்வேறு விவரங்களை அதன் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

## அனைவரும் பயில சிறந்த வாய்ப்பு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாட்டில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தில் சுய உதவி வழியாக மகளிர் வலிமை பெறுதல், உணவு சத்துணவு தோல் பதனிடும் தொழிலாளர்களுக்குத் தொழிற்கல்வி ஆகிய சான்றிதழ் படிப்புகளும் குழந்தைப் பராமரிப்பு மற்றும்

கல்வியியல் டிப்ளமோ ஆகிய படிப்புகளும் தொடங்கப்பட்டுள்ளது. பி.எட், எம்.எட், படிப்பகளைத் தொடங்கவும் இந்தப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. இந்த பல்கலைக்ழகத்தின் கல்வி மையத்தின் கிளை இளையான்குடியிலும் உள்ளது. இந்த பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

அ.இ.அல் அமீன் பி.ஏ

கண்மனி குரூப்ஸ்

காமராஜர் ரோடு

இளையான்குடி.

## ஃபார்மஸி கல்வி பயின்று மருந்தாளுநர்கள் ஆகுங்கள்

இன்றைய நிலவரப்படி ஃபார்மஸி படிப்பிற்கு தமிழகத்தில் இரண்டு வருட பட்டபயப் படிப்பிற்கான 28 கல்லூரிகளும் 4 வருட பட்டப்படிப்பிற்கான 35 கல்லூரிகளும் இயக்கத்தில் இருக்கின்றன. 9 கல்லூரிகளில் முதுநிலைப் பட்டப்படிப்பிற்கான (பி.ஜி) பல்வேறு பாடப்பிரிவுகளும் 5 கல்லூரிகளில் ஆராய்ச்சி படிப்பிற்கான பல்வேறு பாடப்பிரிவுகளும் 5 கல்லூரிகளில் ஆராய்ச்சி பி.எச்.டி படிப்பிற்கான வசதிகளும் உள்ளது. இக்கல்வி கற்பதற்கு தேவையான அடிப்படைத் தகுதி 12ம் வகுப்பு ஆகும். ( **First and Second Group**) பட்டப்படிப்பிற்கான 50 சதவித இடங்கள் அரசு நுழைவுத் தேர்வு மூலம் நிரப்பப்படுகின்றது. தகுதியின் அடிப்படையில் தேர்வாகும் இம்மாணவர்களுக்கு கல்வியாண்டு கட்டணங்களும் மிக மிக குறைவாகும். சுய நிதி கல்லூரிகளின் கட்டண வரம்பும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2000-2001 கல்வியாண்டு முதல் டிப்ளமோ முடித்த மாணவர்கள் சேர விரும்பினால் நேரிடையாக இரண்டாம் வருடத்தில் சேர்ந்து படிக்கலாம். இக்கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு அவரவர் தகுதிக்கேற்ப டிப்ளமோ டாக்டரேட் முவ்வேறுபட்ட முன்னேறும் துறைகளில் வேலை வாய்ப்பு காத்திருக்கிறது. மருந்து உற்பத்தியை உள்ளடக்கிய தொழில் நுட்ப துறை இன்டஸ்ட்ரியல் பார்மஸி மற்றும் கல்வி பார்மசி எடுகேகூஷன் துறைகளுக்கு தேவையான அளவிற்கு இன்றும் மருந்தாளுநர்கள் ஃபார்மஸிஸ்ட் உருவாக்கப்படவில்லை என்பதே கல்வியாளர்களின் கணிப்பு. அமெரிக்கா யுனைடட் கிங்டம் மற்றும் ஐரோப்பிய அரபு நாடுகளில் ஃபார்மசி என்ற சொல் டாக்டர் இன்ஜினியர் போன்ற சமுதாய அந்தஸ்துள்ளது. இந்தியாவில் இக்கல்வி மருத்துவத்துறையின் மெடிக்கல் டைரக்டரேட் கட்டுப்பாட்டிலும் தொழில் நுட்ப துறையின் (**AICTE**) கண்காணிப்பிலும் இயங்கி வருகிறது. சுயதொழில் துவங்குவதால் என்ற பார்வையில் பார்மஸி கல்வி படித்தவர்கள் மிகக்குறைந்த பட்ச முதலீடு முதல் அதிக பட்ச முதலீடு வரை அவரவர் சக்திக்கேற்ப சுய தொழிலில் ஈடுபடும் வாய்ப்பை இக்கல்வி தருகின்றது. இந்த படிப்பில் சேர்வதற்கான சந்தர்ப்பம் ஒவ்வொரு ஆண்டும் ஜூ லை மாத இறுதி வரை இருக்கின்றது. சிறுபாண்மை பிரிவினருக்கான சலுகைகளுடன் இயங்கி வரும் கல்லூரிகளின் முகவரி

### For D. Pharm Only

Texcity College of Para Medical Sciences

Podanur Main Road

Coimbatore – 641023

Tel : 0422 410854

Al-Ameen College of Allied Medical Sciences

Sonai Nagar

Madurai 625 020

For Degree Only

A.J. College of Pharmacy

Medavakkam Road

Solinganallur

Chennai 19

A.M.S. College of Pharmaceutical Sciences

No. 813 Mount Road

Chennai 2

மகளிர் மட்டும் பத்திரிக்கை துறையில் ஆர்வமுள்ள மாணவிகளுக்கு சென்னை ஓ. எம். பி வைஷ்ணவ கல்லூரியில் பி. ஏ ஜர்னலிஸம் என்ற படிப்பு புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. இப்படிப்பு முதலில் முதகலைப் பட்டப்படிப்பில் மட்டுமே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது இளநிலைப் பட்டத்திலும் தொடங்கப்பட்டு விட்டதால் இது பத்திரிக்கை துறையில் ஆர்வமுடைய மாணவிகளுக்கு சிற்நத வரப்பிரசாதமாகும்.

## நூலகம் தகவல் அறிவியல்

நமது நாட்டில் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் கல்வி 90 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டது. இந்தியாவின் நூலகத் தந்தை பேராசிரியர் ரங்கநாதனின் பெரும் முயற்சியால் பட்டப்படிப்பிற்கு பிறகு படிப்பதற்கான நூலகவியல் ஓராண்டு பட்டப்படிப்பு சென்னை பல்கலைக்கழகத்தில் 1937ல் தொடங்கப்பட்டது. இதுவே முன்மாதிரி கல்வியமைப்பாக நாடு

முழுவதும் ஏற்கப்பட்டு நூலகம் மற்றும் தகவல் அறிவியல் கல்வி மிகவும் விரிந்துள்ளது.

### கல்வித்தகுதிகள்

நூலகம் மற்றும் தகவல் அறிவியல் கல்வி 80க்கும் மேற்பட்ட கல்வி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படுகின்றது. **C.Lib. CLIS** என்ற நூலகவியல் சான்றிதழ் படிப்பில் 12வது தேர்ச்சி பெற்றவர்கள் சேரலாம். படிப்பு காலம் ஆறு மாதங்கள் **C.Lib. SC CLIS** என்ற நூலகவியல் இளநிலைப் பட்டப்படிப்பில் சேர குறைந்தபட்ச கல்வித்தகுதி பட்டப்படிப்பு காலம் ஓராண்டு. **M.Li.Sc** என்ற நூலகவியல் மற்றும் தகவல் அறிவியல் முதுநிலைப் படிப்பில் சேர முதுநிலைப் பட்டம் அல்லது நூலகவியலில் இளநிலைப் பட்டம் தேவை. படிப்புக்காலம் ஓராண்டு. நூலக மற்றும் தகவல் அறிவியலில் எம்.எஸ்.ஸி. எம்.ஃபில் பி.எச்.டி படிக்கவும் பல பல்கலைக்கழகங்களில் வாய்ப்புகள் உள்ளன.

### அஞ்சல்வழிக் கல்வி

தொலைதூரக் கல்வி மூலமும் சில பல்கலைக்கழகங்கள் நூலகவியல் தொடர்பான சான்றிதழ் பட்ட முதுநிலைப் பட்டப் படிப்புகளை நடத்துகின்றன. திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் நூலகவியலில் இளநிலைப் பட்டப்படிப்பு உள்ளது.

### படித்தபின் வாய்ப்பு

பொது நூலகங்கள் பல்கலைக்கழக நூலகங்கள் பள்ளி மற்றும் கல்லூரி நூலகங்கள் ஆய்வக நிறுவன நூலகங்கள் போன்றவற்றில் நூலகவியல் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன. நூலகவியல் துறை ஆசிரியர் பணிகளிலும் சேரலாம். நூலகங்களில் கணிப்பொறியின் பயன்பாடு வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில் நூலக அறிவியலும் அதற்கு தேவையான கணிப்பொறி மற்றும் தகவல் தொழில் நுட்பம் ஆகியவற்றையும் தெரிந்து கொள்வது வேலை வாய்ப்பை மேலும் பிரகாசமாக்கும்.

## நீங்களும் ஐ.ஏ.எஸ் ஆகலாம்

ஐ.ஏ.எஸ் பணியில் சேர்வது இன்றைக்கும் லட்சோப லட்சம் இந்திய இளைஞர்களின் கனவுகளில் ஒன்றாக விளங்கி வருகின்றது. மிகக் குறைந்த வயதில் பெரிய பொறுப்புகளை வகிக்கக்கூடிய வாய்ப்பு மக்களுக்கு நேரிடையாக பயனளிக்கக்கூடிய சேவைகளை செய்ய முடிதல் அரசின் கொள்கை முடிவுகள் மற்றும் திட்டங்களை தீட்டி செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தல் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து பலவகையான மாறுபட்ட பொறுப்புகளை வகிக்கக்கூடிய வாய்ப்பு என்று இதற்கு பல காரணங்கள் உண்டு. சமீப காலங்களில் இப்படிப்பு பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருப்பதாலும் இக்கல்வி பற்றிய விபரங்களை அதிகம் தெரியாததாலும் மாணவர்கள் இந்தத் தேர்வுக்கு எதைப் படிப்பது எப்படிப் படிப்பது என்று புரியாமல் திணறுகின்றனர். ஐ.ஏ.எஸ் பற்றிய தவறான கருத்துக்கள் நீங்கி சரியான வழிகாட்டுதல்கள் கிடைத்தால் நமது மாணவர்கள் முன் போல் உற்சாகமாய் பெருமளவில் பங்கு பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பார்கள் என்பது நிச்சயம்.

### தேர்வுத்திட்டம்

ஐ. ஏ. எஸ் தேர்வின் அசல் பெயர் சிவில் சர்வீஸ் தேர்வு என்பது. (**Civil Service Examination**) இத்தேர்வு இந்திய ஆட்சிப்பணிக்கு மட்டுமல்ல இந்திய வெளியுறவுப் பணி, இந்திய போலிஸ் பணி, இன்கம் டேக்ஸ், கஸ்டம்ஸ் மற்றும் சென்ட்ரல் எக்ஸைஸ் போன்ற மத்திய அரசின் **Group A** பணிகள் உள்ளிட்ட மொத்தம் 26 பணிகளுக்கானது. தேர்வில் மாணவர்கள் பெறும் ரேங்கையும் விருப்பத்தையும் பொறுத்து பணிகள் ஒதுக்கீடு செய்யப்படும். இத்தேர்வு மூன்று நிலைகளைக் கொண்டது. முதலாவது **Prelims** என்று செல்லமாக அழைக்கப்படும் முதல் கட்டத் தேர்வு (**Preliminary Examination**) மொத்தம் சுமார் ஒன்றறை லட்சம் பேர் இதற்கு விண்ணப்பிக்கின்றனர். அவர்களிலிருந்து முதலாவதாக வரும் சுமார் பத்தாயிரம் பேர் அடுத்தகட்டமான **Main** தேர்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள். முதல் கட்டத் தேர்வு முழுவதும் **Multiple Choice** கேள்விகள் என்ற **Objective type** முறையிலானது. இது இரண்டு தாள்களைக் கொண்டது. முதலாவது **General Studies** என்று அழைக்கப்படும் பொது அறிவுத் தேர்வு 150 மர்க்குக்கானது. இரண்டாவது நம்முடைய விருப்பப்பாடத்தில் தேர்வு. இதற்கு விண்ணப்பப்படிவத்தில் இருக்கும் 22 பாடங்களிலிருந்து ஏதாவது ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் டிகிரியில் படித்த பாடத்தைத் தான் எடுக்க வேண்டும் என்பதில்லை. இந்தத் தாளுக்கு 300 மதிப்பெண்கள்: ஆக முதல் கட்டத் தேர்வுக்கு மொத்தமாக 450 மதிப்பெண்கள் பொதுவாக 300க்கு மேல் எடுத்தாலும் தேர்ச்சி பெற்றுவிடலாம். இது ஒரு வடிகட்டும் தேர்வு மட்டுமே. இதில் எடுக்கப்படும் மதிப்பெண்கள் இறுதி ரேங்கிற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. முதல் கட்டத் தேர்வு பெற்றவர்கள் மெயின் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள். இது இரண்டு நிலைகளைக் கொண்டது. முதலாவது எழுத்துத் தேர்வு இது ஒன்பது தாள்களைக் கொண்டது. இந்திய மொழிகளில் ஒன்று. ஆங்கிலம், கட்டுரை ஒன்று பொது அறிவியல் இரண்டு தாள்கள் மற்றும் இரண்டு விருப்பப் பாடங்களில் தலா இரண்டு தாள்கள் வீதம் மொத்தம் 9 தேர்வுகள் இவற்றில் இந்திய மொழியிலும் ஆங்கிலத்திலும் குறைந்த பட்ச மதிப்பெண் எடுத்தாலே போதும். மொழித்தாள்களில் எடுககும் மதிப்பபெண்கள் ரேங்குக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது. மற்ற 7 தாள்களில் பெறும் மொத்த மதிபபெண்களின் அடிப்படையில் முதல் சுமார் 1500 பேர் வரை நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். ஒவ்வொரு தாளுக்கும் 300 மதிப்பெண்கள். கட்டுரைக்கு 200 மதிப்பெண்கள். 300க்கு 175 மதிப்பெண்களுக்கு மேல் என்பது மிக நல்ல மதிப்பெண்களாகக் கருதப்படுகிறது. மொழித்தேர்வுகள் இரண்டும் ப்ளஸ் டூ தகுதியளவில் இருக்கும் விருப்பப் பாடங்கள் இரண்டை கொடுக்கப்பட்டுள்ள பல பாடங்களிலிருந்து தேர்வு செய்து விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும். இவற்றில் கேள்விகள் டிகிரி அளவினதாக இருக்கும். கேள்விகள் கன்வென்ஷனல் டைப் எனப்படும் எஸ்ஸே கேள்வி வடிவத்தில் இருக்கும் பொது அறிவுத் தாள்களும் அப்படியே.

### நேர்முகத் தேர்வு

தேர்வு எழுதும் சுமார் 10 ஆயிரம் பேர்களிலிருந்து முதலாவதாக வரும் 1500 பேர் வரை அடுத்த கட்டமான இன்டர்வியூக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வுக்கு மொத்தம் 300 மதிப்பெண்கள். நேர்முகத் தேர்வு பற்றி பல தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. சிவில் சர்வீஸஸ் தேர்வில் இன்டர்வியூ என்பது நம்முடைய புத்தக அறிவைச் சோதிப்பதற்கு அல்ல. நம்முடைய உள்ள வளர்ச்சியைச் சோதிப்பதற்கு நம்மைச் சுற்றி நடப்பவற்றில் நமக்கு எவ்வளவு ஆர்வம் உள்ளது என்று அறிவதற்கு நடத்தப்படுகிறது. இறுதியாக ஏழு தாள்களில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் மற்றும் நேர்முகத் தேர்வு மதிப்பெண்கள் ஆகிய இரண்டையும் சேர்த்து முன்னனி

வருபவர்கள் காலியிருக்கும் இடங்களுக்குத் தக்கவாறு தேர்வு செய்யப்படுவார்கள்.

### முதல் நிலைத் தேர்வுக்கான விருப்பப் பாடங்கள் :

கீழ்க்கண்ட பாடங்களில் ஏதேனும் ஒரு பாடம் எடுக்கப்பட வேண்டும். விவசாயம், கால்நடை, அறிவியல், தாவரவியல், குடிமைப் பொறியியல், வணிகவியல், பொருளாதாரம், மின்சாரப் பொறியியல், புவியியல், கனிமவியல், இந்திய வரலாறு, சட்டம், கணிதம், இயந்திரப் பொறியியல், மருத்துவ அறிவியல், தத்துவம், இயற்பியல், அரசியல் அறிவியல், உளவியல், பொது நிர்வாகம், சமூகவியல், புள்ளியியல், விலங்கியல்.

### எத்தனை தடவை எழுதலாம்

சிவில் சர்வீஸஸ் தேர்வுகளில் பொதுவாக ஒவ்வொருவரும் நான்கு முயற்சிகள் செய்யலாம். அட்டவணை இனத்தாருக்கு இதில் சலுகை உண்டு.

### ஐ.ஏ.எஸ் தேர்வு பற்றிய தவறான கருத்துக்கள் :

ஐ.ஏ.எஸ் தேர்வுக்கு ஏராளமான ஆங்கில அறிவு தேவையென்பது பெரும்பாலானோருடைய எண்ணம். ஆனால் உண்மையில் அப்படியல்ல. ஆங்கிலம் மற்றும் இந்திய மொழித் தேர்வில் பாஸ்மார்க் எடுத்தாலே போதும். இத்தாள்கள் மிக எளிமையானவை. நம் காப்பியங்களையும் செய்யுள்களையும் கரைத்துக் குடித்திருக்க வேண்டும். என்று தேவையில்லை. எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் போதும். சொல்லப் போனால் இந்தத் தாள்களுக்கு எந்த விதமான தயாரிப்பும் தேவையில்லை. பொது அறிவு மற்றும் விருப்பப்பாடங்கள் ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. இந்தத் தேர்வு பற்றிய மற்றொரு தவறான கருத்து இந்தத் தேர்வுக்குப் பொது அறிவு புத்தகங்களையும் கலைக் களஞ்சிய விஷயங்களையும் விரல் நுனியில் வைத்திருக்க வேண்டும் என்பது.. இது பல மாணவர்களைப் பயம் கொள்ளச் செய்கிறது. சிவில் சர்வீஸ் தேர்வில் பொது அறிவு ஒரு முக்கிய அங்கமாக இருந்தாலும் அதில் கேட்கப்படும் கேள்விகள், ஒரு டிகிரி முடித்த மாணவனுக்கு தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்களில் எந்த அளவிற்கு தெரிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதோ அந்த அளவில் தான் இருக்கும். எனவே இந்த உண்மை நிலைகளை உணர்ந்து அதிக முயற்சி செய்தால் கண்டிப்பாக நமது சுற்று வட்டார மாணவர்களில் பலர் உறுதியாக ஐ.ஏ.எஸ் ஆகலாம். முயற்சி செய்வோமா?